CONNEMARA PUBLIC LIBRARY
5 - JUL 1961
MADRAS

# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



மாணிக்கவாசகர் திருவிடைமருதூர்

மாலை 3] பிலவ, ஆனி ஜூலை 1961 [மணி 10

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு




திருப்புகலூரில் திருமுறை மாநாடு

## பொருளடக்கம்

1. திருவாசகத்தேன்
2. சிவஞான போதம்
3. திருமெய்யம்
4. பந்தமும் வீடும்
5. திருக்கோகர்ணம்
6. கிடங்கில் திருத்திண்டீச்சரக் கல்வெட்டு வரலாறு
7. கூடலழகர் கோயில்
8. நவதிருப்பதி அநுபவம்
9. திருநாவுக்கரசு நாயனார்
10. நால்வர் நான்மணி மாலை
11. கன்னியாகுமரி மாவட்ட அறநிலையச் சட்டம்

# திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து.

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்

நுங்கம்பாக்கம் ஹைரோடு,

சென்னை-6

திருக்கோயில்
திங்கள் வெளியீடு
மாலை 3] பிலவ ஆனி - ஜூலை 1961 [மணி 10

# திருவாசகத் தேன்

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் [சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமலினிப்பதுவே
—வடலூர் இராமலிங்க சுவாமிகள்

இந்த ஆனி மாதம் மகநட்சத்திரத்தன்று (18-6-61) நாடெங்கிலும் மாணிக்கவாசக சுவாமிகளின் திருநாள் கொண்டாடப்பெற்றது. ஆதலின் அவர் இயற்றியருளிய திருவாசகத்தைப்பற்றி ஒரு சிறிது நினைவுகூர்தல் ஏற்புடைத்தாம். திருவாசகம் தேன், தெவிட்டாததேன், ஆனந்தத்தேன், பேரானந்தத்தேன். திருவாசகத்தின் சிறப்பை,

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

என்ற பாடல் தெரிவிக்கிறது. மணிவாசகப் பெருந்தகையாரின் பிறப்பு, தாய் தந்தையர், மனைவாழ்க்கை, காலம் இவைகளைப்பற்றி ஆராய்ச்சியாளர்களிடைப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. எதைப்பற்றியும் முடிவு கண்டனர் என்று சொல்வதற்கில்லை. காலம் முதலியனபற்றிய ஆராய்ச்சி ஒரளவுக்கு வேண்டப்படுவதென்றாலும் அதிலேயே காலத்தைக் கழித்து மூலத்தை—திருவாசகத்தை—நழுவவிடுவது நன்றன்று. "மிக்கு சோதிக்க வேண்டாம்" என்பர் ஞானசம்பந்தர். ஏன்? வாதவூரடிகளே "ஆயக்கடவன் நானேதான் என்னதோ இங்கதிகாரம்" என்று சொல்வதை நாம் மறக்கொணாது. நூலாராய்ச்சியை விடுத்து கால ஆராய்ச்சியில் காலம் கழிப்பவர்களுக்கு மேல் நாட்டு அறிஞர் ஒருவர் அறிவுரை கூறியது ஈண்டு குறிக்கத்தக்கது. "பக்தர்கள் அதிக தூபம்போட்டு இறைவன் திருவுருவத்தை மறைக்கிறார்கள்" (Burning too much of incense at the altar and hiding the deity) என்பது அவர் கூற்று.

வடலூர் இராமலிங்க அடிகள் திருவாசகத்தில் மிகவும் ஈடுபட்டவர் என்பது தலைப்பில் கொடுக்கப்பட்ட பாடலிலிருந்து விளங்கும். எங்கேனும் யாரேனும் திருவாசகம் பாடக்கேட்டால் அவர் அப்படியே கண்ணீரும் கம்பலையுமாக நின்றுவிடுவாராம்' புகழ்பெற்ற நாடகமான "மனோன்மணீயம்" என்ற நூலை எழுதிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் திருவாசகத்தை இறைவன் திருக்கரத்தால் எழுதிய தன் காரணத்தைப் புலமை நயம்படக் கூறியிருக்கிறார். ஊழிக்காலத்தே உலகமெல்லாம் அழிந்த பின் தன்னுடைய தனிமையைப் போக்குவதற்காக ஆண்டவன் தன் கையில் திருவாசகத்தை வைத்திருக்கிறார் என்கிறார் மேல்நாட்டுப் பேரறிஞரான டாக்டர் போப் என்பார் தமிழிலிருந்து மூன்று நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவை திருக்குறள், நாலடியார், திருவாசகம் என்பன. முன்னிரண்டும் நீதி நூல்கள், பின்னையது சமயநூல். ஆதலின் வேற்று மதத்தினரான அவருக்குத் திருவாசகத்தின் பேரிலுள்ள ஈடுபாடு நன்கு விளங்குகிறது. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" என்றும், "முனிமொழியும் கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒரு வாசகம் என்றுணர்" என்றும் சொல்லப்பெற்றிருப்

பதினின்றும் திருவாசகத்தின் பெருமையை அறிந்து கொள்ளலாம்.

பதியிலக்கணம், பாச இலக்கணம், பசு இலக்கணம், பசுத்தன்மை கெடுதல், குருவின் உபகாரம், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், அடியாரிலக்கணம் முதலிய பல சைவசித்தாந்த சாத்திரக் கருத்துக்கள் அடிகளாரின் திருவாக்கில் காணலாம். இயத்கைப் பொருள்களில், கடவுள் வடிவத்தையும், சிவசத்தி மயமாக விளங்கும் பெற்றியையும் உவமித்துக் கூறுதலில் அவர் மிகவும் வல்லுநர். பூவல்லி, அம்மானை, பொன்னூசல் முதலிய விளையாடல்களில் கடவுளுணர்ச்சியைப் புகுத்திப் புகட்டுவதிலும் அவருக்கு நிகர் எவருமில்லை.

ஐந்தெழுத்து, ஓங்காரம் இம்மந்திரங்களின் பெருமையை விதந்தோதியுள்ளார். "ஓங்காரத்துட்பொருளை," "உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற," "நமச்சிவாய வாழ்க," "நானேயோ தவஞ் செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன்" என்பவை அவருடைய திருவாக்குகள்.

அவருடைய பாடல்களில் அவருடைய வரலாற்றுக்குரிய அகச்சான்றுகள் பலவுள்ளன. இறைவன் குருவாய் வந்து அருள்புரிந்ததை "எங்கள் திருப்பெருந்துறை மேவினன் காயத்துள் அமுதூற வூற நீ கண்டுகொள் என்று காட்டிய சேயமாமலர்ச் சேவடி" என்பதிலும், தில்லையில் இறைவனோடு இரண்டறக் கலந்ததை "நாயினேனை நலமலிதில்லையுள் கோலமார்தரு பொதுவினில் வருகென" என்பதிலும், சிவபெருமான் அவருக்காகக் குதிரைச் சேவகனாக வந்ததை "நரியைக் குதிரைப் பரியாக்கி...மதுரையெல்லாம் பிச்சதேற்றும்" என்பதிலும், ஆண்டவன் அவர் பொருட்டுப் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டதை "மண்சுமந்து கூலி கொண்டு அக்கோவான் மொத்துண்டு புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்" என்பதிலும் குறிப்பிட்டிருக்கின்றார்.

வாதவூர்முனிவர் அழுதடி அடைந்த அன்பர் என்பதைப் பின்வரும் அடிகளால் அறியலாம்:—

"வினையேன் அழுதாலுன்னைப் பெறலாமே"

"அழுகேன் நின்பா லன்பாய்"

"மயல் கொண்டழு கேனே"

"அழுமது வேயன்றி மற்றென் செய்கேன்."

திருப்படையெழுச்சி என்ற பகுதியிலுள்ள இரண்டு பாடல்களில் பிரபஞ்சப் போரைப்பற்றிக் கூறியிருப்பது நாம் தெரிந்து மகிழத்தக்கது.

ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படைவாராமே.

இப்பாடலில் சேனைக்குரிய அங்கங்கள் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. ஞானமாகியவாள், பிரணவநாதமான பறை, விடையாகிய ஊர்தி, மதியாகிய குடை, திருநீருகிய கவசம் என்பன அவை.

தொண்டர்காள் தூசிசெல்லீர்
பக்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறல் யோகிகளே
பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே
கடைக்கூழை சென்மின்கள்
அண்டர்நா டாள்வோம் நாம்
அல்லற்படை வாராமே.

இத்திருப்பாடலில் சேனை அணிவகுத்துச் செல்லும் அழகைக் கூறுகிறார், முன்னணியில் (Van guard) தொண்டர்கள், பக்கங்களில் பக்தர்கள், நடுவில் பெரும்படையாக (Main army) யோகிகள், பின்னணியில் (Rear guard) சித்தர்கள் இவ்வாறு அமைத்துப் பாடியிருப்பது நமக்குப் பேரின்பத்தைத் தருகின்றது.

சிவபெருமான் தூயபேரின்ப வடிவினனாய்த் தமக்கும் அத்தகைய இன்பத்தை யிடையருது நல்குகின்றான் என்பதை அவருடைய தித்திக்கும் மணி வார்த்தைகளால் அறிந்துகொள்ளலாம்.

"தேனைப்பாலைக் கன்னலின் தெளியை"

"தேனே யமுதே கரும்பின் தெளிவே"

"தேனையும் பாலையுங் கன்னலையு
மமுதத்தையு மொத்
தூனையு மென்பினையு முருக்கா
நின்ற வொண்மையனே"

"ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்"

"ஞானக் கரும்பின் றெளியைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தா
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல கோனை"

"பாலு மமுதமுந் தேனுடனும் பராபரமாய்"

"நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் னமுதை."

மேற்கண்ட அடிகளாரின் திருவாக்குகளினின்றும் திருவாசகம் தெவிட்டாத தேன் என்று உணர்ந்துகொள்கிறோம் அல்லவா?

# சிவஞான போதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.,L.T,]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

*முதற் சூத்திரம்: மூன்றும் அதிகரணம்:-*

உலகம் தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழில் உடையது என்பது முதல் அதிகரணத்தால் பெறப்பட்ட முடிவு.

உலகம் உள்பொருள் என்றும், அது தோன்றி ஒடுங்குதல் செயற்கையாதலால், அத் தொழிற்பாட்டை அதற்கு உறுவிக்கும் ஒரு முதல்வன் உளன் என்பதும், அம்முதல்வன் உலகம் முழுவதும் ஒடுக்குவோன் எனப்படும் மாசங்காரக் கடவுளே ஆவன் என்பதும் இரண்டாம் அதிகரணத்தாற் போந்த முடிபுகள்.

இனி, அச்சங்கார கருத்தா ஒருவனே முதற் கடவுள் ஆவன்; பிறர் யாரும் ஆகார் என்பதை மூன்றும் அதிகரணமாக வைத்துக் கூறுகின்றார் ஆசிரியர் (மெய்கண்டதேவர்):-

சூத்திரப்பகுதி: "அந்தம் ஆதி என்மனார் புலவர் என்பது. இஃது 'அந்தமே ஆதி' எனப் பிரிநிலை ஏகாரம் விரித்து உரைத்துக் கொள்ளப்படும்.

வார்த்திகம்: இனி, சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின்வழி யல்லது சுதந்தரமின்றி நிற்றலான், சங்காரமே முதல் என்றது.

1. இங்குத் தன்னாற் கூறப்படும் பொருள்: மாசங்காரக் கடவுள் ஒருவனே எல்லா முதன்மையும் உள்ள முதற்கடவுள்; இடைநிலை வினைமுதல்களாகக் காணப்படும் நம்மனோரும், காரணக்கடவுளர் என நூல்களுட் கூறப்பட்டுக் கேட்கப்படும் திருமால், இந்திரன், பிரமன் முதலிய கடவுளரும், வீடுபேறு எய்தும் முத்தரும் முதல்வன் வயப்பட்டு ஒழுகும் அடியர் ஆவதன்றி முதல்வர் ஆகார்.

2. ஐயப்பாடு: முதற்கடவுள் ஒருவனோ அன்றிப் பலரோ என்பது.

3. பிறர் கூறும் பக்கம்

உலகத்தில் ஒவ்வொரு பொருளை ஆக்கிப் பயன் கொள்ளுவோரைக் கண்கூடாகக் காண்கின்றோம்: ஆதலால் அச்செயல்களுக்கு நேரே காணப்படும் அவ்வவரே வினைமுதல் ஆவர். இவர்கள் செயலையும் முற்றழிப்புக் கடவுளது செயலே ஆம் எனின், அது காண்டல் விரோதம் ஆகும்; மேலும், இவர்களை எடுத்துக் காட்டி முதற்கடவுள் ஒருவன் உளன் எனக் கூறிய கருதலளவையும் போலியாய் முடியும். ஏனெனின், ஒரு பொருளே உவமானமும் உவமேயமும் ஆகாது அல்லவா? ஆதலால் முற்றழிப்புக் கடவுளும் வினைமுதல்; உலகத்துள்ளோரும் அவரவர் செய்யும் செயல்மட்டில் வினைமுதல்கள் ஆவர் என்பதே பொருத்தம். இதனால் அன்றோ சீவசிருட்டி, சிவசிருட்டி எனச் சிருட்டி (ஆக்கப்பாடு) இரண்டாக வைத்து உலகத்தில் வழங்கப்படுகிறது?

மேலும், ஒரு பெரிய அணையைக் கட்டுவோர் பல நூற்றுக்கணக்கில் கூடிச் செய்வோராகவே உளர்; ஒருவரே செய்கிறார் என்பது இல்லை. வேதத்துள்ளும் திருமால், பிரமன், இந்திரன், அங்கி முதலாகப் பலரும் காரணர்கள் எனக் கூறப்படுகின்றனர்.

இன்னும், முத்தியில் ஆன்மாச் சிவசமம் என்பது ஆகம நூற்றுணிபு. "சேர்வார் தாமே தானாகச் செயுமவன்" என்பது திருஞானசம்பந்தர் வாய்மொழி. ஆதலால் அந்தமே ஆதி (சங்காரக் கடவுளே முதற்கடவுள்) எனச் சிறப்பு வகையால் வரையறுத்துக் கூறுதல் பொருந்தாது. இவ்வாறு கூறுவோர் அநேகசுவர வாதிகள் எனப்படுப்பவர். அநேக ஈசுவர வாதம்—கடவுளர் பலர் என்னும் பேச்சு.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:

அணை முதலியவற்றைக் கட்டுவோர் பலர் ஆயினும் அவர் அனைவரும் ஒருவன்

ஏவல் வழி நின்றே செய்வர். சங்காரக் கடவுள் ஒருவனே தன் வயம் (சுதந்தரம்) உடையோன். உயிர்களாகிய நம்மனோர் அனைவரும் அவிச்சையால் கட்டுண்டு தன் வயம் என்பது சிறிதுமின்றி, அறிந்தோ அறியாமலோ, முதல்வன் ஆணைவழி நிற்ப வரே ஆவர். நாம் எல்லோரும் சுட்டுணர் வையே உடையோம். அதாவது, ஒரு பொருளை அறியலுறும்போது அதன் ஒவ் வொரு பெற்றியை மட்டும் விளங்கக் கண்டு அது அதில் அழுந்தி நின்று, அதன்பிற பெற் றிகளையும் பிறபொருள்களையும் அதே காலத் தில் அறிய மாட்டாது, அறியாமையின் அழுந்தும் இயல்புடையோம். இப்படி உயிர் கள் எல்லாம் சுட்டுணர்வு உடையவை ஆத லால், இவை அனைத்தும் முதல்வன் வயப் பட்டு நடக்கும் இயல்பின; தன் வயம் உடை யவையல்ல என்பது உணரத்தக்கது. மாசங் காரக் கடவுள் சுட்டுணர்வு உடையவன் அல்லன், எல்லாப் பொருள்களையும், மாயை யால் ஆய கருவிகரணங்களின் உதவியை வேண்டாது, தனது அருட்சத்தியால் நேரே அறிந்தாங்கு அறியும் இயல்பினன். ஆத லால் அவன் தன் வயம் உடையோன் என் பது தெளியப்படும். இதனால் செய்தும், செய் வித்தும் எல்லாத் தொழிற்கும் வினை முதலாகும் முழுமுதன்மை முற்றறிப்புக்கடவுள் ஒருவனுக்கே உண்டென்பது தெளியப்படும்.

இக்கருத்துப்பற்றியே

"பதிஅரன்; பாசந்தன்னிற் பட்டுழல்
பசுநாம்" என்றே
விதியோடு மறைகள் கூறும் மெய்ம்மையைத்
தெளிய வேண்டில்
இதுவென உரைப்பன்: யாங்கள்
இவ்வர (சு) இயற்ற ஈசன்
அதிர்கழல் அருச்சித் தேத்தும் ஆலயம்
பலவும் காண்டி

அ. சுவேதாசுவதர உபநிடதப் பொருள் பற்றி, பிரமன் தன் மகன் தக்கனுக்கு அறி வுறுத்தியதாக, கந்தபுராணம் கட்டுரைப்ப தாயிற்று.

இனி, கடவுள் உண்மையைத் தெளிய மாட்டார்க்குக் காட்சிப் புலனாதல்பற்றிக் குடத்தைவனையும் குயவனை, அல்லது கட்ட டம் அமைக்கும் நுட்பக் கலைஞனை எடுத்துக் காட்டி முதற்கடவுளது உண்மையை அநு மானத்தால் சாதிக்கின்றோம். பின்னர் மேலும் நுணுகிச் சென்று, குயவன் அல்லது கட்டடக் கலைஞனும் சுட்டுணர்வுடையனாய் அவிச்சையால் கட்டுற்றுத் தன் வயமின்றி நிற்றலின் அவனைத் தொழிற்படுத்துவானும் அவ்வியல்பில்லாத முதற்கடவுளே ஆம் எனப் பிறிதோர் அநுமானத்தால் சாதிக்கின் றோம். ஆகலின், இங்கு அநுமானப் போலி என்பதற்கு இடமில்லை. இதனால், மேற் கூறியபடி செய்தும் செய்வித்தும் எல்லாத் தொழிற்கும் வினைமுதலாக நிற்கும் முழு முதல் சங்காரகாரணன் ஒருவனே என்பது உணரப்படும்.

சுவேதாசுவதரத்தின் மூன்றும் அத்தி யாயத்து இரண்டாம் மந்திரம்,

'எவர் இந்த உலகங்களைத் தமது சத்தி பேதங்களால் ஆளுகின்றாரோ (அந்த) உருத் திரர் ஒருவரே; இரண்டாம் பொருளாக நின் றார் அல்லர். மக்களே! அவர் (எல்லாவுயிர் களுக்கும்) உள்ளே (அல்லது பின்னே) நிற் கின்றார்; எல்லா உலகங்களையும் தோற்றிக் காத்து இறுதிக்காலத்தில் தம்முள் ஒடுக்கிக் கொள்ளுகிறார்'

ஏகோஹி ருத்ரோ, நத்வித்யாய தஸ்து:
ய இமாந் லோகாந் ஈசத ஈசநீபி:
ப்ரத்யங் ஜநா: திஷ்டதி ஸஞ்சுகோச அந்தகாலே
ஸம்ஸ்ருஜ்ய விச்வா புவநாநி கோபா:

எனவரும்.

இங்கே 'உருத்திரர் ஒருவரே' எனவும், 'இரண்டாவதாக நின்றார் அல்லர்' எனவும், 'உள்ளே அல்லது பின்னே நிற்கின்றார்' என வும் கூறுதலின், வேதங்களுள் திருமால், பிர மன் முதலியோரை ஆங்காங்குக் காரணர் என்றது அவரெல்லாம் குயவன் முதலியோர் போல அவாந்தர (இடைநிலை) காரணர் ஆதல் பற்றி என்பது உணரப்படும். படவே, காரணவாக்கியங்களில் நாராயணன், ஹிரண்ய கர்ப்பன் என்றாற்போல வரும் பெயர்களெல்லாம் ஆகுபெயரால் சங்கார காரணனாகிய உருத்திர முழுமுதலையே உணர்த்தி நிற்கும் எனக்கொள்ளப்படும். இங்ஙனம் ஆகலின், ஒன்றவன்தானே எனவும், ஒருவனே தேவனும் எனவும் திருமூலர் கூறிய படி முழுமுதல் ஒன்றே என்பதும், அது சங் காரக் கடவுளே என்பதும் தெளியப்படும்.

இவ்வாறு வார்த்திகத்தின் செம்பொருள், குறிப்புப்பொருள், நோக்கு என்பவை கொண்டு பூருவபக்கத்தை மறுக்கும் போது, மேலும் பின்வருமாறு பூருவபக்கம் நிகழும்:

5. பிறர் கூறும் பக்கம் (தொடர்ச்சி):

மேற்கூறிய வெல்லாம் பொருத்தமே யாயினும், சங்காரக் கடவுள் ஒருவனே என ஏன் கொள்ளுதல் வேண்டும்? சுட்டுணர்விற்றாகிய பிரபஞ்சம் (உயிர்கள்) பல ஆயினாற்போல, சுட்டுணர்வின்றி நின்ற சங்காரக் கடவுளையும் பலராகக் கொள்ளுவோமே! மேலும், சுட்டுணர்வினராகிய ஆன்மாக்கள் வீடுபேறெய்திய பின் சிவசமமாவர் என்பது கூறப்படுதலின், அவரெல்லாம் முதற்கடவுளர் ஆகாரோ?

6. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபு:—

காணப்படும் உலகம் அறிவுள்ளது அறிவில்லது என இருவகைப்படும், இவற்றுள் அறிவில் பொருள்கள் ஓர் அறிவுடைப்பொருளால்தான் தொழிற்படும். இனி, அறிவுடைப் பொருள்களாகிய உயிர்களும் அறியாமையாற் கட்டுற்றுச் சுட்டுணர்வுடையவையாய் உள்ளன. ஆதலால் இவற்றைத் தொழிற்படுத்துதற்கு இவற்றின் வேறாகிய முதற்கடவுள் உண்டென்பது பெற்றாம். பெறவே, உலகம் வியக்கத்தக்க காரியமாய் இருத்தலின், இதனை இவ்வாறு இயற்றும் முதல்வன் அளவிலாற்றல் பேருணர்வு முதலிய இறைமைக் குணங்கள் உடையன் என்பதும் பெறப்படும். படவே, அத்தன்மையனாகிய முதல்வன் ஒருவனே அமையும். ஆகலின் வேறும் அத்தன்மையர் உளர் எனக் கொள்ளின், மிகையென்னும் குற்றமாம். அன்றியும் "இலக்கணத்தால் வேறுபாடு இல்லாதபோது இலக்கியம் பல ஆகா."

"ஒன்றலா ஒன்றால் உளதாகி நின்றவா(று)
ஒன்றலா ஒன்றில் அவை ஈறுதல்—ஒன்றலா
ஈறே முதல்."

[உதாரணச் செய்யுள்]

'உயர்த் தொகுதிக்குட்படாத, இலக்கணத்தால் வேறுபாடின்றி ஒன்றேயாய் நிலையினும் உருத்திரசிவனால், அவனையே பரம ஆதாரமாகக் கொண்டு, உலகம் முழுவதும் தோன்றி நின்று ஒடுங்கும் என்பது சுருதியுத்தி என்னும் இரண்டாலும் திரிபு ஐயங்களுக்கு இடனின்றித் தெளியப்படுதலின், அத்தன்மையனான மாசங்காரக் கடவுள் ஒருவனே உலக முதல்வன் ஆவான்; ஏனையாரும் அவ்வியல்பினர் ஆகார்' என்றபடி. ஈறுதல்—ஈறுதலால் என விரிக்க. ஈறு செய்யுங் கடவுளை ஈறென்றது உபசாரம் ஈறேமுதல் என்றது முடிந்தது முடித்தல்.

(முதற்பொருளை) அறிந்தவன் அப்பொழுது புண்ணிய பாவங்களின் நீங்கி மலமில்லாதவனாய் மேலான சமமாந்தன்மையை எய்துகின்றான் (ததாவித்வான் புண்யபாபே விதூய நிரஞ்சந: பரமம் சாம்யம் உபைதி —முண்டகம், ௩.௧.௩) என வேதத்துட்கூறப்படினும், வீட்டு நிலையினும் முத்தான்மாக்கள் முதல்வனுக்குப் பலவாற்றானும் அடிமையேயாம்.

"அதனின் ஈறலா ஒன்று பலவாறே
தொழும்பாகும் அங்கு"

—உதாரணச் செய்யுள்.

[சங்காரக் கடவுள் போல அழிவின்றி நித்தமாகிய முத்தான்மாக்களாகிய சேதனப் பிரபஞ்சமும் வீடுபேற்றின் கண்ணும் (அங்கும்) பலவாறு தொழும்பாகும்]

எங்ஙனம் எனின், ஆன்மாச் சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடைமையின், முத்தி நிலையினும் முதல்வனைச்சார்ந்து, அவன் அருளையின்றியமையாததாய் அடங்கி நிற்கும் இயல்பினது. மேலும், அது சிவானுபவம் ஒன்றனுக்கே உரியதன்றி ஐந்தொழில் முதன்மைக்கு உரியதன்று. இதனால் சிவசமவாதிகள் முதலாயினார் மறுக்கப்படுகின்றனர்.

"சிவன்சீவன் என்றிரண்டும் சித்தொன்றும் [என்னின்,
சிவன் அருட்சித்(து) இவன் அருளைச் சேருஞ் சித்(து); அவன்றான்
பவம்கேடு புத்திமுத்தி பண்ணும் சித்(து) அவற்றில்
படியும் சித்(து) அறிவிக்கப்படும் சித்தும் இவன்றான்
அவன் தானேயறியும் சித்து ஆதலினால் இரண்டும்
அணைந்தாலும் ஒன்றாகா(து) அநரியமாய் இருக்கும்"

# திருமெய்யம்

மையார் கடலும் மணிவரையும் மாமுகிலும்
கொய்யார் குவளையும் காயாவும் போன்றிருண்ட
மெய்யானை மெய்ய மலையானைச் சங்கேந்தும்
கையானை கைதொழாக் கையல்ல கண்டாமே

— திருமங்கையாழ்வார்

திருச்சிராப்பள்ளி—மானமதுரை இருப்புப்பாதையில் திருமயம் என்ற நிலையம் இருக்கிறது. அங்கிருந்து முக்கால் கல் தொலைவில் ஒரு தனித்த குன்றும் கோட்டையும் உள்ளன. அந்த குன்றின் சரிவில் உள்ள கோயில் இருபாகமாக அமைந்திருக்கிறது. ஒருபுறம் திருமால் கோயில்; மற்றொரு பக்கம் சிவன் கோயில்.

திருமால் கோயில் கோபுர வாயிலைத் தாண்டி உள்நுழைந்ததும் இடப்பக்கம் சக்கரத்தாழ்வார், ஆண்டாள், கண்ணன் இவர்கள் சந்நிதிகளும், வலப்பக்கம் இலட்சுமி நரசிம்மா, சேனை முதலியார், இராமர் சந்நிதிகளும் இருக்கின்றன. புஷ்கரிணிக் கரையில் வராகப் பெருமாள் எழுந்தருளியுள்ளார். எம்பெருமான் திருநாமங்கள் சத்தியகிரி நாதன், சத்தியமூர்த்தி, மெய்யப்பன் என்பன. உஜ்ஜீவனத் தாயார் அல்லது உய்ய வந்த நாச்சியார் என்பது தாயாரின் திருப்பெயர். இங்கு பெருமாள் சந்நிதிகள் இரண்டு இருக்கின்றன. ஒன்றில் இறைவன் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலத்துடன் சேவை சாதிக்கிறார். மற்றொன்றில் பள்ளி கொண்ட பெருமாளாகக் காட்சியளிக்கிறார். இவருடைய திருவுருவம் அழகிய பெரிய திருவுரும் மலையிலேயே செதுக்கப்பட்டது. இது ஒரு குடைகோயில். பெருமாளின் திருவுருவத்துடன் சித்திரகுப்தர், மார்க்கண்டேயர், பிரமர், தேவர், வசுக்கள், கின்னரர், பூதேவி, சிதேவி, மது கைடபர் என்ற அரக்கர்கள் இவர்களுடைய உருவங்களும் கற்பாறையில் செதுக்கப்பட்டிருக்கின்றன.

இந்த பதியை சத்திய க்ஷேத்திரம் என்பர். கிரி, விமானம், தீர்த்தம், பெருமாள் முதலானவைகளுக்கு 'சத்திய' என்னும் அடைமொழி கொடுத்துச் சொல்லப்படுகின்றது. இங்குள்ள தீர்த்தம் கதம்பபுஷ்பகரிணி. தலவிருட்சம் பலா மரம்.

திருமங்கையாழ்வார் ஒன்பது பாசுரங்களில் இத்தலத்தெம்பெருமானைப் பாடியருளியுள்ளார். திவ்விய தேசங்கள் 108-ல் பாண்டிய நாட்டிலுள்ளவை பதினெட்டு. அவைகளில் ஒன்று திருமெய்யம் என்ற இத்திருப்பதி. "சிலையாளா மரமெய்ததிறலாளா திருமெய்ய மலையாளா" என்றும், "வேயிருஞ் சோலை விலங்கல் சூழ்ந்த மெய்ய மணாளர்" என்றும், "திருமெய்யத்தின்னமுதவெள்ளத்தை" என்றும் மங்கை மன்னன் பணித்தருளுகின்றார்.

சத்தியகிரிநாதப் பெருமாள் சந்நிதிமுன் மண்டபச் சுவர்களிலும், சேனை முதலியார் சந்நிதிச் சுவரிலும், ஒரு கற்பாறையிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவை, முதல் இராஜராஜ சோழன், வீரபாண்டியன், பராக்கிரம பாண்டியன், விஜயநகர-கிருஷ்ண

---

என்னும் சிவஞானசித்தி மேற்கூறிய கருத்தைக் கொண்டது. மூன்றும் அதிகரணம் முற்றிற்று

முடிவு: முதற்சூத்திரம் உலகத்தைத் தொழிற்படுத்தி நடாத்தும் ஒரு முதற்பொருளை உடையது எனப் பொதுவகையாகவும் அம்முதற் பொருளாகிய முழுமுதல் சிவபெருமான் என்பதே வேதாகம நூற்றுணிபு எனச் சிறப்புவகையாகவும் கடவுள் உண்மைக்குப் பிரமாணம் கூறிற்று. கூறும் போது உலகப் படைப்பிற்குக் காரணங் கூறும் நிமித்தம் மலத்து உளதாம் என ஆணவ மலத்தினது உண்மைக்கும் பிரமாணம் கூறப்பட்டது. ஆயினும் அதுபற்றிய ஆராய்ச்சி நான்காம் சூத்திரத்து வருதலின், அதன் உண்மை இங்கு வேறோர் அதிகரணமாக வைத்து உரைக்கவில்லை ஆசிரியர்.


முதற்சூத்திரம் முற்றிற்று.

(தொடரும்)

தேவராயன், திருமலை சேதுபதி இவர்களின் காலத்தவை. பாடிகாவல் உரிமைகளை விற்றதையும், திருக்கல்யாணச் செலவுக்கு நிலம் விற்றதையும், கோயிலில் "சுந்தரபாண்டிய விஜயாலயன் சந்தி" நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்ததையும், மாறன் சாத்தன் என்பவன் தாயாரான பெரும்பீடுகு பெருந்தேவி அம்மையார் கோயிலைப் பழுது பார்த்து ஒரு ஊரை வழங்கியதையும் அக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன,

குன்றின் சரிவிலேயே பெருமாள் கோயிலையொட்டியே சிவன் கோயிலும் இருக்கிறது. அதற்குட் செல்லும் வாயிலை ஒரு கோபுரம் அணி செய்கிறது. திருமால் கோயிலைப்போலவே இங்கும் இரண்டு சந்நிதிகள் இருக்கின்றன. அவற்றை மேலைக்கோயில் கிழக்கோயில் என்பர், ஒன்று மலையைக் குடைந்துள்ளதில் இருக்கும் இலிங்கமூர்த்தி. அவருடைய திருநாமம் சத்தியகிரீசுவரர். அவருக்கு இறைவியின் திருப்பெயர் வேணுவனேசுவரி என்பது. கற்பாறையிலேயே செதுக்கப்பட்ட இந்த இலிங்கமுள்ள குடைவறையின் வெளியில் துவாரபாலகர் இருவர் உருவங்களும் செதுக்கப் பட்டிருக்கின்றன. அவர்கள் இரண்டு கைகளுடையவர்கள். ஒருவர் கணுக்காலளவும் ஆடையுடுத்தி, பூணூல் உத்திராட்சம் அணிந்து, கைகூப்பி வணங்குகின்ற பாவனையிலிருக்கிறார். மற்றவர் ஒரு கையைக்கெதைமேல் வைத்திருக்கிறார். இலிங்கத்தின் எதிரிலுள்ள நந்தியும் பாறையில் அமைக்கப்பட்டதே. சத்தியகிரீசுவரருக்கு எதிரிலுள்ள ஒரு பாறையில் இலிங்கோற்பவரின் அழகிய திருவுருவம் செதுக்கப் பெற்றிருக்கிறது.

இந்த கோயிலிலும் சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ஒரு கல்வெட்டு பல்லவகிரந்தம், தமிழ் இவ்விரண்டு எழுத்துக்களாலானது. குணசேனன் என்ற பெயரைக் குறிப்



திருமயம் குன்றமும் கோயிலும்

முதால் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தது என்று பெறப்படுகிறது. இன்னொரு கல்வெட்டு இசையைப்பற்றியது. குடுமியாமலையில் சங்கீதத்தைப்பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டுப் போன்றது. சட்ஜமம், காந்தாரம், தைவதம் இவைகளைப் பற்றிக் கூறுகிறது. சிவவிஷ்ணு கோயில்களின் வருவாயைப் பங்கிடுவதில் சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் சண்டையேற்பட்டது. அது இரண்டாம் சுந்தரபாண்டியன் காலத்தில். அந்த வழக்கை ஹொய்சள சேனாதிபதியான அப்பண்ணதண்ட நாயக்கன் என்பவர் கி.பி. 1245 தீர்த்துவைத்திருக்கிறார். அதன்படி வருவாயில் மூன்று பங்கு சிவன் கோயிலுக்கும், இரண்டு பங்கு விஷ்ணுகோயிலுக்கும் சேர வேண்டுமென்று அவர் முடிவு செய்திருப்பதை ஒரு கல் வெட்டு தெரிவிக்கிறது. ஒரு கல்வெட்டு, விருதராஜ பயங்கர வளநாட்டு, கான நாட்டிலுள்ள தேவதானமான திருமெய்யம் என்று குறிக்கிறது. கான நாடு என்பது இவ்வூருக்கருகிலுள்ள கானாடு காத்தானைக் குறிக்கும். இன்னும் முதலாம் இராஜராஜசோழன், அவன் மகன் முதலாம் இராஜேந்திரசோழன் இவர்கள் காலத்திய கல்வெட்டுக்களும் தானங்கள் வழங்கியதை அறிவிக்கின்றன.

குடை கோயிலையல்லாமல் உள்ள இன்னொரு சந்நிதியிலுள்ள ஈசுவரனின் திருப்பெயர் பானுமாமகேசர் என்பது. தேவியின் திருநாமம் இராஜராஜேஸ்வரியாகும். இந்த கோயிலுக்குள்ளிருக்கும் திருக்குளம் சந்திர தீர்த்தம் என்பர். குன்றின் மேலிருக்கும் கோட்டையை இராமநாதபுரம் மன்னர் விஜயரகுநாத சேதுபதியென்பவர் கி.பி. 1687-ல் கட்டியதாகச் சொல்லப்படுகிறது. மலைமேல் நடுவிலுள்ள ஒரு பாறைச் சரிவில் ஒரு சிறு அறை குடையப்பெற்று அதில் இலிங்க உருவம் அமைக்கப் பெற்றிருக்கிறது. கோட்டை காவல் தெய்வங்களாக பைரவர், சக்திகணபதி, அனுமான், கறுப்பர் கோயில்களும், வேதாந்த தேசிகர் கோயிலும் இவ்வூரில் இருக்கின்றன.

ஆள் ஆய் உனக்கு, அன்புஆய், ஆசை ஆய்,
நாணிலிஆய்
வாளா மனைவி என்று வாழ்வேனைக் – கேளாய்
திருமெய்ய மாயா ! சிலைகால்வளைத்து
வரும் எய்ய, மாயா மதன்

—பிள்ளைப் பெருமாளையங்கார்.

---

**திருக்கழுக்குன்றம் :** ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவிய பேரறக்கட்டளை நிதியிலிருந்து, மாணிக்கவாசகர் திருநாளாகிய 19—6—61 ஆனி மகத்தன்று திருக்கழுக்குன்றத்தில் சிவனடியார்களுக்கும் ஏழைகட்கும் திருவமுது செய்விக்கப்பெற்றது.

**சிவராஜமடம் :** சக்திகணபதிமூர்த்தி திருஞானசம்பந்தப்பெருமான் கோயிலில் குடமுழுக்கு விழா 2—7—61-ல் நடைபெற்றது.

**தே. வ. புத்தூர் :** இலச்சுமிநாராயணப் பெருமாள் கோயிலில் மகா கும்பாபிஷேகம் 27—6—61 முதல் 30—6—61 வரை நடைபெற்றது.

**திருக்குற்றாலம் :** திருக்குற்றாலநாதசுவாமி கோயிலில் ஆறாவது சாரல் மகாநாடு 24—6—61 முதல் 7—7—61 வரை நடைபெறும். முதல்நாள் 24—6—61 அன்று சென்னை அறநிலையத்துறை அமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்கள். இலஞ்சி திரு ஐ. ஏ. சிதம்பரம்பிள்ளை, எம். ஏ., எம். எல். சி, அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு ஏ. சி. சண்முகநயினார்பிள்ளை, பி. ஏ., பி.எல்., அவர்கள் வரவேற்புரை தந்தார்கள். சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள், ஓர் உரை நிகழ்த்தினார்கள். இவ்விழா தொடர்ந்து 7—7—61 வரை நடைபெறும். பல அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் உரைநிகழ்த்துவார்கள் இன்னிசையரங்கும் நடைபெறும்.

# பந்தமும் வீடும்

[திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார், திருப்பதிகை]

உலகிலுள்ள பொருள்கள் அறிவுடையன, அறிவில்லன என இருவகையின. அறிவுடைப் பொருள்களுள்ளும் பகுத்தறிவுடையன, பகுத்தறிவில்லன என இரு பிரிவுகள் காணப்படுவன. மக்கட் பகுதியினரே பகுத்தறிவுடையவர். பிறவுயிர்கள் யாவும் பகுத்தறிவில்லாதன. பகுத்தறிவுள்ள உயிர்களாகிய மக்கள் பிறவுயிர்களையும் அறிவில் பொருள்களையும் தமக்குப் பயன்படுத்திக் கொள்வர். அவ்வாறு பிறவுயிர்களையும் அறிவில் பொருள்களையும் செயற்படுத்தும் மக்கள் தாமே செய்கின்றனரோ அல்லது செயற்படுத்தப்படுகின்றனரோ என்பதனை ஆராய்ந்துணர்தல் வேண்டும். இவ்வாராய்ச்சி உண்மையைத் தெளிவாக்கும்.

உயிர் அறிவாந்தன்மையது. அறிவாயிருப்பினும் கண் முதலிய கருவிகளின் உதவியின்றி உணர்ச்சி பெறுவதில்லை. கண் முதலியன அறிவு கருவிகளாயினும் தாமே அறிகின்ற ஆற்றலுடையனவல்ல தம்மையும் அறிந்துகொள்ளும் இயல்புமில்லாதன. தம்மைச் செலுத்திப் புலன்களைக் கவருமாறு செய்விக்கிற அறிவாகும் உயிரையும் காணும் ஆற்றலுடையனவல்ல. அவ்வாறே உயிர்களும் தாமே அறியக்கூடிய செயலுடையனவல்ல. தாம் அறிவதெல்லாம் தம்முடன் ஒற்றுமைப்பட்டுள்ள ஒரு பொருள் தம்மைச் செயற்படுத்துதலினாலாம். அப்பொருள் உயிருக்குயிராயுள்ள இறைவனேயாகும். தம்மோடு இணைந்து நிற்கும் அப்பொருளை உயிர்கள் அறியும் ஆற்றலுடையனவல்ல. இக்கருத்து சிவஞான போதத்து ஐந்தாஞ் சூத்திரத்துள் நன்கு விளக்கப்படுகின்றது.

இங்ஙனமாக இறைவன் இன்னருளால் உயிர்கட்குத் தோற்றம், நிலை, இறுதி, மறைப்பு, அருள் என்னும் ஐந்தொழில்கள் விளைகின்றன. இவ்வைந்தொழிலுள் முன்னைய நான்கும் பந்தம் எனவும், இறுதியதான அருள் வீடு எனவும் குறிக்கப்படுவன. எனவே பந்தமும் வீடும் பரமன் செயல்களென உணரக்கடவது. மணிவாசகனார்,

பந்தமும் வீடும் படைப்போன் காண்க
(திருவாசகம் திருவண்டப்பகுதி-52) எனவும்,

பந்தமுமாய் வீடுமாயினார்க்கு
(திருவாசகம்–திருப்பொற்சுண்ணம்-20) எனவும்,

திருநாவுக்கரசனார்,

பந்தம் வீடவையாய பராபரன்
(திருக்குறுந்தொகை-திருவாரூரரநெறி-2)எனவும்,
உருவமும் உயிருமாகி ஓதிய உலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்புவீடாய் நின்ற எம்பெருமான்
(திருவண்ணாமலை-திருநேரிசை-3) எனவும்,

பந்தமும் வீடும் பரப்புகின்றீர்
(திருவீழிமிழலை-திருவிருத்தம்-2) எனவும்,

சுந்தரர்,

பந்தம் வீடிவை பண்ணினீர்
(திருவீழிமிழலை-பண்-சீகாமரம்-4) எனவும்,

கருவூர்த்தேவர்,

பந்தமும் பிரிவுந்தெரி பொருட்பனுவல்
(திருவிசைப்பா-178) எனவும்,

சேக்கிழாரடிகளார்,

பந்தம் வீடுதரும் பரமன்
(தடுத்தாட்கொண்ட புராணம்-154) எனவும்,

உரைத்தவாற்றால் இறைவன் உயிர்கட்கு பந்தத்தையும் வீட்டினையும் அருளுகின்றான் என்பது உறுதி. இறைவன் அருள் வடிவினனாதலின் உயிர்கட்கு வீட்டின்பம் விளைவிப்பனென்பது ஒக்கும்; பந்தத்தால் பிறத்தல் இறத்தல் முதலிய துன்பங்களை விளைவிப்பன் என்பது இயலாததெனின் பந்தமும் உயிர்களைப்பற்றிய மலங்களைப் பக்குவஞ் செய்வது காரணமாக அஃது அவனது அருட்செயலென்றே கொள்ளப்படும். இவ்வாறாக உயிர்

களுக்குக் கூட்டப்பெறும் பந்த வீட்டு நிலை களைப் பெத்த முத்தி நிலைகளென்று சாத்தி ரங்கள் விளக்குவன. இப்பெத்த முத்தி நிலை களில் உயிர்களிடத்தே இறைவன் உட னிருந்து அருட்டொழில்களை நடத்துகின்ற னன். பெத்த நிலைக்கண் உயிர்கள் ஆணவ மலப் பிணிப்பால் யானெனது என்னுஞ் செருக்கால் பிறவியின் தொடக்கிற்கு ஏது வாகிய பல குற்றங்கள் இழைப்பது கண்கூடு. அங்ஙனம் குற்றங்களை இறைவன் உடனி ருந்து செயற்படுத்துவன். அதனால் அக்குற் றங்கள் இறைவனைச்சாரும். அவனது உண்மை நிலை பழிப்பிற்கிடனாகுமன்றோ! இறைவன் அப்பெத்த நிலைக்கண் உயிர்களி டத்து எங்ஙனம் ஒழுகுவன் என்றறிதல் இன் றியமையாததாகும். அவனது அரிய நிலையை,

கோலங் கொண்ட ஆறுண ராதே
ஞாலங் காவலன் யானெனக் கொளீஇப்
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்து
ஓடாப் பூட்கை நாடி நாடா
என்னுட் கரந்துஎன் பின்வந் தருளி
என்னையுந் தன்னையும் அறிவின்றி இயற்றும்
என்னது யானெனும் அகந்தை யுங்கண்டு
யாவர் யாவையும் யாங்கணுஞ் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்ந்துழிப் பெயர்த்து
மிக்க போகம் விதியால் விளைத்து இங்கு
எற்பணி யாளாய் எனைப்பிரி யாதே
ஓடி மீள்கென ஆடல் பார்த்திட்டு
என்வழி நின்றனன் எந்தை அன்னே!

எனவரும் இருபாவிருபத(18)னுள் அரு ணந்தி சிவாசாரிய சுவாமிகள் விளக்கியவாறு உணரத்தக்கது. இஃது ஒருயிர் தன்பெத்த நிலைக்கண் தெளிந்தவாற்றினை விளக்குவ தாகும். உயிர்கள் உடல்கொண்டு பிறக்கின் றன. பிறந்த பின் "வந்தவாறெங்ஙனே" போமாறேதோ" என்று ஆராய்வதில்லை. தம் மையே உலகைக் காக்கவல்ல மன்னர் எனக் கருதி அகந்தை கொள்வன. நிற்பதொத்து நிலையிலா உடலாதியான உலகத்தை உண்மை யென உன்னுவன. அவ்வுலகத்தையே யொட்டி நின்று தமக்கொரு முதல்வனுண் மையை யுணராது மயங்குவன. அங்ஙன முள்ள உயிர்களினிடத்தே இறைவன் மறைந்து நிற்பன். அவ்வுயிர்களை முன் செலுத்தித்தான் பின்னிற்பன். அகந்தை மீதூரச்செய்வன். உயர்திணை அஃறிணையா கிய யோனி பேதங்களினும் மண் முதலிய உலகங்களினும் உயிர்களோடு சென்று பிறந் துழிப் பிறந்தும், இறந்துழி இறந்தும், மிகுதி யான நுகர்பொருளை அவரவர் வினைக்கேற்ற வாறு விளைக்கும் இயல்பினனுவன். இவ்வித மாக விட்டு நீங்காது உயிர்கட்கும் உண்மைப் பணியாளனாய் விளங்குவன். உயிர்களது போக்குவரவாகிய இறத்தல் பிறத்தல்களைப் பார்த்துத்தான் முதன்மையில்லவன் போல் வாளா உயிர்களிடத்து இறைவன் வீற்றிருப் பன்.

இனி, வீடெனும் முத்தி நிலைக்கண் உயிர்கட்கு இறைவன் எங்ஙனம் அருளுவன் என்பதனை,

அருள்மிக வுடைமையின் அருட்டுறை வந்து
பொருள்மிக அருடறும் பொய்ப்பகை யாதலும்
கைகண்டு கொள்ளெனக் கடலுலகு அறிய
மெய்கண்ட தேவனெனப் பெயர் விரீஇத்
தன்னுட் கரந்து தான்முன் னுகித்
தன்னதுந் தானுமாய் என்னை இன்ருக்கித்
தன்னையும் என்னையுந் தந்து தனது
செய்யா மையும் எனது செயல் இன்மையும்
எம்மான் காட்டி எய்தல்
அம்மா எனக்கே அதிசயந் தருமே

எனும் இருபாவிருபதனுள் பதினெட்டாம் பாட்டினில் பிற்பகுதியில் விரித்துள்ளமை அறியலாகும். இறைவன் கருணையை மிகுதியு முடையவனுதலினுல் திருவெண்ணெய்நல் லூரில் உயிர்கட்குச் சிவாநுபவம் அருளுதற் பொருட்டும், உலகம் பொய்ம் மாயத்தன்மை வாய்ந்ததென்று கண்கூடாகக் காட்டும் பொருட்டும் மெய்கண்டதேவன் என்னும் பெயர்கொண்டு குருவடிவமாய் வந்துற்றான். தன் பேரறிவினுள்ளே உயிரின் சிற்றறிவை யடக்கித் தஞ்செயலே மேலிடச் செய்வன். தாமும் தம்முடைய அருளுமாய் உயிரையும் அதனறிவையும் அடக்கி நிற்பன். அங்ஙனம் அடக்கி நிற்குங்காலத்து இறைவனையும் உயி ரையும் தனித்தனி அறிய உயிருக்கு ஆற்ற லுண்டாவதாகும். அவ்வாற்றலால் இறை வன் உலகம் யாவையும் செயற்படுத்தித்தான் அதனுள் தோய்வற நிற்குந்தன்மையும், உயிர் எவற்றையும் செய்யுமியல்புடையதாயினும் அது தன்னுல் செய்யுமாற்றலுடையதன்று என்பதும் புலனுகும்.

இனி இத்திருப்பாட்டின் கருத்தனைத் தையும் ஓர் எடுத்துக்காட்டால் தெளிய முயற்சிப்பாம். ஒரு குடும்பத்தலைவன். அற

நிலை நின்று பொருளீட்டினன். குறைவற அவனது வாழ்க்கை விளங்கியது. அவன்பெற்றது ஒரு மகன். ஒருமகன் என்ற காரணமாக அவனைச் சிறப்புற வளர்த்தான். சிறந்த கல்விப் பயிற்சியையுந் தந்தான். அம்மகன் கல்விப்பட்டங்கள் பெற்றுச் சால அறிவுடையவன் என்று மதிப்பிற்குரியவனானான். இத்துணைப் பெரியவனாயினும் குடும்ப முதல்வனாகும் நிலைபெற்றானில்லை. தந்தையின் பொருள் தன்னுடையதேயாகும் என்று செருக்கினான். தந்தையின் முதன்மையை வெறுத்தான். தந்தையைப் பகைத்தான். குடும்பத்தில் குழப்பம். மற்றையர் அம்மகனுக்குத் திருமணஞ் செய்து குடும்ப பாரத்தை அவன்மீது இறக்குமாறு தந்தைக்கு அறிவுறுத்தினர். தந்தையும் இசைந்தார். திருமகனுக்கு ஒத்த அழகுவாய்ந்த ஒரு பேதையை மணத்திற்கு நேர்ந்தார். திருமணம் செய்வித்தார். மகனும் மகிழ்ச்சியுற்றான். பொருளாட்சி தன்பால் வாராமையான் முறுக்கினன். தந்தையும் அவன் அறியாமையைக் கண்டு உள் நொந்தார். அவன் மாறுபாடு அவனது வினையின் பயனே என வுணர்ந்தார். பொருளாட்சியை மகனிடந்தந்து இனி நிகழ்வன காண்போமென்று பொருளாட்சியை அவனிடம் ஒப்புவித்தார். மகனை முதன்மைப்படுத்திப் பின்னிற்பதானார். மகனும் பெரும் போகந்துய்க்கத் தலைப்பட்டான். தந்தையைத் தந்தையென மறந்தான். அவரை ஏவல்கொண்டான். அவர் முணுமுணுத்தலின்றிப் பணிசெய்வாரானார். யாதொன்றையும் தம் மகனைக்கொண்டே புரிவார். செல்வம் சுருங்கியது. மகன் கடன்களைப் பெருக்கினான். பொறுக்க வொண்ணா நிலையடைந்தான். தந்தையும் மகனொடு துயருற்றார். கடன் கொடுத்தார் பலரும் ஈண்டினர்; ஆலோசித்தனர். "இக்குடும்பம் தலை சிறந்த தொன்றாகும். மகனது அறியாமையால் இந்நிலை நேர்ந்தது. தந்தையார் உள்ளனர். நாம் தொடர்புள்ள வழக்குகள் அவரைப் புண்படுத்துவனவாகும். நாம் அவரை யணுகிக் குடும்ப முதன்மையை ஏற்றுப் பணி செய்யுமாறு வேண்டுவோம். மகனை இதற்கு இணங்குமாறு செய்விப்போம்" என்று தீர்மானித்தனர். அவ்வாறே மகனைக் கண்டனர். தந்தையாரையுங் கண்டனர். தாம் கருதியதனை உரைத்தனர். மகன் உண்மை தெளிந்தான். அகந்தை நீங்கினன். கடன் கொடுத்தோர் நல்லுரைக்குச் செவி சாய்த்தான்; இசைந்தான். அவர்களோடு தந்தையாரை யணுகினன். போந்தவர்கள் மகன் இசைவை அறிவித்தார்கள். மகனும் தந்தையார் திருவடியை வணங்கினன். பிழை பொறுத்தருளுமாறு வேண்டினன். தந்தையாரை முதன்மையாய் நின்று தன்னைத் துயரங்களினின்றும் மீள்விக்குமாறு பன்முறை விண்ணப்பஞ் செய்தான். தந்தையார் மனம் நெகிழ்ந்தது. முதன்மையை யேற்றார். மகன் பின்னிற்பதானான். தந்தையார் முயற்சி கடனை நீக்கியது. முன்னைபோல் மகிழ்ச்சி மீண்டது; நிலவியது. குடும்பத்துள் இன்பம் பொங்கியது. மகனும் பேரானந்தத்துள் திளைத்தான்.

இனி இவ்வெடுத்துக் காட்டின் உண்மையை உணர்வாம். ஈண்டுக் குறித்த தந்தையார் இறைவனாகும். இறைவனருளால் பிறந்தவன் மகனாகிய உயிர். அம்மகன் கல்வி பயின்று அறிவுடையவனாதல்போல் உயிரும் கற்று மெய்ப்பொருள் காணுந் தகுதியது. தந்தைக்கு அடங்காது அகந்தை கொண்ட மகன்போல உயிரும் ஆணவமலத்தால் மறைப்புண்டு அகந்தை யுறுகிறது. மகன் தந்தையால் திருமணங் கொண்டதுபோல் உயிர் மாயாகாரியமாகிய உலக சம்பந்தம் பெறுகிறது. திருமணத்திற்குப்பின் மகன் தந்தையிடத்துப் போராடித் தலைமைபெற்றதுபோல உயிர், உலக சம்பந்தத்தால் இறைவனை மறந்து தானெனும் முனைப்பு பெறுகிறது. தலைமை பெற்றதும் மகன் தன்னிச்சை வழியோடி மாபெருந் துயரங்களை யாக்கிக்கொண்

டதுபோல் உயிரும் உலகு துன்பமே யெந் நாளும் என்னும் துயருறு நிலையைப் பெறுகிறது. துன்பங்களை அனுபவித்துழிக் கடன் கொடுத்தோரால் நல்லுணர்வு பெறுதல்போல் உயிர் துன்பங்களால் இறைவனை நாட நல்லுணர்வு பெறுவதாகும். அந்நல்லுணர்வால் மகன் தந்தையை யடைந்து தான்வகித்த தலைமையை அவருக்குத் தருதல்போல் உயிர் இறைவனையடைந்து மீளாவடிமை யாகுந் திறம் பெறுவதாம். அங்ஙனமே தந்தையார் தலைமையை ஏற்று மகனுக்கு விடுதலையும் இன்பமும் அளித்ததுபோல் இறைவன் முதன்மையனாய் நின்று உயிருக்குப் பாச நீக்கமும் முத்தியின்பமும் அளிப்பவனாவான். ஈண்டுரைத்த இறைவன் அருஞ்செயலைத் திருநாவுக்கரசு சுவாமிகள்,

எம்பிரான் என்றதே கொண்டென்னுளே
புகுந்து நின்றிங்கு
எம்பிரான் ஆட்ட ஆடி யென்னுளே
உழி தர்வேனை
எம்பிரான் என்னைப் பின்னைத் தன்னுளே
கரக்கு மென்றால்
எம்பிரான் என்னின் அல்லால்என் செய்கேன்
ஏழையேனே

(தனித்திருநேரிசை—3)

என அருளிய தேவாரத் திருவாக்கினானும் முணரத்தக்கதாம்.

---

பாம்பணி: நாகநாதசுவாமி கோயிலில் பிரமமோற்சவம் 19—5—61 முதல் 30-5-61 வரை நடைபெற்றது.

தேரழுந்தூர்: ஆமருவியப்பன் கோயிலில் பிரம்மோற்சவம் 26—5—61 முதல் 1-6-61 வரை நடைபெற்றது.

திருச்செங்கோடு: அர்த்தநாரீசுவரர் வகையரு கோயில்களில் வைகாசி விசாகப் பெருவிழா 20—5—61 முதல் 3—6—61 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

ஆச்சாள்புரம்: சிவலோகத் தியாகராஜசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 19-5-61 முதல் 1—6—61 வரை நடைபெற்றது. சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

திருவாடானை: ஆதிரத்தினேசுவர சுவாமி கோயிலில் வைகாசி விசாகப் பெருவிழா 19—5—61 முதல் 30—5—61 வரை நடைபெற்றது.

சேலம்கோட்டை: சுந்தரராஜப்பெருமாள் என்னும் அழகிரிநாதசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 21—5—61 முதல் 30—5—61 வரை நடைபெற்றது.

சேலம்: சுகவனேசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 20—5—61 முதல் 31—5—61 வரை நடைபெற்றது.

குன்றக்குடி: திருமுருகன் கோயிலில் விசாகப் பெருவிழா 28—5—61 ல் நடைபெற்றது. இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

திருப்பத்தூர்: திருத்தளிநாதர் ஆலயத்தில் திருமுறை விழா 24—5—61 முதல் 27—5—61 வரை நடைபெற்றது.

திருப்புகலூர்: அக்கினீசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 19—5—61 முதல் 1—6—61 வரை நடைபெற்றது.

கோவூர்: சுந்தரேசுவர சுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 18—5—61 முதல் 29—5—61 வரை நடைபெற்றது. 20—5—61 முதல் 28—5—61 வரை சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

# திருக்கோகர்ணம்

## (புதுக்கோட்டை)

"கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயனென்" என்று அப்பர் பெருமான் பாடியருளிய தேவாரம்பெற்ற திருத் தலம் மேல்கடற்கரையில் பம்பாய் மாகாணத்தில் இருக்கிறது. ஆனால் இங்கு எடுத்துக் கொண்டது புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள **திருக்கோகர்ணம்** என்னும் திருப்பதி. இது புதுக்கோட்டை இருப்புப்பாதை நிலையத்திலிருந்து சுமார் ஒருகல் தொலைவிலிருக்கிறது; புதுக்கோட்டை நகரிலிருந்து மூன்று கல் தூரம் இருக்கும். பஸ்கள் போகின்றன.

திருக்கோகர்ணத்தை, "வகுளாரண்ய க்ஷேத்திரம்" என்றும் சொல்லப்படுகிறது. வகுளம் என்றால் மகிழமரம். திருக்கோகர்ணம் என்ற பெயர் வந்ததற்குத் தலபுராணத்தில் ஒரு கதை உண்டு. சிவபெருமான் பார்வதிதேவியாரோடும் திருக்கயிலாயத்திருந்து புறப்பட்டு தென்திசை வந்து வெள்ளாற்றுக்கு வடக்கிலுள்ள வகுளாரண்யத்தில் வந்து தங்கினார். தேவலோகத்தில் இந்திரனுடைய சபைக்குக் காமதேனு காலந் தாழ்த்து வந்தது. கோபங்கொண்ட தேவேந்திரன் காமதேனுவைப் பூலோகத்தில் காட்டுப் பசுவாகச் சாபமிட்டான். காமதேனு இந்திராணியின் உதவியால் பூலோகத்தில் ஈசுவரனால் சாபவிமோசனம் கிடைக்குமென்றறிந்து பசுவாகிப் பூமியில் கபில முனிவர் ஆசிரமத்தை யடைந்தது. அம்முனிவரின் ஆணையின்படி அப்பசு கங்கைநீரைக் காதில் கொண்டுவந்து வகுளாரண்யத்து ஈசுவரனுக்கு அபிஷேகம் செய்து வழிபாடு செய்து வந்தது. சிவபெருமான் அந்த பசுவின் பக்தியைச் சோதிக்கத் திருவுளங்கொண்டார். ஒரு நாள் அவர் ஒரு வேங்கை உருக்கொண்டு பசு வரும்வழியில் காத்திருந்தார். பசு தன் காதில் கங்கை நீரை எடுத்துக்கொண்டு அவ்வழியே வந்தது. காத்திருந்த புலி, பசுவைக் கொல்ல முற்பட்டது. பசுவானது சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்து வழிபாட்டை முடித்துக் கொண்டும், தன்வரவை எதிர்நோக்கியிருக்கும் கன்றுக்குப் பாலூட்டிவிட்டும் திரும்பி வருவதாகப் புலிக்குச் சத்தியம் செய்து கொடுத்து விட்டுச் சென்றது. தன் கடமைகளை முடித்து விட்டு தான் உறுதி கூறியபடி வேங்கைக்கு உணவாவதற்காகத் திரும்பி வந்தது. பசுவின் கடமை யுணர்ச்சியையும், உண்மை தவறாத நெறியையும் கண்ட வேங்கையாயிருந்த சிவபெருமான் இடபாரூடராய் அப் பசுவிற்குக் காட்சி கொடுத்தார். பசு காதினால் தீர்த்தம் கொண்டுவந்து அபிஷேகித்ததால் **கோகர்ணம்** என்ற பெயர் இத்தலத்திற்கேற்பட்டது. ஈசுவரன் வேங்கையாகி வந்திருந்த இடம் **திருவேங்கைவாசல்** என்றழைக்கப்பட்டது. இது இப்போது திருக்கோகர்ணத்திற்கு மேற்கே மூன்றுகல் தொலைவிலிருக்கிறது. இந்த நிகழ்ச்சி கோயிலில் திருநாளாகக் கொண்டாடப் பெறுகிறது. மரத்தினால் செய்யப்பெற்ற பசுவும் கன்றும் கொண்டு வந்து வைத்து, மனிதன் ஒருவன் புலிவேடம் பூண்டு ஆடுவான். பின்னர், சிவபெருமான் இடபத்தில் எழுந்தருளி, பசுவுக்குக் காட்சி கொடுப்பார்.

திருக்கோகர்ணம் கோயில் பெரிய கோயில். சுவாமி, அம்பிகை சந்நிதிகள் கிழக்குநோக்கி யிருப்பினும் தென்புற வாயிலில்தான் பெரிய கோபுரமிருக்கிறது. கோயிலில் நுழைந்தவுடன் மேல்புறத்தில் விநாயகர் சந்நிதி இருக்கிறது. முன்மண்டபத்தைத் தாண்டிய பின்னரே கோபுரவாயில் இருக்கிறது. அதற்கு மேல்பக்கத்தில் விசுவநாதர்-விசாலாட்சி சந்நிதியும் வசந்தமண்டபமும் இருக்கின்றன. கோபுரவாயிலைத் தாண்டிய பின்னர் நீண்ட மண்டபத்தைக் கடந்து உள்ளே நுழைகிறோம். அந்த வாயிலின் இருமருங்கும் அதிகார நந்திகேசுவரரும், விநாயகரும் எழுந்தருளியிருக்கின்றனர். உட்பிராகாரத்தின் தென்புறம் அறுபத்துமூவர் சந்நிதி. மேற்கு உட்பிராகாரத்தில் அறுபத்து மூவருக்குக் **காட்சிகொடுத்த நாயனார்** சந்நிதி இருக்கிறது. சிவபெருமான் உமாதேவியோடு இடபத்தின்மேல் எழுந்தருளி இருக்கிற இந்த உருவச்சிலை மிகவும் அழகாக இருக்கிறது.

இதற்கு வடக்கில் காசிலிங்கம், குழந்தை வடிவேலர், ஒருசிலையில் ஏழு லிங்கங்களுள்ள சப்த லிங்கம் இந்த சந்நிதிகள் இருக்கின்றன. இந்த உட்பிரகாரத்தை வலம் வந்தால் இறைவியின் சந்நிதி உள்ளது. தேவியின் திருப்பெயர் **பிரகதாம்பாள்** என்பது. புதுக்கோட்டை மன்னர்கள் குலதெய்வமாகக் கொண்டிருந்தனர். **பிரகதாம்பாள் தாசன்** என்றே அவர்களின் பட்டப்பெயர்.

பிரகதாம்பாள் சந்நிதிக்கு வடக்கே **பகுளவனேசுவரர்** சந்நிதி இருக்கிறது. இதற்கு வடமேற்கில் **மங்களநாயகி** எழுந்தருளிய சந்நிதி உள்ளது. இந்த சந்நிதிகளை வழிபட்ட பின் மேலும் வடக்கே செல்கிறோம். இங்கேதான் **கோகர்ணேசுவரர்** சந்நிதி யிருக்கிறது. இது பாறையிலே குடையப்பட்டது. சிவலிங்கமூர்த்தியும், அதன் முன்னர் இருபுறமும் இருக்கும் விநாயகர், கங்காதரர் உருவங்களும் பாறையிலே செதுக்கப்பட்டவை. முன்னிருக்கும் நந்தியும், தென்புறமுள்ள சத்த கன்னியரும் அவ்வாறே பாறையிலேயே செதுக்கப் பெற்றவை.

கோகர்ணநாதரின் பிரகாரத்தை வலம் வந்து வடகிழக்கிலுள்ள படிகள் வழியே சென்றால் சுனைதீர்த்தம் இருக்கிறது. அங்கிருந்து மண்டபத்தின் மேல்தளத்தை அடைந்தால் மேற்குப் பக்கத்தில் சகஸ்ரலிங்கம், அன்னபூரணி, துர்க்கை, இலட்சுமி, சரசுவதி, அறுமுகப்பெருமான் இவர்களின் சந்நிதிகள் இருக்கின்றன. மண்டப மேல்தளத்தில் கீழ்ப் பக்கம், பிரமர், சுரகரேசுவரர், பைரவர், நால்வர், தட்சிணாமூர்த்தி இவர்களின் சந்நிதிகள் இருக்கின்றன.

இத்தலத்தின் தீர்த்தங்கள் இரண்டு. **கபிலதீர்த்தம்** என்ற மேலே சொல்லப்பட்ட சுனை ஒன்று. மற்றொன்று, வகுளவனேசுவரர் சந்நிதிக் கெதிரிலுள்ள **மங்கள தீர்த்தம்** என்ற திருக்குளம். இத்தலவிருட்சம் **மகிழ மரம்**. இது பிரகதாம்பாள் சந்நிதிக்கெதிரிலிருக்கிறது.

இக்கோயிலில் சித்திரை உற்சவம், ஆடிப்பூரம், நவராத்திரி இந்த திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. கோயிலில் நாள்தோறும் ஆறுகால பூசை நிகழ்கிறது. அம்பாள் பூசை வெகு சிறப்பானது. சாயரட்சை ஆனபின் 7-30 மணிக்கு அம்பாள் அலங்காரம் செய்யப்பெறுகிறது. அதுமுதல் அர்த்தசாம பரியந்தம் சூனிய மில்லாமலிருக்க வாத்தியகோஷங்கள் உண்டு. பூசைக்குமுன் சின்னமேளம் அதாவது மத்தளம், தாளம், முகவீணை, துத்தி(சுருதி). தீபாராதனையின் பின்னர், வேதம், தேவாரம், ஆசீர்வாதம், பிடில், திருச்சின்னம். அதன் பிறகு வீணை, வாய்ப்பாட்டு, மத்தளம், தாளம், தம்பூரா (சுருதி). இவைகளுடன் நாள்தோறும் வெளியே விசேஷ வாத்தியங்களும் வாசிக்கப் பெறுகின்றன. அவை கர்ணா—அர்ச்சுனா (கர்ணா ஜுஃரணா), நவபத்து, ஜாங்கு முதலியன. இவைகள் வாசிப்பவர்களுக்கு உம்பள மானியங்கள் இருக்கின்றன.

இத்தலத்தைப்பற்றி வடமொழியில் திருக்கோகர்ண க்ஷேத்ரமாகாத்மியம் இருக்கிறது. **கபிலோபாக்கியானம்** என்று கிரந்தத்தில் 134 சுலோகங்கள் உள்ளன. இது தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றிருக்கிறது. ஆனால் அச்சாகவில்லை. இது ஆவணி மூலத்தன்று கோயிலில் படிக்கப்பெறுகிறது. இன்னும் வீணை சுப்பராம பாகவதர் குடும்பத்தினர் 100 ஆண்டுகளாகப் பாடி வரும் 11 கீர்த்தனைகள் இத்தலத்தைப் பற்றியனவே. 6 வடமொழியிலும், 2 தெலுங்கிலும், 3 தமிழிலும் ஆக அவை 11 கீர்த்தனைகள். அவையும் அச்சேறியதாகத் தெரியவில்லை.

கோகர்ணேசுவரர் கோயில் குடைகோயில் ஆனபடியால் பல்லவமன்னன் மகேந்திரவர்மன் (கி. பி. 600—630) காலத்தது என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அர்த்த மண்டபத்தில் பாறையில் செதுக்கப் பெற்ற விநாயகர், கங்காதரர் இவர்களின் பெரிய உருவங்கள் அற்புத சிற்பங்கள். கோகர்ணநாதரின் முன் மண்டபத்தூண்களிலும், கர்ப்பக்கிரகச் சுவரிலும், தமிழ், பல்லவ கிரந்தம் இம்மொழிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. தென்கவிரநாட்டுத் திருவேள்பூரிலுள்ள திருக்கோகர்ணம் என்று இவ்வூரை அக்கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. சோழ மன்னர்களில் இராஜராஜன் I (கி. பி. 985—1013), பாண்டிய மன்னன் மாறஞ்சடையன் இவர்கள் கல்வெட்டுக்கள் உள்ளன. விளக்கெரிக்கப் பொன், நிலம் முதலியவை வழங்கியதை அவை குறிக்கின்றன.

கும்பகோணத்திற்கருகிலுள்ள திருவிசநல்லூரில் பிறந்த சதாசிவப் பிரமேந்திரர் என்ற ஞானியை விஜயரகுநாதராய தொண்டைமான் என்ற புதுக்கோட்டை மன்னர் குருவாகக் கொண்டார். அந்தப் பெரியார் மணலில் எழுதிக்காட்டிய தட்சிணாமூர்த்தி மந்திரம் இன்னும் அரண்மனையில் பாதுகாத்து வைக்கப்பெற்றிருக்கிறது. அவருடைய திருவுருவம் கோயில் சுக்கிரவார மண்டபத்தில் இருக்கிறது. அத்துறவி வடக்கேயெல்லாம் சென்று கடைசியில் கரூருக்கு அருகிலுள்ள நெரூரில் சமாதி நிலை பெற்றார். தொண்டைமான் அவருக்கு அங்கே ஒருகோயிலும் எழுப்பி, திருமெய்யம் பகுதியில் இரண்டு கிராமங்களையும் தானம் செய்தார். சதாசிவப் பிரமேந்திரர் அத்வைத வேதாந்த நூல்களும், கீர்த்தனைகளும் இயற்றியிருக்கின்றார்.

---

**சென்னை :** *சென்னகேசவப் பெருமாள் கோயிலில் வசந்த உற்சவம் 20—5—61 முதல் 29—5—61 வரையில் நடைபெற்றது. சென்னமல்லீசுவரர் கோயிலில் வசந்த உற்சவம் 2—6—61 முதல் 8—6—61 வரை நடைபெற்றது.*

**விருதுநகர் :** *திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூஜை விழா 9—5—61-ல் விருதுநகர் சொக்கநாதசுவாமி கோயிலில் திரு. சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.*

**திருமுருகன்பூண்டி :** *சண்முகப் பெருமானின் 17-ஆவது ஆண்டு மகா விசாகப்பெருந் திருவிழா 29—5—61 ல் நடைபெற்றது. இன்னிசையரங்கும் நடைபெற்றது.*

**சென்னை :** *ஏகாம்பரேசுவரர் கோயிலில் வசந்த மகோற்சவம் 24—5—61 முதல் 30—5—61 வரை நடைபெற்றது.*

**திருக்கண்டியூர்:**—*வீரட்டேசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்சவம் 20-5-61 முதல் 30-5-61 வரை நடைபெற்றது.*

**பிலிக்கல்பாளையம்:**—*பாலதண்டாயுதபாணி சுவாமி கோயிலில் பங்குனி இரதோற்சவம் 23-3-51 முதல் 2-4-61 வரை நடைபெற்றது.*

**விளநகர்:**—*வரதராஜப்பெருமாள் கோயிலில் வசந்தோற்சவம 20-5-61 முதல் 29-5-61 வரை நடைபெற்றது. இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.*

**செந்தலை:**—*சுந்தரேசுவரசுவாமி கோயிலில் பிரம்மோற்கவம் 19-5-61 வரை நடைபெற்றது.*

**பண்ணைமாநகர்:**—*இராமசுவாமி கோயிலில் வசந்தோற்சவம் 25-5-61 முதல் 29-5-61 வரை நடைபெற்றது.*

**ஆழ்வார்திருநகரி:**—*ஆதிநாதராழ்வார் கோயிலில் திருஅவதார உற்சவம் 18-5-61 முதல் 30-5-61 வரை நடைபெற்றது.*

**காட்டுப்புத்தூர் :** *ஆதிகேசவப்பெருமான் கோயிலில் பிரம்மோற்சவம் 20-5-61 முதல் 29-5-61 வரை நடைபெற்றது.*

**துறையூர் :** *பிரசன்னவெங்கடாஜலபதி சுவாமி கோயிலில் சிரவண உற்சவம் 3-6-61 நடைபெற்றது.*

**வைத்தீசுவரன்கோயில் :** *வைத்தியநாதசுவாமி கோயிலில் வசந்தோற்சவம் 20-5.61 முரில் 29-5-61 வரை நடைபெற்றது.*

# கிடங்கில் திருத்திண்டீச்சரக் கல்வெட்டு வரலாறு

திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணமலைப் பல்கலைக் கழகம்

கிடங்கில் என்பது தென்னார்க்காடு ஜில்லா, திண்டிவனம் தாலூகாவின் தலைநகராய் விளங்கும் திண்டிவனத்தின் பழம் பெயராகும். கடைச்சங்கம் மருவிய நூல்களில் ஒன்றாகிய பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப் படையில் குறிக்கப்பெற்ற ஓய்மா நாட்டு நல்லியல் கோடன் வாழ்ந்த பதி இதுவே. இச்செய்தி, "கிளைமலர்ப்படப்பை கிடங்கில் கோமான் தளையவிழ் தெரியல் தகையோன்" என்னும் அந்நூல் அடிகளானும், அதற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் "கிடங்கில் என்னும் ஊர்க்கு அரசனாகிய அரும்பு நெகிழ்ந்த மாலையினை உடைய அழகை உடையோன்" என்று உரைத்த உரைப்பகுதியானும் விளங்கும். இக்கிடங்கிலில் உள்ள கோயில் கல்வெட்டுக்கள் இவ்வூரை ஓய்மா நாட்டுக் கிடக்கை நாட்டுக் கிடங்கில் என்றே குறிப்பிடுகின்றன. கிடங்கில் என்பது திண்டிவனத்தின் பழம் பெயராயினும், இதுபொழுது திண்டிவனம் இரயில்வே நிலையத்துக்குத் தென்மேற்கே சுமார் அரை மைல் தூரத்திலுள்ள கிடங்கில் என்னும் ஊர், கிடங்கில் என்னும் பெயராலே இக்காலமும் வழங்கப் பெறுகின்றது. இதற்கு வடக்கிலும், வடகிழக்கிலும் உள்ள பகுதியே திண்டிவனம் என்று வழங்கப் பெற்று வருகின்றது. எனவே இக்கிடங்கில், சிறுபாணாற்றுப் படையில் குறிக்கப்பெற்றிருப்பதால் இது அந்நூல் தோன்றிய காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டு, அதாவது இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்ததாகும்.

### திண்டீச்சரப் பெயர்க் காரணம்:

சிவபெருமானின் திருக்கோயில் வாயிற் காவலர் (துவாரபாலகர்) ஆகிய திண்டி, முண்டி என்னும் இருவருள் திண்டி என்பவரால் பூசிக்கப் பெற்றமையான் திண்டீச்சரம் என்னும் பெயருடையதாயிற்று. (மற்றவராகிய முண்டி என்பவர் பூசித்த தலம் முண்டீச்சரம் என்பதும் இங்கு உணரத் தக்கது) ஈச்சரம்—கோயில். ஈச்சரம் என்பது ஈச்சுரம் என்றும் வழங்கப்பெறும்.

### திண்டீச்சரம்—இது ஒரு தேவார வைப்புத்தலம்:

தனக்கெனத் தனிப்பதிகம் இல்லாது, வேறு ஒரு தனிப் பதிகத்திலோ அல்லது பொதுப் பதிகத்திலோ வைத்துப் பாடப் பெற்றிருப்பது வைப்புத்தலமாகும். அம்முறையில் இத்திண்டீச்சரம் திருநாவுக்கரசு சுவாமிகளால்' அடைவு திருத்தாண்டகம் எட்டாம் பாசுரத்தில் "கோடீச்சுரங்கொண்டீச்சுரந் திண்டீச்சுரங் குக்குடேச்சுரமக்கீச்சுரங் கூறுங்கால்" என்று வைத்துப் பாடப் பெற்றிருப்பதால் இது ஒரு வைப்புத்தலமாகும்.

### கிடங்கிலுக்குத் திண்டிவனம் என்ற பெயர் ஏற்பட்ட காலம்:

இக்கோயிலில் உள்ள விக்கிரம சோழ தேவரின் (கி. பி. 1120—1136) ஐந்தாம் ஆண்டுக் கல்வெட்டில் முதல் முதலாகத் திருத்திண்டிவன முடையார் கோயில் என்ற தொடர் காணப் பெறுகின்றது. எனவே திண்டிவனம் என்னும் பெயர் வந்தது கி.பி. 1125-ஆம் ஆண்டாகும். அதாவது இற்றைக்கு 836 ஆண்டுகள் ஆகின்றன.

### இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள்:

இக்கோயிலில் முதலாம் இராச ராச சோழன், முதலாம் இராசாதிராசன், வீரராசேந்திரன், முதற்குலோத்துங்கன், விக்கிரமசோழன் என்னும் சோழ மன்னர் காலங்களில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

### கோயில் கட்டப் பெற்ற காலம் :

இக்கோயில் கர்ப்ப இல்லின் (Central Shrine) தென்பால், தட்சிணாமூர்த்தி, மேல்

பால் திருமால், வடபால் பிரமதேவர் இவர்களின் திருமேனிகள் இருப்பதால் இக்கோயில் பல்லவர் காலத்தில் கருங்கல்லால் கட்டப்பெற்றது என்பது உறுதி. மகா மண்டபம் புத்தன் இராசிங்கன் ஏவற்படி, வாகூர் சிவப்பிராமணன் திருமாங்கோயில் வாணகோவரையனால் கட்டப் பெற்றதாகும், இச் செய்தி இக்கோயில், மகாமண்டபத்தின் தென்புறத்திலுள்ள கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது. அக்கல்வெட்டு,

"சீராருந் தென்கிடங்கிற் றிண்டீச் சரத்தானுக்
கோராருங் கன்மண் டபமெடுத்தான்—பாராரும்
பொன்னுன் பூமகள்சேர் புத்தன் இராசிங்க
னென்னுனை ஆரையா ரேறு
புத்தன் இராசிங்கன்ஏவத் திருத்திண்டீஸ்வர முடையார்
மண்டபம் செல்வித்தான் வாகூர்
சிவப்பிராமணன் திருமாங்கோயில்
வாணகோவரையன்"—என்பதாகும்.

இறைவரின் திருப்பெயர் :

இக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் இறைவர் திருத்திண்டீஸ்வரதேவர், திருத்திண்டீஸ்வரமுடைய பரமசுவாமி, திருத்திண்டிவனமுடையார் என்னும் பெயர்களால் குறிக்கப் பெற்றுள்ளனர்.

எழுந்தருளுவிக்கப் பெற்ற திருமேனி:

இத்திருக்கோயிலில் முதலாம் இராசாதிராச சோழனின் இருபத்தெட்டாம் இராச்சிய ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு, "சேனாபதிகள் மும்முடி சோழமாராசர் பள்ளிகொண்டார் அரையர் எழுந்தருளுவித்த சோமாஸ்கந்தர், ராஜாதிராஜவிடங்கர், இத்திருமேனிகளுக்கு ஒய்மாநாட்டுக் கிடக்கை நாட்டுக் கிடங்கிலான மும்முடி சோழநல்லூர் ஊரார் இறையிலி தேவதானமாக நிலம் விற்றுக் கொடுத்த பரிசாவது" என்று ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. எனவே அவ்விரு திருமேனிகளும் முதலாம் இராசாதிராசன் காலத்தில் அதாவது கி. பி. 1046இல் இங்கு எழுந்தருளுவிக்கப்பெற்றிருக்க வேண்டும்.

பிள்ளையார் கணபதியாரைப்பற்றிய குறிப்பு : முதலாம் இராசராசசோழனின் பதினொன்றாம் இராச்சிய ஆண்டில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டு, சோழ நாட்டுத் தென்கரை ஆர்க்காட்டுக்கூற்றத்துப்பேரார்க்காட்டு, ஆர்க்காடு கிழான் காடனை என்பான் உள்ளாலை கணபதியார்க்கு நாட்போனகத்துக்கு, முருங்கைப் பாக்கத்தில் நிலம் வாங்கி விட்ட செய்தியை உணர்த்துகிறது. எனவே உள்ளாலை அதாவது முதற்பிரகாரத்தில் இருக்கும் பிள்ளையார் மிகப் பழமையானவர் என்று பெறப்படுகின்றது.

அளிக்கப்பெற்ற நிவந்தங்களுள் சில :— முதலாம் இராசராச சோழன் காலத்தில் கிடங்கில் என்னும் இவ்வூரிலிருந்த கடம்புமான் தீர்த்தன் ஆதித்தன் என்பான், முருங்கைப் பாக்கத்தில், திருத்திவைத்த நிலம் வேப்பஞ் செறுவின் தெற்கில் கண்ணாறு வரவை ஐந்தினால் குழி 1500; பாடிகாப்பான் பட்டிக்குக் கிழக்கும், வடக்குமைக் கரைக்குத் தெற்கும், உள்ள குழி 600; புளியங்கொல்லையில் தீர்த்தனென்று திருத்தின செறு, குழி 810; ஆக 2910 குழிகளை திருத்திண்டீஸ்வர தேவர்க்கு வீணை வாசிப்பானுக்கும், உடன் பாடுவான் ஒருவனுக்கும் நிவந்தமாக அளித்திருந்தான்.

விக்கிரமசோழதேவரின் ஐந்தாம் ஆட்சியாண்டில் மணவில்மலைமதுராந்தகனை கலிங்கமான் திருத்திண்டிவன முடையார்க்குத் திருமெய்ப்பூச்சுக்கும், தேவர்களுக்கு அமுதுக்கும், திருமஞ்சனத்துக்கும், ஆக அன்றாடு நற்காசு 120-ஐக் கொடுத்திருந்தான். அக்காசுகளைக் கிடங்கில் ஊரார் பெற்றுக் கொண்டு, தங்கள் ஊரில் தந்தியப்பன் ஏரிக்குக் கிழக்கேயுள்ள ஆறுவேலி நிலத்தைக் கொடுத்துள்ளனர். (அன்றாடு நற்காசு—அப்பொழுது வழங்கும் நாணயம் : Current coin), சோழநாட்டுத் தென்கரை ஆர்க்காட்டுக் கூற்றத்துப் பேர்அரசுருடையான், ஆரூரன் உதய திவாகரனை அருமொழி மூவேந்த வேளான், தான் பிறந்த மக நட்சத்திரத்தன்று திருத்திண்டீஸ்வரமுடைய மகாதேவர்க்கு ஸ்நபநம் 108 கலசம் ஆடி அருளுவதற்குத் தேன், நெய், பால், தயிர், எள், கடுகு, மஞ்சள் பொடி முதலிய ஸ்நபநத் திரவியங்களுக்கும், புடைவைக்கும், ஸ்நபநம் ஆடித் திருவமுது செய்யத் திருவமுது அரிசிக்கும், கறியமுதுக்கும், நெய்யமுது, தயிரமுது, அடைக்காய் அமுதுக்கும், பெருந்திருவமுதுக்கும் ஆக,

கிடங்கில் பார்ப்பனப் பட்டியுடைய கிராஞ்சி காமக்கோடக் கிரமவித்தனிடை, சடையனூர் பட்டி என்று பேர் கூவப்படும் மூன்று பட்டி நிலத்தை விலைக்கு வாங்கிக் கொடுத்துள்ளான் [பெருந்திருவமுது வடை, பாயசம் இவைகளுடன் கூடிய உணவு] திருத்திண்டீஸ்வரமுடைய மகாதேவர் திருஞாயிற்றுக் கிழமைகளில் புறம்பே ஸ்ரீபலி எழுந்தருளுதல் உண்டு. அதன்பொருட்டு நிவந்தம் அளிக்கப் பெற்றிருந்தது. இக் கோயிலுக்கு நந்தா விளக்குகளின் பொருட்டு ஆடுகள், பசுக்கள் இவைகள் விடப்பட்டிருந்தன. பொன்னும் விளக்கின் பொருட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. அபமபான ராஜராஜன மாடையால் நிறுக்கப்பெற்று வந்தது.

கிடங்கிலைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு:—முதலாம் இராசராசன் காலத்தில் இவ்வூர் ஓய்மா நாட்டுக் கிடக்கை நாட்டுக் கிடங்கில் என்றும், முதலாம் இராசாதிராச சோழன் காலத்தில், சயங்கொண்ட சோழ மண்டலத்து ஓய்மா நாட்டுக் கிடக்கை நாட்டுக் கிடங்கிலான மும்முடி சோழ நல்லூர் என்றும், முதற் குலோத்துங்க சோழதேவரின் 15-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் ஓய்மா நாடான விஜயராஜேந்திர வளநாட்டுக்கிடங்கிலான ராஜேந்திர சோழ நல்லூர் என்று இக் கோயில் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளது.

---

**சென்னை :** திரு கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களால் கபாலீசுவரர் கோயிலில் 1—5—61 முதல் நடைபெற்று வந்த பெரியபுராணச் சொற்பொழிவு 30—5—61-ல் முடிவுற்றது. அன்று திரு கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு ஒரு பாராட்டு விழாவும் நடைபெற்றது. அவ்விழாவில் சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார், துணை ஆணையர் திரு டி. இராமலிங்க ரெட்டியார், வெரிபிகேசன் ஆபீசர் திரு டி. எச். விவேகானந்தம் பிள்ளை மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள்.

**வீராஜிமங்கலம் :** சந்திரசேகரர் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 26—5—61-ல் நடைபெற்றது.

**பூவாளூர் :** திருமூலநாதசுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 26—6—61-ல் நடைபெற்றது.

**ஆளுடையார் கோயில் :** ஆத்மநாதப்பெருமான் கோயிலில் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு ஆனித் திருமஞ்சன மகோற்சவம் 10—6—61 முதல் 20—6—61 வரை நடைபெற்றது.

**திருநெல்வேலி :** சுவாமி நெல்லையப்பர், காந்திமதியம்மை கோயிலில் ஆனிப் பெருந்திருவிழா 19—6—61 முதல் 27—6—61 வரை நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும் இன்னிசையரங்கும் நடைபெற்றன.

**திருநாகை :** சௌந்தர்யராஜப்பெருமாள் கோயிலில் சௌந்தர்யவல்லித் தாயார்க்கு பிரமோத்சவம் 12—6—61 முதல் 23—6—61 வரை நடைபெற்றது.

**சிதம்பரம் :** அனந்தீசுவரர் கோயிலில் விசாக உற்சவம் 29—5—61-ல் நடைபெற்றது. அன்று மாலை திரு சேதுசுப்பிரமணியப் பிள்ளை அவர்களால் 'அனந்தீசுவரர் மகிமை' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றது.

**திருமீயச்சூர் :** மேகநாதசுவாமி கோயிலில் இலட்சார்ச்சனை 2—6—61 முதல் நடைபெற்றுவருகின்றது.

# கூடலழகர் கோயில்


கோழியும் கூடலும் கோயில் கொண்ட
கோவலரே ஒப்பர் குன்றமன்ன
பாழியந் தோளும் ஓர் நான்குடையர்
பண்டு இவர் தம்மையும் கண்டறியோம்
வாழியரோ இவர் வண்ணம் எண்ணில்
மாகடல் போன்றுளர் கையில் வெய்ய
ஆழியொன்றேந்தி ஓர் சங்கு பற்றி
அச்சோ ஒருவரழகியவா

—திருமங்கையாழ்வார்.

அழைப்பன் திருவேங் கடத்தானைக் காண
இழைப்பன் திருக்கூடல் கூட—மழைப்பே
ரருவி மணிவரன்றி வந்திழிய யானை
வெருவி யரவொடுங்கும் வெற்பு

—திருமழிசையாழ்வார்.

கள்ளழகர், காட்டழகர், கூடலழகர் என்று பாண்டிய நாட்டு மக்கள் பேசிக் கொள்வர். கள்ளழகர் என்பவர் மதுரைக்குப் பனிரெண்டு கல் தொலைவிலுள்ள திருமாலிருஞ்சோலை அல்லது அழகர்மலை என்ற இடத்தில் கோயில் கொண்டுள்ள எம்பெருமான். காட்டழகர், ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து ஏழுகல் தொலைவில் அடர்ந்த காட்டில் மலை மேல் எழுந்தருளியிருப்பவர். கூடலழகர் மதுரை மாநகரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள எம்பிரான். மதுரையம்பதிக்கு ஆலவாய், கூடல் என்ற பெயர்களும் உண்டு. நான்கு மேகங்கள் கூடி மழைபெய்ததால் கூடல் என்ற பெயர் வந்தது. புலவர்கள் கூடி, சங்கமிருந்து, தமிழ் ஆராய்ந்ததால் கூடல் என்ற பெயர் வந்ததென்பாருமுளர். "உயர் மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ" என்பது திருக்கோவையார். ஆழ்வார்களின்



கூடலழகர் உற்சவ மூர்த்திகள்

பாசுரங்களின்படி "திருக்கூடல்" என்பதே இப்பதியின் பெயர். மங்கள சாசனம் பெற்ற நூற்றெட்டு திருப்பதிகளில் பாண்டிய நாட்டிலுள்ளவை பதினெட்டு. அவைகளில் ஒன்று திருக்கூடல். சாதாரணமாக மக்கள் கூடலழகர் கோயில் என்று வழங்குகின்றனர்.

இக் கோயில் மதுரை இருப்புப்பாதை சந்திப்பின் அண்மையிலிருக்கின்றது. வானுற வோங்கி நிமிர்ந்து நிற்கும் அதன் விமானம் கண்கவர் வனப்பினதாகக் காட்சியளிக்கும். கோயில் கிழக்கு நோக்கியது. அதன் வாயிலை ஐந்து நிலைக் கோபுரம் ஒன்று அழகு செய்கிறது. கர்ப்பக்கிரகம் நல்ல உயர்ந்த இடத்தில் இருக்கிறது. எம்பெருமான் கிழக்கே திருமுகமண்டலத்துடன் வீற்றிருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். கூடலழகர் வியூக சுந்தரராஜன், வைகுண்ட நாதன் என்பன பெருமாளின் திருநாமங்கள். சௌனகாதிகளுக்கும், பிருகு முனிவருக்கும், பெரியாழ்வாருக்கும் பிரத்தியட்சம். இந்த சந்நிதியின் விமானம் அஷ்டாங்க விமானம். விமானத்தின் மேலே இரண்டு தளங்கள். முதல் தளத்தில் சூரியநாராயணர் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறார். அதற்கு மேலே க்ஷீராப்திநாதன் (பள்ளிகொண்ட பெருமாள்) எழுந்தருளியிருக்கிறார். இரண்டு தளங்களிலும் இரண்டிரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன.

கூடலழகர் சந்நிதிக்கு வடபுறம் இலட்சுமி நரசிம்மர், இராமர், கிருஷ்ணன் இவர்கள் சந்நிதிகள் தெற்கு நோக்கி இருக்கின்றன. வடக்குப் பிரகாரத்தில் ஆண்டாள், நரசிம்மர், மணவாள மாமுனிகள், நவக்கிரகம் இவர்களின் சந்நிதிகளிருக்கின்றன. சாதாரணமாக சிவன் கோயில்களில் மாத்திரம் காணப்படும் நவக்கிரகம் இந்த வைணவக் கோயிலில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இராமருக்கு நேர் தெற்கே அனுமாரும், கூடலழகருக்குக் கிழக்கே கருடாழ்வாரும் எழுந்தருளியிருக்கின்றனர். கூடலழகர் சந்நிதிக்கும் தென்புறம் தனிக்கோயிலில் நாச்சியார் எழுந்தருளியுள்ளார். மதுரவல்லி, வகுளவல்லி, மரகதவல்லி, வரகுணவல்லி இவை தாயாரின் திருநாமங்கள். தாயார் சந்நிதிக்கெதிரில் தென்புறம் ஆழ்வாராதிகள், உடையவர், தேசிகர், நாதமுனிகள் இவர்களின் சந்நிதிகள் உள்ளன.

இத்தலத்தின் தீர்த்தங்கள் ஹேமபுஷ்கரிணி, சக்ரதீர்த்தம் என்பவை. கிருதமால் நதியையும் கூறுகின்றனர். வைகாசியில் பிரம்மோற்சவமும், புரட்டாசி பௌர்ணமியில் கருடசேவையும், மாசியில் தெப்பஉற்சவமும் சிறப்பாக நடைபெறும்.

அஷ்டாங்கவிமானத்தின் அடிப்பாகம் முழுவதும் கருங்கல்லால் அற்புதச் சிற்ப வேலைப்பாட்டுடன் அமைந்தது. கர்ப்பக்கிரகச் சுவர்களிலுள்ள பலகணிகள் பலவிதமாக அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த கோயிலில் கல் வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகள் எம்பெருமானை 'கூடல் அழகிய பெருமாள்" என்று குறிக்கின்றன. கோயில் அர்த்தமண்டபம் கட்டுவதற்குக் கற்கள் கொடுத்ததையும், கோயிலில் பூசை வழிபாடுகள், திருவிழாக்கள் முதலியன நடைபெறுவதற்காக கிராமங்கள், பொருள், வீடு முதலியவை தானம் செய்யப்பட்டதையும் இந்த கல் வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

இப்பதியெம்பிரான்மீது திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் இருவரும் ஒவ்வொரு பாடல் பாடியருளியுள்ளனர். (அவை இக் கட்டுரைத் தொடக்கத்தில் காணப்படுவன). பெரியாழ்வார் இத்தலத்தில்தான் திருப்பல்லாண்டு பாடியருளினர் என்று ஒரு வரலாறுண்டு. மதுரையை அக்காலத்தே ஆண்டு வந்த வல்லபதேவன் என்ற பாண்டிய மன்னன் ஓரிரவு நகர் சோதனை செய்ய வந்தான். கங்கையாடி வந்த பக்தர் ஒருவரைச் சந்தித்தான். மழைகாலத்துக்கு வேண்டியதை மற்ற எட்டு மாதங்களிலும், முதுமைக்கு வேண்டியதை இளமையிலும், மறுமைக்கு வேண்டியதை இம்மையிலும் தேட வேண்டுமென்ற உண்மையை அவர் வாயிலாகக் கேட்டுணர்ந்தான். மறுமைக்கு வேண்டியதைத் தேட வேண்டுமே என்று தன் அவையிலிருந்த செல்வநம்பிகளைக் கேட்டான். அவர் "புலவர் சபைக்கூட்டி அவர்களிடம் வேதத்தில் முடிவாக அறுதியிட்ட பரம்பொருள் எது என்று தெரிந்து கொண்டு மறுமைக்கு வேண்டியதைத் தேடவேண்டும்', என்று அரசனிடம் தெரிவித்தார். மன்னனும் புலவர் பேரவை கூட்டினான். பரம்

பொருள் இதுதான் என்று நாட்டவல்லார்க்குப் பரிசாகப் பொற்கிழி யொன்றைத் தொங்கவிட்டான். அந்த சபைக்கு ஸ்ரீவில்லி புத்தூரிலிருந்து விஷ்ணுசித்தரும் வந்தார். அரசனும், செல்வநம்பிகளும் அவரை நன்கு வரவேற்றனர். அவர் "ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள்" என்று பல ஆதாரங்களுடன் நிலை நாட்டினர். மேலே தொங்கிய பொற்கிழியும் அவர் கைக்குவர அதை அறுத்து எடுத்துக்கொண்டார். அவருக்கு அரசன் "பட்டர்பிரான்" என்ற பட்டமும் சூட்டி யானைமீது நகர்வலம் செய்வித்தான். எம்பெருமானும் பிராட்டியாரோடு சங்குசக்கர தாரியாய், கருடன்மீதமர்ந்து காட்சியளித்தார். பேரானந்தமடைந்த பட்டர்பிரான் எம்பெருமான் திருவுருவத்திற்கு கண்ணெச்சில் (திருஷ்டி) படுமோ என்று அஞ்சி, யானையிலிருந்த மணிகளைத் தாளமாக்கி "திருப்பல்லாண்டு" பாடியருளினர்." பக்தி முதிர்ச்சியில் வரலாகும் இம்மனோநிலை மற்ற ஆழ்வார்களுக்கு இவரைப்போல் பேரளவில் வராததால், ஆழ்வார்களில் விஷ்ணுசித்தரே பெரியாழ்வார் ஆனர் என்று ஸ்ரீமணவாள மாமுனிகள் உபதேசரத்ன மாலையில் காரணங் காட்டுகிருர்.

மதுரையில் இப்போது மேங்காட்டுப் பொட்டல் ஜான்ஸிராணி பூங்கா என்று வழங்கும் "மெய்காட்டிய பொட்டலில்" இது நடந்த இடம் என்பர். கூடலழகர் சந்நிதியில் மார்கழிப் பகல் பத்து உற்சவத்தின் முதல் திருநாள் இந்த இடத்திலே நடப்பது இதற்கு ஆதாரமாகும்.

வாழ்விப்பான் எண்ணமோ வல்வினையில்
இன்னம் எனை
ஆழ்விப்பான் எண்ணமோ அஃது உரையாய்—
தாழ்வு இலாப்
பாடல் அழகார் புதுவைப் பட்டர்பிரான்
கொண்டாடும்
கூடல் அழகா நின்குறிப்பு.

—பிள்ளைப்பெருமாளையங்கார்.

---

சென்னை அயன்புரம் : பர்வதாம்பிகை சமேத பரசுராமலிங்கேசுவரர் கோயிலில் துவஜஸ்தம்ப, ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 20—8—61 முதல் 24—8—61 வரை நடைபெறும்.

காட்டுமன்னார்கோயில் : வீரநாராயணப்பெருமாள் கோயிலில் 30—5—61-ல் திரு ச. சேதுசுப்பிரமணியம் அவர்களால் 'சீதாகல்யாணம்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப்பெற்றது.

இராஜமன்னார்குடி : இராஜகோபாலசுவாமி கோயிலில் தெப்போற்சவம் 20—6—61 முதல் 29—6—61 வரை நடைபெற்றது.

திண்டுக்கல் : சீனிவாசப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 12—6—61 முதல் 23—6—61 வரை நடைபெற்றது.

சிதம்பரம் : நடராஜப்பெருமான் கோயிலில் திருவாசக சொற்பொழிவு 15—6—61 முதல் 19—6—61 வரை நடைபெற்றது.

இராஜபாளையம் : பெத்தவநல்லூர்—மாயூரநாதசுவாமி கோயிலில் ஆனி பிரம்மோற்சவம் 19—6—61 முதல் 28—6—61 வரை நடைபெற்றது. சமயச்சொற்பொழிவுகளும், இன்னிசையரங்குகளும் நடைபெற்றன.

திருவாதவூர் : மாணிக்கவாசக சுவாமிகள் ஆனி மகத்திருநாள் 19—6—61-ல் நடைபெற்றது. சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் திரு குன்றக்குடி அடிகளார், திரு தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் முதலியவர்கள் கலந்து கொண்டார்கள்.

அம்பாசமுத்திரம் : கிருஷ்ணசுவாமி கோயிலில் தெப்பத் திருவிழா 16—6—61-ல் நடைபெற்றது.

# நவதிருப்பதி அநுபவம்

திரு. K. பட்சிராஜன், BA., B.L.,

(முன் தொடர்ச்சி)

இனி இந்தப் பதிகம் பார்யா ஸம்பந்தத்தைக் காட்டும் என்பர் பெரியோர். இப்பதிகமும் குலசேகரருடைய "கண்டார் இகழ்வனவே" என்ற பாசுரமும் ஒரு வகையில் இந்த நாயகி நாயக உறவைக் காட்டும் என்பர். தனது நாயகன் தன்பரிசை எல்லாம் அழித்து தன்னைப் பிறர் பரிகசிக்கும்படி கைவிட்டுப் போனாலும் அவனையன்றி வேறொருவரைத் தன் துணையாகக் கொள்ளாத உத்தம நாயகியைப்போல நீ என்னைக் கைக்கொண்டு ஆளாமல் போனாலும் என் குறைதீர வேறொருவரை நாடேன் சப்திக்கின்ற கழல்களணிந்த உன் திருவடிகளையே நாடுவேன் என்றார் குலசேகரர். இவ் வாழ்வாரும் ஏறக்குறைய அதே கருத்தை இப்பதிகத்திலே விளக்குகிறார். இப்பதிகம் தோன்றுமுன் பராங்குச நாயகியின் நிலை 'கங்குலும்பகலும்' என்னும் பதிகத்தில் தாய் வார்த்தையாக விளக்கப் பெறுகின்றது. நாயகன் இவளை விட்டகன்று போக, அவனே நினைவான இவள் சரீர தசையை நோக்கினால் அவன் இவளைப்படுத்தியுள்ள பாடு தெரியும். கங்குலும் பகலும் கண் துயில் இல்லை; கையால் வாரியிரைக்கலாம்படி கண்ணீர் வெள்ளமிட்டோடுகின்றது; தன் விதியை நோகிறாள்; வானத்தை அண்ணாந்து நோக்குகிறாள்; மயங்குகிறாள்; காதலே கஷ்டம் என்று காதலையே ஓரளவு பழிக்கிறாள்; யோசனையில் ஆழ்கிறாள்; கையை விரித்து அலமருகிறாள்; மீண்டும் ஆகாயத்தை நோக்கி இமைகொட்டாது விழிக்கிறாள்; கைகால்கள் போட்டது போட்டபடியாம்படி செயலறுகிறாள். இப்படிப் பலவிதத்திலும் நைந்து போகிற நாயகியைக் கண்ட தாய்மார் நாயகனை எண்ணி இவளை என்ன செய்யத்தான் அவன் தீர்மானித்தான். இவளை இப்படிப் பரிசழிக்கின்றானே இது தகுமா. இப்படியும் ஒரு நாயகன் செய்வானா என்று அவனை இகழ்ச்சி தோன்றப் பேசுகின்றார்கள். தாய்மார் தன் நாயகனைப்பற்றியும் தன் நிலைமையைப்பற்றியும் தமக்குள்ளே பேசிய பேச்சைக் கேட்டே கிடந்த நாயகி அவர்கள் பேச்சில் வந்த சில வாசகங்களைக் கேட்டு அவ் வாசகங்கள் அவளுக்கு ஒரு வழியை உணர்த்த அதன்படி தென்திருப்பேரை போய்ச் சேர்வதென்று தீர்மானிக்கிறாள். அத்தீர்மானத்தைத் தாய்மார் தெரிந்து இவளைத் தகைய அவர்களை மீறிய இவள் துணிவைக் கூறுவது இப்பதிகம். உத்தமமான நாயகியாதலால் தன்நிலை நோக்கித் தாய்மார் நாயகனைப் பழிக்கவும், தன் துணிவைத் தாய்மார்கள் நாயகன் அடாச் செயல் காட்டியும் பிறகொண்டும் தடுக்கவும் செய்தும் அவர்களை எல்லாம் ஒதுக்கி அவனையே சேர்வேன் என்று அவன் ஊர் நோக்கிப் புறப்பட ஆயத்தமாகிறாள். இந்த மனோபாவம் குலசேகரருடைய 'கண்டார் இகழ்வனவே' என்ற பாசுரத்தில் குறிக்கப்பட்ட மனநிலையை ஒத்திருக்கின்றது என்பது அப்பெரியோர்கள் திருவுள்ளம். ஆசார்ய ஹ்ருதயம் இப்பதிகத்தைப்பற்றிக் கூறும்போது "சென்று சேர்வார்க்கு உசாத்துணை அறுக்கும் ஸௌந்தர்யம் மாநகரிலே கோஷிக்கும்" என்று பேசும். தென்திருப்பேரையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானது பேரழகு அங்கு சென்றுசேர நினைப்பாரை பந்துக்கள் போன்றார் தகைந்தாலும் அவர்கள் உறவை அறுத்துக்கொண்டேனும் இந்நகர் நோக்கி அவர்களை ஈர்க்கும் வன்மையுடையது என்று கொண்டாடும். இந்தப் பேரழகின் வெற்றியைப் பாடும் வேதங்கள் இடையறாது ஒலிக்கும் நகர் என்று வருணிக்கும். இது ஓரளவு மேலே சொன்ன ஆழ்வார் நிலையை ஒட்டியது. தன்மானம் முதலியவையெல்லாம் இழந்து பல்வளையார் முன் பரிசழியச் செய்தவனானும், அவனை ஒழிய உசாத்துணையில்லை என்று கொண்டு "உழந்து இனி யாரைக்கொண்டு என் உசாகோ" என்று உங்களோடு பேசிப் பலன் என்ன? என்று அந்தத் தாய்மாரோடு உசாத்துணை யறுக்கிறாளல்லவா நாயகி. எனவே 'இழந்த வென் மாமை" என்ற பாடல்தான் இப்பதிகத்தின் உயிர்ப்பாட்டு. ஆசார்ய ஹ்ருதய வசனப்படியும், பாசுரத்தின் பொருளின் நோக்கின்படி

யும் இப்பதிகம் குலசேகரரின் "கண்டார் இகழ்வனவே"என்ற பாசுரத்தோடு ஒன்றுபட்டுக் காண்கிறதென்றும் நாயக நாயகி உறவையே இப்பதிகம் பேசும் என்றும் அபபெரியோர்கள் கூறுவர். ஆசார்ய ஹ்ருதய மூலத்தில் 'மாநகர்' என்றுதான் குறிக்கப்பட்டது. வியாக்கியானமிட்ட மாமுனிகள் மஹாநகரமான தென்திருப் பேரையிலே என்று உரையிட்டார். மாமுனிகள் காலத்தும் இது தென்திருப்பேரை என்றே பெரியோர்களால் அறியப்பட்டிருந்தது என்பதும் தெரிகிறது. உபயகவி அப்பா இயற்றிய நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு என்னும் நூலில் திருப்பேரை என்றே குறிக்கிறார். அஷ்டப்ரபந்த ஆசிரியரும் தென்திருப்பேரை என்றே கூறுவர். சடகோப திவ்ய சரிதமும் திருப்பேரை என்றே கூறும்.

## திருக்கோளூர்

நவதிருப்பதிகளில் எட்டுத் திருப்பதிகளைப்பற்றிய ஆழ்வார் பிரபந்தங்களின் பொருளை அநுபவித்தோம். ஒன்பதாம் பதியாகிய திருக்கோளூரைப்பற்றிய பதிகத்தைப் பார்ப்போம்.

இப்பதிகம் எழுமுன் பராங்குச நாயகியின் நிலை என்ன என்று பார்க்கவேணும். நாயகன் நினைவேயாய், அவன் வாராமையாலே மனம் மிகவும் நொந்து அம்மனோ வியாதி காரணமாக நாயகி தன் உடைமை எல்லாம் இழந்து நலத்திலும் திறத்திலும் வெறிதானவளாய் நின்றாள் என்று தாய் வார்த்தையாக 'மாலுக்கு' என்ற முந்தின பதிகம் பேசும். அப்பதிகத்திலே மகள் நலங்களை ஒவ்வொன்றாக இழந்ததை ஏலக்குழலி இழந்தது சங்கே என்றும், மங்கை யிழந்தது மாமை நிறமே என்றும், இழந்தது பீடே என்றும், இழந்தது பண்பே என்றும், இழந்தது கற்பே (மனத்திண்மை அல்லது ஞானம்) என்றும், தோற்றது மெய்யே என்றும், இழந்தது சாயே என்றும், இழந்தது மாண்பே என்றும், தோற்றது பொற்பே என்றும் கடைசியாக இழந்தது கட்டே என்றும் இவையெல்லாம் அவன் காரணமாய் நிகழ்ந்தது என்றும் பலவிதமாகத் தாய் பேசுகிறாள். இப்படி எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையளாய் நின்ற நாயகி தாய் புலம்பலைக் கேட்கிறாள் அவன் பெயரையும் கேட்கிறாள். "நாமோ யாவையும் இழந்துவிட்டோம். தாரகமாக ஒன்றும் இங்கில்லை. இனி அவனிருந்தவிடம் ஏறச் சென்று என்னை இப்படி வறியளாக்கி நிறுத்துவது 'தக்கதே'? என்று கேட்போம். என் காதல்மிகுதியைக் கண்ட பின்பாவது, அதுவும் அவனிருக்குமிடம் தேடிவந்து குறையிரப்பதைப் பார்த்தாவது என்னைக் கடாக்ஷித்து அருள் செய்து 'செம்மையுடைய திருமார்வில் சேர்த்தானேல் நன்று"; அன்றிக்கே "மெய்ம்மை சொல்லி முகநோக்கி விடைதான் தருமேல் மிகநன்று" என்று உள்ளம் துணிகிறாள். இந்தத் துணிவு அவள் பெண்மைக்கு இயல்பிலே உண்டான அச்சத்தை விரட்டுகிறது. மனத்தீர்மானம் உடலுக்கு வலியளிக்கிறது. இரவிலே தாய்மார் தோழிமார் உறங்குகையில் வீட்டைவிட்டுத் தன்னந்தனியளாய் வெளியே கிளம்பிப்போய் விடுகிறாள் அவனைத் தேடி. விடிந்ததும் மகளை எழுப்பவந்த தாய் படுக்கையிலே மகளைக் காணவில்லை. தன் மகள் மனநிலையையும், அவள் வாழ்க்கையையும், செயல்களையும் கொண்டு ஆராய்கிறாள். "சரி. அவள் நம்மை விட்டு அவனிடம் தேடிச் சென்றுவிட்டாள்" என்று அறுதியிடுகிறாள். மகளை இழந்தோம் என்ற ஏக்கம் அவள் மனத்தைச் சூழ்கிறது. அந்த ஏக்கத்திலே தன்மகள் செயலையும், அவள் உடல்நிலைமையையும், அவள் அவ்விதம் போனமையால் அவளுக்கும், குடிக்கும் வரக்கூடிய இன்னல்களையும் கூறிப் புலம்புவதாக அமைந்தது இப்பதிகம்.

இந்நாயகியே போன்று பரகால நாயகியும் தாய் வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் செல்ல அந்நாயகியின் போக்கை உன்னி அவள் தாய் புலம்பியதாக 'கள்வன்கொல்' எனவரும் பதிகம் ஒன்றுள்ளது. ஆனால் இவள் போக்குக்கும் அவள் போக்குக்கும் ஒரு மாறுபாடுண்டு. இவள் தனியே தாய் வீட்டைவிட்டு நாயகன் இடம் தேடிப் போனாள். ஆனால் இரண்டிலும் மகளை இழந்த தாய் புலம்பலே கூறப்படுகிறது. இவ்விடத்திலே ஈட்டின் அவதாரிகையில் ஒரு ஐதிஹ்யம் காணப்படுகிறது. நம் பூர்வாசாரியர்கள் பிரபந்தத்துக்கு வியாக்கியான மிடுகையில் சாதாரண உரைகாரர்கள் போன்றின்றிப் பாசுரங்கள் நிலையுணர்ந்து அப்பாசுரம் பாடிய பாத்திரமேயாகி, அப்பாத்திரங்களின் மன

நிலையைத் தானும் அனுபவித்து அந்த ஸ்வாநுபூதி(தான் துய்க்குநிலை)யிலே நின்று வியாக்கியானமிட்டார்கள் என்பது அவர்களது வியாக்கியானம் கற்றவர் உணர்வர். அதனாலேயே பாசுரங்களில் வரும் பதங்கள், நிலைகள் முதலியன சாதாரண பண்டிதர் ஒருவருக்குத் தெரிவதைக் காட்டிலும் மிகுந்த சுவைமிக்கு அவர்கள் உள்ளங்களுக்குத் தோன்றின. அவற்றின் தொனிப்பொருளை உணர்ந்து அவர்கள் வியாக்கியானம் அருளினார்கள். அதனால்தான் நம் கண்களுக்குத் தோன்றாத யோசனைகள் அவர்களுக்குத் தெற்றெனப்பட்டன என்பதை நாம் பலவிடங்களில் காணமுடியும். அதுமட்டுமல்ல ஓரளவு அவர்கள் வழியிலே போய் நம்மையும் அதில் ஈடுபடுத்திக் கொண்டால்தான் அவர்கள் யோசனைகளை நம்மால் புரிந்துகொள்ள முடியம் அவற்றை நாம் ரஸிக்க முடியும்.

இப்படிப்பட்ட ரஸிகர் கோஷ்டியிலே பரமாசார்யரான ஆளவந்தார் இப்பதிக வியாக்கியானம் அருளிச்செய்ய, முன்னமே "கள்வன்கொல்" பதிக வியாக்கியானம் கேட்டிருந்த ரஸிகர்களில் ஒருவர் "உண்ணுஞ் சோற்"றிற் பிராட்டிக்கோ "கள்வன்கொல்"லிற் பிராட்டிக்கோ அஞ்சவேண்டுவது?" என்று கேட்டாராம். இருந்த மற்ற ரஸிகர்கள் "இருவராய்ப் போனவர்களுக்கு வயிறெறிய வேணுமோ? தனிவழியே போனவளுக்கன்றோ வயிறெறிய வேண்டுவது!" என்றார்களாம். ஆளவந்தார் "அங்ஙனன்று காணுங்கோள்! இருவராய்ப் போனவர்களாகையாலே இருவர்க்கும் அஞ்சவேணும் தனியே போனவளுக்கு ஒரு பயமுண்டோ? என்றருளிச் செய்தார் என்றுகூறி நம்பிள்ளைவாக்காக "அதுக்கடி—இருவரும் இருவர்க்கும் ஊமத்தங்காயாய் கடித்ததும் ஊர்ந்ததும் அறியார்கள்; இவள் அங்கே புக்கல்லது தரியாள் என்று கருத்து. "அள்ளலம் பூங்கழனி அணியாலி புகுவர் கொலோ? அன்றியே லங்காவாரத்திலே புகுவர்கொலோ?" என்றிறே அங்கே வயிறுபிடி. ஆனாலும் எங்கேனும்போகினும் இருவராயல்லது இராது அங்கு; 'தனியே போன இவள் என்படுகிறாளோ' என்று மிகவும் நொந்து கூப்பிடுகிறாள் இவளுடைய திருத்தாயார். (ஊமத்தங்காயாய் என்பது பிச்சேற்றும் சரக்காய் என்று பொருள்படும்.)

இப்படிப் போன நாயகியை உன்னி, இப்படி எங்களை எல்லாம் நினையாதே போவளோ! ஏ பூவைப்புட்களே கூறுங்கள், போன அவள் கண்ணீர்மல்க என்படுகிறாளோ! ஐயோ இவள் இடை நோவுமே! அங்குபோய் மனம் களிப்புறுவளோ! மனம் நைவளோ! எப்படிப்போய்ச் சேர்வளோ! மனம் கசிவளோ! குடிப்பழியைக் கருதாதே போய்விட்டாளே என்றெல்லாம் எண்ணிப் புலம்புவதாக வருவது இப்பதிகம். இனி பதிகத்தை நோக்குவோம்.

## முதற் பாட்டு

உண்ணும் சோறு பருகுநீர்
    தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான் என்றென்றே
    கண்கள்நீர் மல்கி
மண்ணினுள் அவன் சேர்
    வளம் மிக்கவனூர் வினவித்
திண்ணம் என்இளமான்
    புகும்ஊர் திருக்கோளூரே.

உண்ணுகின்ற சோறும், பருகும் நீரும், மென்று தின்னும் வெற்றிலையும் இவையெல்லாம் எனக்கு ஸ்வாமியான கிருஷ்ணன்தான் என்றே பலகாலும் தியானித்து கண்கள் நீர் சோர்ந்து இப்பூமியிலே அவன் குணங்கள் நன்கு செழித்த ஊரைக்கேட்டு என்னுடைய மான்போன்ற கண்களை உடைய சிறுமி போய்ச்சேரும் இடம் திருக்கோளூர்தான். நிச்சயம்.

உண்ணும் சோறு

உயிரைப் போக்காது காத்து அதற்குத் தாரகமாக நிற்கும்சோறு. பருக்கை. சோறு என்பது எல்லா உணவுக்கும் இலக்கணை. உயர்ந்த உணவுமட்டுமல்ல உயிரை ஒரு மயிரிழையில் ஊசலாடும்படியாவது காக்கும் புற்கை. அதி அல்பமான சோற்றுப் பருக்கை முதல் எல்லா உணவுப் பொருள்களும்.

பருகு நீர்

குடிக்கும் நீர். நீர் என்பது நாம் உட்கொள்ளும் எல்லா திரவ பதார்த்தங்களுக்கும் உபலக்ஷணம். உண்ட சோற்றைச் சமிப்பித்து சத்தை உடலில் எங்கும் பரப்ப உதவும் போஷகப் பொருளான நீர்ப்பண்டங்கள்.

**தின்னும் வெற்றிலை**

போக்யப் பொருளான வெற்றிலை. இது பிற போக்கியப் பொருள்கள் எல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். ஒரு உயிர் உலகில் விரும்பும் தாரக போஷக போக்யப்பொருள்கள் அடங்கலும்.

**கண்ணன் எம்பெருமான்**

என் ஸ்வாமியான கண்ணனே. அப்பொருள்கள் தாரகமல்ல. கண்ணனே என் ஸத்தைக்குத் தாரகன். அவனையொழிந்த அப்பொருள்கள் பயனற்றன. என் உயிர்க்குத் தாரகன் அவனே. அவனையே உண்பேன் அவனையே பருகுவேன். அவனே போகப் பொருள். அவன் புகழ்தான் என் உயிருக்குத்தாரகம். "கணை நாணில் ஓவாத் தொழில் சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே! ஓவாத ஊணாக உண்" என்று தன் நெஞ்சைப் பயிற்றவளல்லவா.

**என்றென்றே**

இந்நினைவு ஒருகால் இருகால் அல்ல. ஒருநாள் இருநாளல்ல. எந்நாளும், எப்போதும் இதுவே நினைவு இதுவே கொள்கை.

**கண்கள் நீர்மல்கி**

எப்போதும் கண்களிலே நீர் தேக்கிட. அவன் நினைவிலிருந்தால் மகிழ்ச்சியிலே நீர் தேக்குகின்றது. அவன் அவள் மனத்திலிருந்து தன்னை மறைத்துக்கொண்டால் பிரிவுத்துயரிலே கண்ணீர் வெள்ளமிடுகின்றது. இப்படி எவ்வகையிலேனும் கண்ணீர் நீர்த்தேக்கம் மாறாதவள். இப்போது அவனிருக்கும் இடம் நாடித் துயரக் கண்ணீர் சோர.

**மண்ணினுள்**

இந்த பூமியிலே. "வைகுண்டே து பரே லோகே" என்றபடி அவன் ஏழுலகும் தனிக்கோல்செல்ல வீற்றிருக்கும் இடம் நாடியல்ல. இந்த அவனுடைய லீலா விபூதியிலே. அவன் தன் எளிமைதோன்ற அங்கிருந்து சேதனர்க்கு முகங்கொடுக்க வென்றே எழுந்தருளியுள்ள இந்த பூமியிலே.

**அவன் சேர் வளமிக்கவனூர்**

இங்கேயும் அவன் கல்யாண குணங்களெல்லாம் செழித்துத் தோன்றும்படியிருக்கும் அவனுடைய ஊர். அதுவும் ஒருநாள் இருநாள் தங்கிப் போகை யன்றிக்கே அவன் உகந்து நித்யவாசம் செய்யும் ஊர்.

**வினவி**

கேட்டு. தானறிந்தவளேயானாலும் நல்ல சிஷ்டையாதலால் பெரியோரிடமும் கேட்டு. தன் மனத்தில் தெரிந்ததைப் பிறர்வாயிலும் கேட்டு உறுதி செய்துகொண்டு.

**என் இளமான் புகும் ஊர்**

மான்போன்ற மருண்ட பார்வையை உடைய என்பெண். பருவம் முதிராதே இளையளான என்சிறுமி. அவள் போய்ச் சேரும் இடம்.

**திருக்கோளூரே**

திருக்கோளூர் என்னும் தலம்தான். வேறு ஊராக இருக்கமுடியாது.

**திண்ணம்**

இது நிச்சயம். இதில் ஐயமே இல்லை. மனையை நீத்து வெளிப்போந்த தன்மகள் எங்கு போயிருப்பாள் என்று தாய் ஆராய்கிறாள். தன்மகள் தன்மையை வெகுகாலமாக அறிந்தவளாதலின், அம்மகள் நினைவுகளையும் பேச்சுக்களையும் கொண்டு ஆராய்ந்து இப்படிப்பட்ட மனநிலையுடைய என்மகள் போக வேண்டுமானால் அவள் இவ்வூருக்கே போயிருக்க வேண்டும் என்று துணிகிறாள்.

**கண்கள் நீர்மல்கி**

இவ்விடத்திலே ஈட்டில் ஒரு ஐதிஹ்யம் காண்கிறது. "நஞ்சீயர்" பிள்ளை திருநறையூரரோடே மூன்று திருவாய்மொழி கேட்டேன். அதில் எனக்கு ஒருவார்த்தைகளும் போகாது. ஒரு திருவாய்மொழியைப் பிரஸ்தாவியா அவர் சிதிலராய்க் கண்ணும் கண்ண நீருமாய் இருக்கும் இருப்பை நினைத்திருப்பன்" என்றார். இப்படி அவன் சீர்கேட்டு உருகிக் கண்ணீர் பொழிய நிற்பாரைக் காண்பதே ஒரு பெரும்பாக்யம் என்பது குறிப்பு.

ஈட்டிலே மற்றொரு குறிப்பும் காட்டப்படுகிறது. "அநந்தாழ்வான் சோழகுலாந்தகனிலே இருஷிபண்ணியிருக்கிறான் ஒரு ஸ்ரீவைஷ்ணவனைக் கண்டு 'உம்முடைய ஊர் எது?' என்று கேட்க, 'என் ஊர் திருக்கோளூர்' என்ன 'அங்கு நின்றும் போந்ததென்?'

என்ன 'தேஹ யாத்ரை நடவாமே போந்தேன்' என்ன 'அவ்வூரில் கழுதையை மேய்த்து ஜீவிக்க மாட்டிற்றிலேயோ? நிலை நின்ற ஜீவனத்தை விட்டுப் போந்தாயாகாதே?' என்றான். திருக்கோளூர் எம்பெருமான் ஸேவை ஆன்மாவுக்கு நித்ய தாரகமாய்க் கிடைத்திருக்க அதைவிட்டு தேக போஷணையே பெரிதென்று எண்ணி நித்ய வஸ்துவை இழந்து வந்தாயே என்று அநந்தாழ்வான் அந்த வைஷ்ணவனுடைய இழவுக்குப் பரிந்தார். கழுதையை மேய்த்துத்தான் வயிற்றைக் கழுவவேண்டும் என்ற இழிநிலை வந்தாலும் திருக்கோளூர் தலம் விட்டுப்போக வொண்ணாதபடியாயிற்று அவ்வூர் எம்பெருமான் குண ஸௌந்தர்யங்களின் நிலை என்பது குறிப்பு.

மற்றொரு ரஸமான குறிப்பும் ஈட்டிலே காட்டப்படுகிறது. "எம்பெருமானார் தெற்கே எழுந்தருளா நிற்க எதிரே வருகிறாள் ஒரு பெண்பிள்ளையைக் கண்டு 'எங்கு நின்றும்?' என்ன 'திருக்கோளூரில் நின்றும்' என்ன அவ்வூரில் புக்க பெண்களும் போகக்கடவராயிருப்பர்களோ? என்றருளிச் செய்தார்."

ஆண்களே பெண்களாய் மாறிப் புகத் தேடுமூராயிற்றே திருக்கோளூர். பெண்ணான நீ எப்படி அவ்வூரை விட்டு வந்தாய் என்பது தொனி. அவ்வெம்பெருமானின் சௌந்தர்ய சோபை இருக்கும்படி அது.

## இரண்டாம் பாட்டு

"ஊரும் நாடும் உலகமும்
தன்னைப் போல் அவனுடைய
பேரும் தார்களுமே பிதற்றக் கற்பு வானிடறி
சேரும் நல்வளம்சேர் பழனத்திருக் கோளூர்க்கே
போருங்கொல் உரையீர் கொடியேன் கொடி
பூவைகளே!"

தான் பிறந்த ஊரும், ஊரையுடைய நாடும், நாட்டையுள்ளடக்கிய உலகமும் தன்னைப் போலவே அவனுடைய திருநாமங்களையும் திருச்சின்னங்களையும் அழைத்துப் புலம்பும்படியாக, பெண்களுக்குரிய சிறந்த வரம்புகளை உதைத்துத் தள்ளிவிட்டு நல்லவளம் சிறந்த கழனிகளை உடைத்தான திருக்கோளூர் போகவென்று புறப்பட்ட, மஹாபாபம் செய்தவளாகிய என்னுடைய, கொடிபோன்ற நாயகி அங்குபோய்ச் சேர்வாளா. ஏ பூவைகளே உரையுங்கள்!

### ஊரும் நாடும் உலகமும்

அவள் பட்டபடியெல்லாம் அவள் பிறந்த இவ்வூரும், இவ்வூரை ஒரு பகுதியாகக் கொண்ட இந்நாடும், இந்நாட்டை ஒரு மூலையில் உடைய இவ்வுலகமும். உலகமும் என்பது அதில் வாழ் உயிர்களுக்கு ஆகுபெயராய் நின்றது. எல்லா சீவராசிகளும்.

இவ்வூரைவிட்டு இவள் போவானேன்? இங்கென்ன குறை அவளுக்கு. அவளோடு உசாவிப்பொழுது போக்க ஆளின்மையா? இல்லை போகுமிடம் இதனிலும் மேலென்று போனாளா? அல்லது இங்குள்ளாரைத் தன்னைப் போலாக்கியது போல அங்குள்ளாரையும் திருத்தப் போனாளா?

### தன்னைப்போல்.........பிதற்ற

ஊரிலும் நாட்டிலும் உலகத்திலும் உள்ள உயிர்களெல்லாம் தன்னைப் போலாம்படி பண்ணினவள் "இன்று நம் மளவும் வர வேறிப்பாயும்படியிறே இவள் ஸம்பந்தம் வெள்ளமிட்டபடி" என்பது ஈடு. தன்னைப் போன்ற மனிதவர்க்கம் மட்டுமேயல்ல "காலை எழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள் மாலின் வரவு சொல்லி" என்றபடி பறவைகளும் அவன் பேர் சொல்லிப் புலம்ப வைத்தவள். அவை எல்லாம் இவள்பால் மோகித்த அவன் இவளிருந்த இடம்தேடி வந்தமை கூவிற்று. இவளோ அவன் பேர் பிதற்றி அவனிருந்த விடம் தேடிப்போயினாள் என்கிறாள்.

### கற்பு வான் இடறி

வான் கற்பு இடறி என்று கூட்டுக. கடக்கவொண்ணாத பெண் வரம்புகளைக் கடந்து மலைபோலத் தடுத்து நிற்கும் நியதிகளை ஒரு சிறு கல்லை இடறுவதுபோல் உதைத்துத்தள்ளி. கற்பு—நிறை. நிறையை மட்டுமன்று பெருங்கரையை எறிந்து செல்லும் வெள்ளம் மற்றச் சிறு கரைகளையும் அழித்தேறுவது போன்று நாண் மடம் அச்சம் முதலியவற்றையும் உதறி. இவ்விடத்திலே வான்கற்பு என்றதற்கு வலிய அறிவு என்றும் பெரிய ஞானம் என்றும் இரண்டு வேறுவித யோசனைகள் ஈட்டிலே கூறப்பெறுகின்றன.

**சேரும்**

"இங்கே பிறர் உபசாரம் செய்ய இருப்பவள் அங்கே தன் வயிறு (தானே) வளர்க்கப் போவதே! இங்கே பிறர்திருந்தும்படியிருக்கிற இவள் அங்கே திருந்தின இடம் தேடிப் போவதே!'' என்பது ஈடு. தன் மரியாதையைக் குலைத்துக்கொண்டுபோய்ச் சேர வென்று புறப்பட்ட.

**நல்வளம்சேர் பழனத் திருக்கோளூர்க்கே**

நல்லவளம் செறிந்த கழனிகளையுடைய திருக்கோளூருக்கே. அவனும் விரும்பி வந்து நித்யவாசம் செய்யும்படியான கண்ணுக்கினிய செழிப்புடைய கழனிகள் சூழ்ந்த தலம்.

**போருங்கொல்**

போய்ச் சேர்வளா. இடரின்றிப் போய்ச் சேர்வளா? வழியில் தடையின்றி யிருக்க வேண்டுமே. ஆபத்தின்றி யிருக்கவேணுமே என்று பரிகிருள் தாய்.

**கொடியேன்**

கொடிய பாபத்தைப் பண்ணினவள் நான். இல்லாவிடில் என் அரவணைப்பில் இதுகாறும் வளர்ந்தவள் இப்படி என்னை விட்டுப் போவளா? இது என் பாபமா? குடியின் பாபமா? "பெற்ற தாயரை விட்டகலுகை குடிஸ்வபாவம் போலே காணும். "கள்வன் கொல்லிலும் நல்லதோர் தாமரைப் பொய்கையிலும் உண்டிறே" என்பது ஈடு.

**கொடி**

கொடிபோன்ற மென்மையுடையவள். தன்மையுடையவள். என் பெண். தனி வழி போகும் உரமுடையளல்லள். உடல் மென்மையாளுலும் தன்பற்றிடம் தான் தேடும் தன்மையுடைய கொடிபோன்று உற்றபற்றுக்கோடு தேடிப்போனவள். "கோல் தேடியோடும் கொழுந்ததே போன்றதே மால் தேடியோடும் மனம்" என்றபடி அவனைத் தேடும் மனமுடையகொடி.

**பூவைகளே உரையீர்!**

ஏ! பூவைகளே! என் பெண் வளர்த்த பூவைகளே! அவளை வளர்த்த எங்களைப் பிரிய ஒருப்பட்டாலும் தான் வளர்த்த உங்களைப் பிரிய ஒருப்படாதவளல்லவா அவள். அவள் பிரிவில் நாங்கள்படும் துன்பம் உணராதவளாயினும் அப்பிரிவில் நீங்கள்படும் துன்பத்துக்கிரங்குபவளாயிற்றே. அதனால் எங்களிலும் அவளை, அவள் தன்மையை நன்கறிந்த பூவைகளே.

**உரையீர்**

சொல்லுங்கள். அவள் எங்களை மறந்தாலும் நீங்களாவது எங்கள் பேரில் அருள் கூர்ந்து சொல்லுங்கள். இங்கு "போருங்கொல்" என்பதற்கு வேறு ஒரு பொருளும் கூறப் பெறுகின்றது, என் மகள் திரும்ப வருவளா? என்று எங்களைத்தான் நினைந்துவரா விட்டாலும் உங்களை நோக்கியாவது அவள் திரும்ப வருவாளா?

இரண்டு பொருளிலும் தம்மைவிடப் பூவைகள் பால் தலைவிக்குப் பரிவு அதிகம் என்பதே அடிப்படை. உண்மைதானே? இராமனோடு உடன்சென்றனர் ஸீதை இலக்ஷ்மணன் இருவரும். நள்ளிரவில் நகரமக்களை உறங்கவைத்துப் பிரியும் இராமன் சுமந்திரனிடம் சில கூறி யனுப்புகிருன். இலக்ஷ்மணனும் கோபத்தில் பேசுகிருன். கடைசியாக சுமந்திரன் ஸீதையிடம் உனக்கேதேனும் செய்தி உண்டா என்று கேட்க அவள் மாமியர்க்கு வணக்கம் கூறி

**யான்வளர் பொன்னிறப் பூவையும் கிளியும்
போற்றுகென்று என்னுடை எங்கையர்க்கு
உணர்த்துவாய்''**

என்றல்லவா முடித்தாள். எங்கள் பிரிவில் வருந்தாமலிருக்கவேண்டும் விரைவில் வந்து விடுவோம் என்று மாமியாரையும் அன்னைமாரையும் தேற்றும் என்று கூறவில்லை. நான் வளர்த்த பூவையும் கிளியும் என் பிரிவால் வருந்தும் அவற்றைத் தேற்றி வளர்க்கும்படி என் தங்கைமாரை நான் வேண்டியதாகக் கூறும் என்றல்லவா சானகி கூறினுள். வளப்புண்ட பாசத்திலும் வளர்த்த பாசம் மிகுதி என்பதைத்தானே இது காட்டுகின்றது. அம்முறையில்தான் நாயகியின் தாயும் தன்னைவிடப் பூவைகள் தன் மகளுக்கு அந்தரங்கம். அவள் பரிவு அவற்றினிடம் மிகுதி என்ற முறையிலே பூவைகளைக் கேட்கிருள்.

(தொடரும்)

# பழனி ஆண்டவர் கீழ்த்திசைக் கலைக் கல்லூரி

பழனி ஆண்டவர் கீழ்த்திசைக் கலைக்கல்லூரியைச் சார்ந்த புதிய கட்டிடத்தை இந்து சமய எண்டோமெண்ட் கமிஷன் தலைவர் டாக்டர் சர், சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் 9-6-61 காலை 9-மணிக்குத் திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்கள், கமிஷனின் மற்ற உறுப்பினர்களும் வருகை தந்தார்கள். பழனி கோயில் அறங்காவலர் குழுத்தலைவரும் கல்லூரி ஆட்சிக்குழுத் தலைவருமான திரு. பி. எஸ். கே, இலட்சுமிபதிராஜா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். கல்லூரி முதல்வர் பேராசிரியர் திரு எஸ். ஆறுமுக முதலியார் அவர்கள் எல்லோரையும் வரவேற்று, கோயில் மற்றும் இதர நிறுவனங்களும் 1960-61-ல் ஆற்றியிருக்கும் பணிகளைப்பற்றியும் விளக்கிக்கூறினார்கள்.

டாக்டர் இராமசாமி ஐயர் அவர்கள் தம்முடைய உரையில், எண்டோமென்ட்ஸ் கமிஷனின் தலைவர் என்ற முறையில் வந்திருந்து கட்டிடத்தை திறந்துவைக்க வாய்த்தமைக்கு மிகவும் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். மேலும் பழனி கீழ்த்திசைக் கலைக்கல்லூரி, இந்தியாவிலேயே ஒப்புயர்வற்ற (சென்னை) சர்வகலாசாலையால் அங்கீகரிக்கப்பெற்ற ஒரே ஒரு கல்லூரி என்றும், மூன்றாண்டு பி. ஏ. படிப்பு போன்ற கீழ்த்திசைக் கலைகளையும் பொதுக் கல்வியையும் பயிற்றுவிப்பதை வெகுவாய்ப் பாராட்டினார்கள்.

**கீழ்த்திசைக்கலை** (Oriental Culture Under Group A)

1. இந்திய மனோதத்துவம் (வேதம், உபநிடதம், ஆறு இந்திய மனோதத்துவ முறைகள் முதலியன)
2. சைவ, வைணவ ஆகமத்தின் குறிக்கோள்கள்.
3. இந்தியக் கலாசாரத்தின் வரலாறு.
4. கோயில் சிற்பங்கள், வண்ணங்கள் (Paintings) உருவங்கள், இசை முதலிய நுண்கலைகள்.

**துணைப்பாடங்கள்** Ancillary Group B

1. மனித இன வரலாறு (Physical Anthropology), நிலநூல் (Physical Geography)
2. மற்றும் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம்.

நூல் அறிவோடு மட்டும் அமையாமல் கடவுள் வணக்கம், வழிபாடு, பக்திப்பாடல்கள் பாடுதல் முதலியவைகளில் பயிற்சியளிப்பதைப் பாராட்டினார்கள். மதச்சார்பற்ற அரசாங்கத்தில், கலாசாலைகளில், பொதுக் கல்வியோடு சமயக் கல்வியையும் பயிற்றுவித்தல் பற்றி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். மதச்சார்பற்ற அமெரிக்க ஐக்கிய நாட்டின் ராஜ்யங்களின் செயலாளராகவிருந்த காலஞ்சென்ற திரு. ஜான் பாஸ்டர் டல்லஸ் என்பவரும் சமயத்துறை பட்டதாரியாவார்கள் (Bachelor of Divinity) இம்மாதிரியான நல்ல காரியங்களில் சங்கராச்சாரிய மடம், இராமகிருஷ்ண மடம், தருமபுரமடம் முதலியவைகள் ஒன்று கூடி பணியாற்ற வேண்டுமென்றார்கள். பழனியில் இப்படி சிறப்புக்குரிய கல்லூரியை துவக்கியமைக்கும் அறநிலைய அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களையும் அறநிலையத்துறை ஆணையர் அவர்களையும் சென்னை சர்வகலாசாலையையும் ஏனைய நிர்வாகிகளையும் பாராட்டினார்கள்.

திரு வி. வி. சி. ஆர். முருகேச முதலியார் அவர்களின் நன்றி நவிலலுடன் விழா முடிவுற்றது.

அன்று மாலையில் அறநிலையத்துறை ஆணையர் உயர்திரு எம். எஸ். சாரங்கபாணி முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்கள் மேற்கு கிரிவீதியில் கோயிலின் புதிய பசுமடத்தைத் திறந்துவைத்தார்கள்.

# திருநாவுக்கரசு நாயனர்

[வித்துவான். திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்.]

(சென்ற இதழின் தொடர்ச்சி)

### திலகவதியார் திருமணப் பேச்சு

மருணீக்கியார் இங்ஙனம் வளர்ந்துவரும் நாளில், அவர்தம் தமக்கையாராகிய திலகவதியார் பன்னிரண்டாண்டு அகவையுடையராய்த் திருமணப் பருவத்தை எய்திஞர். அப்பொழுது, அவர்தம் குலத்திற்கும், குடிக்கும் ஒத்தவராகிய 'கலிப்பகையார்' என்பவர், அவரைத் தமக்கு மணம் பேசுமாறு பெரியோர் சிலரைப் புகழனர்பால் விடுத்தார்.

கலிப்பகையார் சிவபிரானிடத்தில் மெய்யன்புடையவர்; அதனுடன் அரசனிடத்தில் அருளுள்ளம் உடையவராய், அவனுக்கு உற்றுழி உதவும் தன்மைவாய்ந்தவர். மிக்க அழகுபடைத்தவர். அவருக்குத் திலகவதியாரைத் தருமாறு பெரியோர்கள் கேட்க புகழனர், அவரது குணநலங்களையும் குலநலங்களையும் அப்பெரியோர்கள் வாயிலாக அறிந்து, திலகவதியாரை அவருக்கே கொடுப்பதாக, மிக்க மகிழ்ச்சியுடன் உடன்பட்டார்.

### கலிப்பகையாரது செயல்

புகழனரது உடன்பாட்டினைப் பெரியோர்கள் கலிப்பகையாருக்குத் தெரிவித்தனர். அவரும் மகிழ்ச்சியுற்றுத் திருமண முயற்சியில் ஈடுபட்டார். ஆனல், திருமணம் நிகழ்வதற்குள், அரசன்மீது வடநாட்டு அரசர் சிலர் படையெடுத்து வந்தனர். அதனையறிந்த அரசன் கலிப்பகையாரையே அவர்மீது ஏவினன். அதனல், அவர் அவ்வரசர்மீது போருக்குச் சென்ருர். சென்றவர் அங்கே நெடுநாள் தங்கிப் போர்புரியவேண்டியதாயிற்று. அதனல், அவர் பலநாள் போரிலேயே ஈடுபட்டிருந்தார்.

### துன்ப வரவு

### தந்தையார் மறைவு

கலிப்பகையாரது செயல் அவ்வாருக, திருவாமூரிலே திலகவதியார் தந்தையார் புகழனருக்கு இவ்வுலக வாழ்க்கை முடிவெய்தும் நாள் வந்தடைய, முன்னை வினையின் பயனுக, அவர் நோய்வாய்ப்பட்டு, விண்ணுலகை அடைந்தார்.

### தாயார் மறைவு

புகழனர் உயிர்நீத்த பின்பு, அவர் மனைவியாராகிய மாதினியார் தாம் உயிர்வாழ விரும்பாதவராய், சுற்றத்தாருடன் மக்கள் இருவரையும் பொருளாக நினையாதுவிட்டு நீங்கி, அவ்வுலகிலும் தம் கணவருடன் வாழச் செல்வதாகிய கற்பு நெறியினின்றும் தவருது, உடன் உயிர்துறந்தார்.

### மக்கள் துயரம்

தந்தையாரும், தாயாரும் ஒருசேர நீங்க' திலகவதியாரும், மருணீக்கியாரும் செய்வதறியாது, சுற்றத்தாருடன் துன்பக் கடலுள் அழுந்தினர். பின்பு சுற்றத்தார் தேற்ற ஒருவாறு மனம் தேறி, இறந்த பெற்ருேருக்குத் தாம் செய்ய வேண்டிய இறுதிக் கடன்கள் பலவற்றையும் செய்து முடித்தனர்.

### கலிப்பகையாரது பெருமிதச் சாக்காடு

இஃது இங்ஙனமாக, கலிப்பகையார், 'பகைவரை அழித்து அரசனுக்கு வெற்றியை உண்டாக்கவேண்டும் என்னும் அவாவினல் ஆண்மையுடன் பலநாட்கள் போர்புரிந்து, இறுதியில் வீரமரணம் எய்திஞர். இவ்வீர மரணத்தைச் சேக்கிழார், "பொருவாரும் போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ் கொண்டார்" என மிக அழகாக விளக்கியுள்ளார்.

### திலகவதியார் உயிர்விடத் துணிதல்

'தண்டிற் போனல் இரண்டில் ஒன்று' என்னும் பழமொழிப்படி, கலிப்பாகையார், 'வெற்றி பெற்று மீளுதல், உயிர் கொடுத்துப் புகழ் கொள்ளுதல், என்னும் இரண்டில், உயிர்கொடுத்துப் புகழ்கொள்ளும் கடமையை முடித்த செய்தியைப் பலரும் சொல்லத் திலகவதியார் கேட்டார், அதனல் அவர் ஆற்ருெணுத்துயருற்று, "என் தந்தையாரும் தாயாரும் என்னை அவருக்கே கொடுப்பதாக

இசைந்துவிட்டமையால், நான் அவருக்கே உரியபொருளாகி விட்டேன்; ஆகையால், என் உயிரை அவர் உயிருடன் சேரச் செய்வதே முறையாகும்' என்று சொல்லி, உயிர் விடத்துணிந்தார்.

### மருணீக்கியார் புலம்பல்

தாயின் குணம் மகளிடத்துக் காணப்படுதல் இயல்பேயன்றோ! மாதினியார் தாம் நெடுநாள் கூடிவாழ்ந்த கணவர் இறந்தபொழுது, உடன் உயிர்துறந்தார்; அவர் மகளார் திலகவதியார், மணம் முடிக்க இசைந்திருந்த அளவிலே இறந்த கணவருடன் உயிர் விடத் துணிந்தார்; என்னே தொல்குடிப் பிறப்பின் தூய்மை!

தந்தை தாயர் மறைந்து துன்பம் மறக்கப்படுவதற்கு முன்பே, தமக்கையாரும் உயிர் விடத் துணிந்த நிலையைக் கண்ட மருணீக்கியார் இடிமேல் இடிவிழப்பட்டவர்போலாகி, ஓடிச்சென்று, தமக்கையாரது திருவடிகளில் விழுந்து, 'ஓ' வென்று அழுது, 'தந்தையாரும், தாயாரும் மறைந்தபின்னும் நான் உயிர் வாழ்ந்துகொண்டிருப்பது, உம்மை வணங்கப் பெறுதலினாலேயாகும்; இனி, நீரும் என்னைத் தனியாகவிட்டுச் செல்வதாயின், உமக்கு முன்னே நான் உயிர்துறப்பேன், இஃது உறுதி' என்று சொல்லிப் பெருந்துன்பத்தில் மூழ்கினவராய்ப் புலம்பினார்.

### திலகவதியார் மனைத்தவம்

அதனைக் கண்ட திலகவதியார், தம் தம்பியார் நிலைக்குப் பெரிதும் இரங்கினார். 'தம்பியார் உயிர்விடுதல் கூடாது' என்று நினைத்தார்.

மருணீக்கியார், அவர் குடிக்கு ஒரே மகனாராவர். ஆகவே, அவர் உயிர்துறப்பின் அக்குடி விளங்காது மாய்ந்தொழியும். இன்னும் அவர் உயிர்வாழ்வாராயின், அவர் குடிக்கேயன்றி, உலகிற்கும் எத்துணையோ நன்மைகள் உளவாதல் கூடும். அன்றியும் மாதினியார் உயிர்துறந்ததும், திலகவதியார் உயிர்துறக்கத் துணிந்ததும், அவர்கள் தங்கள் கணவரை அடைதற் பொருட்டுச் செய்த, செய்யத் துணிந்த அறச் செயல்களாகும். ஆனால், மருணீக்கியார் உயிர்விடுவாராயின் அஃது அறச்செயலாகாது, துன்பம் பொறுக்கலாற்றாது செய்துகொள்ளும் தற்கொலையாய், மறச்செயலாகும். அதனால், அவர் மறுமையிலும் தீக்கதியிற் புகுந்து துன்புற நேரிடும். திலகவதியார் உயிர்விடுவாராயின், அஃது இத்துணைத் தீமைகள் நிகழ்தற்கு ஏதுவாகும். இனி, அவர் உயிர்விடாதிருப்பாராயின் அஃது இத்துணைத் தீமைகள் நீங்குவதற்கு ஏதுவாதலோடு, பற்பல நன்மைகள் விளைதற்கும் ஏதுவாகும்; அறிவிலும் பண்பிலும் சிறந்தவராகிய அம்மையார் இவற்றையெல்லாம் நெடிது நினைந்திருத்தல் வேண்டும். அதனால், அவர், தாம் தம் உயிரைத் தம் கணவனார் உயிரோடு இசைவிப்பது என்று கொண்ட முடிபினை மாற்றிக்கொண்டு, அதனை அறவே கைவிட்டார். ஆகவே 'தம்பியார் உயிர்வாழ வேண்டும்' என்று அவர்மீது திலகவதியார்க்கு உண்டாகிய அருள், தாம் தம் கணவருடன் இன்ப உலகிற் சென்று இனிதுவாழவேண்டும் என்றெழுந்த பேரார்வத்தினை அறவே நீக்கி விட்டது என்பது விளங்கும். இதனைச் சேக்கிழார்,

"தம்பியார் உளராக வேண்டும் என வைத்ததயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க"

என்றருளிச் செய்தார்.

இங்ஙனம் திலகவதியார் தம் தம்பியார் பொருட்டாக உயிர்விடுதலை ஒழித்தாராயினும், அவர்பொருட்டுத் தம் உயிரைச் சுமை சுமப்பதுபோலச் சுமந்து கொண்டு கைம்மைக் கோலத்தினை மேற்கொண்டு எல்லா உயிர்களிடத்தும் அருளுடையவராய், அகத்தை விட்டு வெளியே செல்லாது அடங்கியிருந்து உற்றநோய் நோன்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையுமாகிய நோன்பினை இடையறாது காத்து இருந்தார். இதனைச் சேக்கிழார்,

"..........................உயிர்தாங்கி
அரும்பொன்மணி நூல்தாங்காது அனைத்துயிர்க்கும்
அருள் தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதியார் இருந்தார்"

என்று நயம்படக் கூறினார்.

### திலகவதியாரது கற்பின் தனிச்சிறப்பு

தம்மை ஒருவன் தனக்கு உரிமையாகக் கொண்டபின்னர், அவனுடன் பலநாட்களோ அன்றிச் சிலநாட்களோ கூடியிருந்து, அதனால் வளர்ந்த அன்பு காரணமாக, அவன் இறந்த உடன் தாமும் இறத்தல், அல்லது கைம்மை நோன்பு நோற்றல் என்பவற்றை மேற்கொள்ளும் மகளிரை நாம் கேட்டும்

கண்டும் இருக்கின்றோம். இனி, தாமே காதலித்த கணவன் பொருட்டு அக்காதல் காரணமாக உயிர்விடும் மகளிரும் உளர். ஆயினும், திலகவதியாரைப் போலத் தாம் நேரில் கண்டறியாத ஒருவனுக்கு மணம் செய்து கொடுப்பதாகப் பெற்றோர் செய்த முடிவு காரணமாகவே, அவன் இறந்தவுடன் தாமும் உயிர்துறத்தல், அது தடைப்பட்ட போது கைம்மை நோன்பு நோற்றல் என்ப வற்றை மேற்கொண்ட மகளிரை நாம் எங்கும் என்றும் கேட்டும் அறிந்தோமில்லை. அங்ஙனமாகவே, அத்தகைய திலகவதியாரது கற்பின் சிறப்பினை, நாம் என்னென்றறிந்து புகழ வல்லோம்!

## மருணீக்கியாரது அறச்செயல்

தமக்கையார் உயிர்வாழ ஒருப்பட்டமை யறிந்து, மருணீக்கியார் மனக்கவலை நீங்கினார். பின்பு, செழுங்கலைகள் கற்றுணர்ந்தவராகிய அவர் நெஞ்சத்துச் சிறிதும் அவலமின்றி ஆக்கைக்கே இரைதேடி உண்டு உறங்கி வாளா மாய்ந்து மண்ணாகிக் கழியும் பொது மக்களது வாழ்க்கைமுறை, நீரில் எழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்போல நிலைபேறின் றித் தோன்றி மறையும் தன்மையுடையதாய், யாதொரு பயனையும் தாரா தொழிதலை உணர்ந்து, நிலைத்த பயனைப் பெற விரும்பித் தமது பொருளைக்கொண்டு அறங்கள் பல செய்வாராயினார்.

அறச்சாலைகள் பலவற்றை அமைத்தார்; ஆங்காங்கு தண்ணீர்ப் பந்தல்கள் வைத்தார்; நிழல்தரும் மரங்களை வளர்த்துச் சோலைகள் உண்டாக்கினார்; குளங்கள் வெட்டினார்; தம்மையே பற்றுக்கோடாக வந்து அடைந் தவர்களுக்கு அவர்கள் வேண்டும் உதவிகளைச் செய்தார்; விருந்தினரை நன்கு உபசரித்தார்; புலவர்கட்குப் பரிசில்கள் வழங்கினார்; எங்கி ருந்து யார்வந்து வறுமையினால் துன்பம் உற்று இரந்தாலும், அவர்கட்கு இல்லை என்னாது ஈயும் ஈகையில் தலைசிறந்து விளங் கினார்.

## துறவுள்ளம்

இவ்வாறு சிலநாட்கள் செல்ல, மருணீக்கி யார், உலகியலை நிலைபெறுத்தும் வகையில் இங்ஙனம் ஒப்புரவு செய்து வாழும் இல்வாழ்க் கைச் செயல்களும் பிறப்பிறப்பை நீக்கி, என்றும் ஒருபெற்றியாய் நிற்கும் நிலையைத் தாராமையை உணர்ந்து, 'இந்நிலையாமையை யுடைய இல்வாழ்க்கைக்கு உரியனாகேன்யான்' என்று, பற்று முற்றும் நீங்கினவராய், மணம் புரிந்துகொண்டு இல்வாழ்க்கையை மேற் கொள்ளுதலை ஒழித்து, துறவு வாழ்க்கை யையே மேற்கொண்டு, உயிர்க்கு உறுதி பயக்கும் சமய நெறியிலே செல்ல விழைந் தார்.

## அயல் நெறியிற் செல்லுதல்

விழைந்த அவர், சைவ நன்னெறியே நன் னெறியென உணர்ந்திருந்தாராயினும், சிவ பிரானது திருவருள், அந்நெறியிலே அவரை நிற்பியாது, சமணசமயத்திற் செலுத்தினமை யால், அவர், அஞ்ஞான்று, தனது உள்ளீ டற்ற நிலை மக்கட்குத் தோன்றாதவாறு, 'கொல்லாமை' என்னும் அறத்தினுள்ளே மறைந்து உலாவிய சமண சமயத்திலே செல்லத் துணிந்தார். இதனைச் சேக்கிழார்,

"நில்லாத உலகியல்பு கண்டுநிலை யாவாழ்க்கை
அல்லேன்என் றறத்துறந்து சமயங்களானவற்றின்
நல்லாறு தெரிந்துணர்ந்தும் நம்பர்அருளாமையினாற்
கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயம்
குறுகுவார்"

என்று அருளிச்செய்தார்.

## மூவகை நிலை

இவ்வாறு நிகழ்ந்த மருணீக்கியாரது வரலாற்றில், அவர் மூவகை நிலைகளில் நின்ற மையைச் சேக்கிழார் வகுத்துக்காட்டியிருத் தலை உணரலாம். அவை தேசநெறி, உலகி யல், சமய நெறி என்பனவாம். "தேசநெறி நில்லாமை கண்டு அறங்கள் செய்வாராய்" என்றமையால், அவர் முதற்கண் தேசநெறி யிலே சிறிது நின்று, பின்னர் அதனை விடுத்து அறநெறியிலே சென்றார் என்பதும், "நில் லாத உலகியல்பு கண்டு நிலையாவாழ்க்கை-அல்லே னென்று அறத்துறந்து சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்துணர்ந்தும்" என்றதனால், பின்பு அந்நிலையினின்றும் நீங்கிச் சமயநெறியிற் சென்றார் என்பதும் பெறப்படுகின்றன.

தேச நெறியாவது, வேறொன்றையும் கருதாது, உடல் ஓம்புதல் ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு, அதன் பொருட்டு

உழைத்து, உண்டு உடுத்து வாழ்தல், இஃது இம்மை ஒன்றையே நோக்கியதாகும். இதுவே பொதுமக்கட்கு உரியநிலை. 'தேசநெறி' எனினும், 'நாட்டு முறைமை' எனினும் பொருந்தும். இக்காலத்திலும் 'தேசியவாதிகள்' என்பார், 'மக்கள் அனைவர்க்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் முதற்கண் வேண்டும்; அவற்றிற்குப் பின்னர்த் தான் மற்றைய நல்லவை தீயவையாவும்' என்றுரைத்தலைக் காணலாம். இந்நிலையில் இருப்பவரையே, மாணிக்கவாசகர் "நாடவர் பழித்துரை பூணதுவாக", "நாட்டார் நகை செய்ய நாம் மேலை வீடெய்த", "நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப" என்றாற்போலும் இடங்களில், "நாடவர்" எனவும், "நாட்டார்" எனவும் குறித்துப் போதலையறியலாம். உண்டு உடுத்து உடலோம்பும் வாழ்க்கை பலராலும் கொள்ளப் படுவதேயாயினும், அதனை முதன்மையாக வைத்து ஏனைய எல்லாவற்றையும் அதன் வழிப்படுத்திக் காணுதல் பொதுமக்கட்குரியதென்பது உணர்ந்துகொள்க. நல்லறிவு சிறிதாயினும் வாய்க்கப் பெற்றார், இந்நெறியினை வெறுத்து, இதனின் மேம்பட்ட நெறிகளில் உள்ளத்தைச் செலுத்துவராதலின், மருணீக்கியாரும், மிக எளிதிலே அதனை வெறுத்தொதுக்கினர்.

இனி, அறவாழ்க்கையையே 'உலகியல்பு' எனக்கூறினர் என்பது, மேற்காட்டிய பகுதிகளை நோக்கின் நன்கு விளங்கும். ஆகவே, உலகியலாவது, உண்டு உடுத்து, உடலோம்பி வாழும் வாழ்க்கை விலங்கு வாழ்க்கையோடு ஒக்குமல்லது, மக்கள் வாழ்க்கையாகாது; உடற்கு உறுதிதேடுதலோடு உயிர்க்கும் உறுதிதேடுதல் வேண்டும் என்றுணர்ந்து, 'விருந்து புறத்ததாத்தானுண்டல் சாவா— மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று", "இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய-தாமே தமியர் உணல்", "ஒப்புரவினல் வரும் கேடெனின் அஃதொருவன்—விற்றுக்கோள் தக்கதுடைத்து" என்றாற்போலும் அறவுரைகளைக் கேட்டு, தன்னலத்தினை முதன்மையாகக் கொள்ளாது, தன்னலம் கெடுவதாயினும் அதற்கு உடம்பட்டு, விருந்து புறந்தரல், வறியார்க்கொன்றீதல், அற்றார் அழிபசி தீர்த்தல், ஊருணி நீர் நிறைந்தாற்போலத் தம் செல்வம் பலர்க்கும் பயன்படுமாறு வாழ்தல் என்னும் இந்நிலையாகும். இஃது இம்மையோடு மறுமையும் நோக்கியதாகும், இதுவே நன்மக்கட்கு உரியது. அதனால், மருணீக்கியார் தம் குடிக்குத்தாமே தலைவராய காலத்து இந்நிலைக்கண் நிற்பாராயினர். இந்நிலை, முயற்சியால் பொருளையீட்டி அதனைக் காத்து வாழ்வதாகிய இல்வாழ்க்கைக்கே உரியதாகும் என்பது சொல்லவேண்டா.

இனி, மூன்றாவதாகிய சமய நெறியாவது இம்மை மறுமை இன்பங்களே உயிர்க்கு உறுதியாவன அல்ல; ஏனெனில், அவை துன்பத்தோடு கூடினவாய், நிலையா தொழியும் தன்மையன. ஆகையால், பிறவிப் பெருங்கடலைக் கடந்து மீண்டும் பிறவாநிலை எய்தும் பேரின்பமே உண்மையில் உயிர்க்கு உறுதியாவது என்றுணர்ந்து, கட்டுவீடுகளின் நிலையையும், கட்டு நீங்கி வீடெய்தும் முறையையும் அறிந்து அவ்வாற்றில் நிற்கும் நிலை. இது மக்கட்டன்மையின் மேம்பட்ட கடவுட்டன்மை வாய்ந்த பெருமக்கட்கே உரியதாகும். இஃது உலகியலின் நீங்கிய துறவு நெறியேயாகும் என்பது வெளிப்படை. அதனால், பெருமக்களுட் சிறந்த பெரியாராகிய மருணீக்கியார், "நிலையாவாழ்க்கை அல்லேன்" என்று அறத்துறந்து, சமயங்களை உணர்ந்தொழுகப் புகுந்தார்.

மருணீக்கியாரது வாழ்க்கை முறை இங்ஙனம் படிமுறையாக உயர்ந்தோங்கிய தன்மையை நோக்குமிடத்து, உயர்ந்த குறிக்கோளோடு கூடிய அவரது தூய மனப்பான்மை நன்கு விளங்கும்.

இனி, 'மருணீக்கியார் சைவ நெறியே நன்னெறி என்று உணர்ந்திருந்தார் எனின், அயல் நெறியிற் செல்லார் அன்றோ' என ஐயுற்று, மேற்காட்டிய "நில்லாத உலகியல்பு" என்னும் செய்யுளில், 'சமயங்களான வற்றின்—நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினல்" எனச் சிலர் பாடம் வேறாக ஓதுவர். அது, திருநாவுக்கரசரை, அவர் சமண சமயம் சென்று மீள்வதற்கு முன்னர்ச் சிவநெறியைப்பற்றி யாதும் அறியாதவராகவும், அதன் ஒழுக்கத்தோடு சிறிதும் தொடர்பில்லாதவராகவும் செய்துவிடும். உண்மையில் நாயனர் அவ்வாறிருந்தவரல்லர்.

(தொடரும்)

### *சிவப்பிரகாச சுவாமிகள்*

அருளிச் செய்த

# நால்வர் நான்மணி மாலை

**(சிதம்பரம் - ஈசானியமடம் இராமலிங்கசுவாமிகள் உரை)**

—:※:—

(முன் தொடர்ச்சி)

**கொள்ளைக் கதிர்முத்தின் பந்தருஞ் சின்னமுங் கொள்ளுமொரு**
**பிள்ளைக் கதுதகு நாவர சாயபெருந்தகையோய்**
**கள்ளைக் குவளை யுமிழ்வீழி யிற்படிக் காசொன்றுநீ**
**வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென் வாங்கினையே.**

*(இ-ள்.)* நாவரசு ஆய பெருந்தகையோய் - வாகீசரென வியக்கும் பெருந்தகைமை வாய்ந்தவரே! - வள்ளை குழை உமை பங்கு ஆளர் கையில் - வள்ளை யிலை போலும் காதுகளையுடைய அம்பிகை பாகராகிய அண்ணலார் பக்கலில்-கொள்ளை கதிர் முத்தின் பந்தரும் சின்னமும் கொள்ளும் ஒருபிள்ளைக்கு-திருப்பட்டீச்சரத்திலே, செறிந்த கிரணங்களைப் பரப்பும் முத்துப் பந்தரும், திருவரத்துறையிலே, முத்துச் சின்னமும் ஏற்ற ஆளுடைய பிள்ளையார்க்கு, - கள்ளை குவளை உமிழ் வீழியில் படிக்காசு ஒன்று அது தகும் - தேனைக் குவளைமலர்சொரியும் திருவீழிமிழலையிலே, படிக்காசொன்று ஏற்றலதுவும் பாங்காகும், - நீ என் வாங்கினை - தேவரீர் - (அப்பிள்ளைபோல் அப்படிக்காசொன்றை) யாதுக்குப்பெற்றீர்? - (இறைவராஞ்ஞை மறுத்தற்கு அஞ்சியோ?) எ-று.

இத்தலம் எவர்க்கும் இன்பம்பயப்பதொன்றென்பார், அதனையுள்ளுறையாக்கி 'கள்ளைக்குவளையுமிழ்வீழி' என்றும், வேனில் வெப்பகலயாண்டும் வெண்கதிர் பரப்பு மிகக்குளிர்செய்வதென்பார், 'கொள்ளைக்கதிர்முத்தின்பந்தர்' என்றும் இறைவர்க்குரிய புதல்வரிருவருள் இளைய பிள்ளையாரவதாரமிவரென்பார், 'ஒரு பிள்ளை' என்றும், தந்தையரீவதை உவந்து பெறுவது தனயர்க்கியல்பாகலின் முத்துப் பந்தர் முதலியபோலப் படிக்காசொன்றை யேற்றலும் முறைமையேயென்பார், 'அது தகும்' என்றும், நாவின்செல்வமுடைமையின் நாவுக்கரசென நம்பெருமானருளப் பெற்றமையன்றி, அறிவாலும், காலத்தாலும் சீலத்தாலும் முதிர்தலின் அப்பிள்ளையும் அப்பரென முறைகொண்டாட இறப்ப உயர்ந்தவரென்பார், - 'நாவரசாய பெருந்தகை' என்றும் இத்துணைப் பெருஞ் சிறப்பேய்ந்து கந்தையு மிகையெனக்கருதுங் கருத்துடைமையின் அவாவறுதலென்னும் அருஞ்செல்வமுடைய தேவரீர் அப்பிள்ளைபோல ஓர்காசேற்பது உரிமைகொலோ வென்பார், 'என்வாங்கினை' என்றும் கூறினர்.

எனவே, இஃதென்சொல்லியவாறோவெனின்:— இறைவரருட்செல்வத்தையன்றி மற்றெவற்றையும் விழையாத இச்சொல்வேந்தர் ஓர்காசேற்றமை - [1]"கால நிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்டமுறீரெனினும் - ஏலவும்மை வழிபடுவார்க் களிக்க வளிக்கின்றோம்' என்றிறைவர் பணித்த ஆஞ்ஞையைமறுத்ததற்கு அஞ்சியே போலும் என்றவாறு. கொள்ளை மிகுதி. உம்மைகளிரண்டும் முத்துச் சிவிகை முத்துக்காளம் முத்துத்தாரை பொற்கிழி முதலியவும் தழீஇ நிற்றலின் எச்சவும்மைகள். கொள்ளுமென்பது கால மயக்கம். [2]"முற்படக் கிளத்தல் செய்யுளுளரித்தே", என்பதனால் அதுவென்னுஞ் சுட்டு வழுவமைதியாய் முன் வந்தது. படிக்காசு — படியில்வைக்கப்படுங்காசு. வள்ளை பொருளாகுபெயர். கை - இடம்.

1. பெரியபுராணத்தில் வாகீசமூர்த்திபுராணம் —உ.
2. தொல்காப்பியச் சொல் - ௩௬.

என்னென்புழி நான்கனுருபுதொக்கது.
ஏகாரம் அசை. இறைவராஞ்ஞையை
மறுத்தற்கஞ்சியோவென்பது குறிப்பெச்
சம்.

ஒருபிள்ளையென்பதனை [1]"ஈசர் மிழலை
யிறையவர் பாலிமையப் பாவை திரு
'முலைப்பா – றேச முய்ய வுண்டவர்தாந்
திருமா மகனு ராதலினுற்-காசுவாசியுடன்
பெற்றார் கைத்தொண்டாகு மடிமை
யினல் - வாசியில்லாக் காசுபடி பெற்றுவந்
தார் வாகீசர்" என்பதனுலும், நாவுக்கர
சென்பதனை [2]"மேவுற்றவிவ் வேலையி னீடி
யசீர் வீரட்டமமர்ந்த பிரானருளப் -
பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளம்
பதிகத்தொடை பாடிய பான்மையினு -
ஞவக்கர சென்றுல கேழினு நின்னுமங்க
ணப்புற நண்ணுகவென் - றியாவர்க்கும்
வியப்புற மஞ்சுறை வானிடை யேயொரு
வாய்மையெழுந்ததுவே," என்பதனுலும்,
கந்தையுமிகையெனக்கருதுதலை [3]"சிந்தை
யிடையரு வன்புந் திருமேனி தன்னி லசை
வுங் - கந்தை மிகையாங் கருத்துங் கையுழ
வாரப்படையும்-வந்திழிகண்ணீர்மழையும்
வடிவிற் பொலிதிருநீறு - மந்தமி லாத்திரு
வேடத் தரசு மெதிர்வந்தணைய" என்பத
னுலும், அவாவறுதலே அருஞ்செல்வ
மென்பதனை [4]"வேண்டாமை யன்ன
விழுச்செல்வ மீண்டில்லை - யாண்டு மஃ
தொப்பதில்" என்பதனுலும், அருட்செல்
வத்தில் அவாவுதலுடைமையை [5]"சிவசம்
பத்திடைத் தவஞ்செய்து திரியும் பத்தி
யிற் சிறந்தவர் திலகன்" என்பதனுலும்
அறிக. (கo)

வாங்குசிலை புரையுமுட
    லெனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின்
    பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக்
    குலமகனை யாதி
த்ரோதாயி யென்னுமோரு
    வெந்திறற்கூற் றுவனு
லோங்குறுநா தாந்தமெனப்
    பெயரியவக் கரையி
னுமிழ்வித்துச் சிவமெனுமோர்
    தந்தையொடுங் கூட்டாய்
கோங்கமுகை கவற்றுமிள
    முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற்
    கொண்டவருட் கடலே.

(இ-ள்) கோங்க முகை கவற்றும்
இளமுலை பரவை மகிழ-கோங்கினரும்பை
ஏங்குதலுறுவிக்கும் இளமைவாய்ந்த
கொங்கைகளையுடைய பரவைநாச்சியார்
குதூகலிக்கும்படி-முன் குண்டையூர் நெல்
மலை கொண்ட-முன்பு குண்டையூரிற்
செறிந்த நென்மலையைப் பூதங்கள்
கொணர்ந்து திருவாரூரிற்குவிக்கப்பெற்ற,
அருட்கடலே-கருணைக்கடலாகிய நம்பியா
ரூரரே!-வாங்கு சிலை புரையும் உடல் எனும்
குளத்தில்-வளையும் வில்லை நிகர்க்கும் தேக
மெனப்படும் மடுவிலே,-மூலமலம் எனும்
ஓர் வெங்கரவின் பகுவாயின் நின்றும்
மூலமலமெனப்படும் ஒரு வெள்
ளிய முதலையின் விரிந்தவாயினின்றும், –
தீங்கு இல் உயிர் எனும் பனவக்குலம்
மகனை-அழிவில்லாத உயிரெனப்படும் அந்
தணகுலப்புதல்வனை - ஆதி திரோதாயி
என்னும் ஒரு வெந்திறல் கூற்று
வனுல்-தொடக்கத்தே திரோதானசத்தி
யெனப்படும் ஒப்பற்ற வெவ்விய வலிய
இயமனுல்–ஓங்குறும் நாதாந்தம் என
பெயரிய அக்கரையின் உமிழ்வித்து -
உயர்ந்த நாதாந்தமெனப் பெயர்பெற்ற
அக்கரையிலே கக்குவித்து, சிவம் எனும்
ஓர் தந்தையொடும் கூட்டாய்-சிவமெனப்
படும் ஒரு பிதாவோடும் சேர்ப்பீராக
(எ-று.)

அறிதலுண்மையிற் குறித்துவந்தா
ரும் அஃதின்மையிற் குறியாது வந்தாரு
மாகிய இருதிறவிருந்தினரையும் இனி
தூட்டியுபசரிக்கும் நாச்சியார் அதற்குரிய
சாதனமிகுதி கண்டுழி, இல்லத்திற்கு
வேண்டுவசேமித்து, ஏனையவற்றை
எவருங்கைக்கொள்வான் பறையறைந்து
உவந்தனரென்பார் 'பரவை மகிழ'
என்றும்,இம்மைக்குரிய மும்மைவளத்துள்
பெண்வளமும் பொன்வளமுமேயன்றி
மண்வளமும் இறைவர் மிகவழங்கப்பெற்

1. ஷை வாகீசமூர்த்தி புராணம் - உசுo.
2. ஷை - எச.
3. ஷை யில் சம்பந்தமூர்த்தி புராணம் - உஎo.
4. திருக்குறள் - சுந.
5. திருநாவுக்கரசுவேதர் திருவேகாதசமாலை-
கம்.

றனரென்பார், 'நென்மலைமுற்கொண்ட' என்றும், மனிதரைப்பாடி வாணாள் வீணாக்காது தம்போல இறைவரைப் பாடி இம்மையின்பெய்தி இடரகன்று சிவகதி பெறுவான் அறிவுடையார்க்குச் செவியறிவுறுத்த திருவருட்சால்பினரென்பார், 'அருட்கடல்' என்றும், நிலைபேறின்றித் தோன்றியழிதன்மாலையதாகலின் இவ்வுடல் இந்திரதனுவை நிகர்ப்பதென்பார், 'வாங்குசிலைபுரையும்' என்றும், [1]"தோலிடைப்-புகவிட்டுப்பொதிந்த புண்ணே புண்ணிடை-யூறு முதிரப் புனலோ கூறு செய்-திடையிடை நிற்குமெலும்போ வெலும்பிடை - முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்-துள்ளிடை யொழுகும் வழும்போமெள்ளநின்-றூரும் புழுவினெழுங்கோ நீரிடை-வைத்தமலத்தின் குவையோவைத்துக் - கட்டிய நரம்பின் கயிறோ வுடம்பிற்குட் - பிரியாதுறுக் கும் பிணியோ" அளவிலவாக, அவையெலாம்நிரம்பும் ஆழமும், அந்தக்கரண புறக்கரணங்களாதிய சலசரமுதலியவும் ஆர்ந்ததென்பார், 'உடலெனுங்குளம்' என்றும் ஆணவமலம் ஆகந்துகமன்றிச் சகசமாய், மற்றைக் கன்மமாயை யென்னும் இருமலங்கட்குமூலமாய், அநாதி பந்தமாயுள்ளதென்பார், 'மூலமலர்' என்றும், அது, உயிர்கடோறும் வெவ்வேறாய்ப் பந்திப்பினும் ஒன்றேயென்பார், 'ஓர்' என்றும், செம்பிற்களிம்பு போல உயிரின் குற்றமாய் அவ்வுயிரினறிவை விழுங்கிநிற்றலின் முதலையுறழ்வதென்பார், 'வெங்கரவு' என்றும் மலத்தின் செய்தியாகிய அம்மறைப்பினீக்குகவென்பார்,'பகுவாயினின்றும்' என்றும், மறைப்புண்டுகிடப்பினும் அநாதிநித்தமாகலின் அழிவின்றென்பார், 'தீங்கிலுயுர்' என்றும், உணர்த்தியக்கால் பிரமத்துவம் பெறுதற்குரித்தென்பார், 'பனவக்குலமகன்' என்றும், அவ்வுடலினீட்டிய வினைகளின்பயனை ஒருவாறு நுகர்விக்கும் இயமன்போன்று, சிருட்டி தொடங்கியே மலத்தின்வழிநின்று, அம்மலத்தின் காரியமாகிய மோகமுதலியவற்றைத் தொழிற்படுத்தும் சிவசங்கற்பத்திற்கு ஏதுவாதல்பற்றி மலமென்றுபசரித்துக் கூறப்படுவதாய், உயிரைத் தன் வசப்படுத்து வினைப்பயன்களை நுகர்வித்துப் பாகம் வருவிக்கும் திரோதான சத்தியெனப்படும் சிவசத்தியே பின் அருட்சத்தியாய் அம்மூலமலச்சத்தியை யொழித்துச் சிவத்தை யடைவித்தற் கேதுவாவதென்பார்,'திரோதாயியென்னுமோருவெந்திறற்கூற்றுவனால்' என்றும் ஊனக்கண்கொண்டுணரப்படாத நாதமுடிவே சிவநிலவுந் தானமாகலின் ஆங்குச்சேர்த்துக்வென்பார், 'ஓங்குறுநாதாந்தமெனப் பெயரியவக்கரையினுமிழ்வித்து' என்றும், அவ்வுடற் கேதுவாய்வரும் தந்தையர்போலாது சிவம் சர்வான்மாக்களுக்கும் தனுகரணபுவன போகங்களைத்தந்து உண்ணின்றுணர்த்தி உபகரித்து நிற்கும் தனித்தந்தையென்பார், 'சிவமெனுமோர்தந்தை' என்றும் உயிர் முத்தியினும் முதல்வன்போல ஐந்தொழிற்கும் வினைமுதலாகுமுரிமையின்றிச் சிவானுபாவமொன்றினுக்கேயுரித்தாய் முதல்வனின் வியாப்பியமாவதாகலின் அங்ஙனம் ஆக்குகவென்பார், 'கூட்டாய்' என்றும், உருவகித்துக் கூறினர்.

கராக்கவருயிரைமீட்டுத் தந்தைபாற் சேர்த்தலுடையீராகலின் இங்ஙனமியற்றின் எவரும் உய்வரென்றவாறு. கோங்கவென்புழி அகரம் ஆறும்வேற்றுமைப் பன்மையுருபு. முகையைக்கவற்றுவது முலைக்கில்லையாகவும் உளதாக வுபசரித்தது அதுபோன்றலர்தலின்மை குறிப்பித்தற்கென்க. வாலைப்பருவமுடைமை தோன்ற இளமுலைப் பரவையென்றார். வாங்குசிலையென்பது குறிப்பான் இந்திரதனுசை உணர்த்திற்று; உடற்குவமிக்கபடுவது அச்சிலையேயாகலான். புரையும் நிகழ்காலப் பெயரெச்சம். அல்லதூஉம், தனுவெனப் பெயரிய இவ்வுடல் இளமையிற் கூனுதலின்மையிற்றனுவை நிகர்த்திலதேனும் சின்னாளில் நிகர்த்திவிடுமென்பார், வாங்குசிலையுரைபுமென எதிர்காலத்தாற் கூறினாரெனினும் அமையும், எனப்படுமெனற்பாலது செயப்பாட்டுவினைப்பொருளுணர்த்தும் படுவிகுதி தொக்கு எனுமெனநின்றதென வருமிடந்தோறுங் கொள்க. கரவென்பது கரத்தலுடைமையிற் போந்த பெயராய் இரட்டுறமொழித

1. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை -௩௨.

லாய் நின்றது. ஆதிதிரோதாயியென்னு மெனவே, அந்தத்தில் அதுவே அருட்சத்தி யெனப்படும் என்றாராயிற்று. வெந்திறல்-கடத்தற்கரிய ஆஞ்ஞை. கூற்றுவனா லுமிழ்வித்தெனக்கூட்டுக. ஒடு கலப்புறு பொருட்கண் வந்தது; [1]"பாலொடுதேன் கலந்தற்றே' என்றாற்போல.

அறிவுடையார்க்குச் செவியறிவுறுத் தமையை [2]"தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ் சார்வினுந்தொண்டர் தருகி லாப்-பொய்ம்மையாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்கா-ளிம்மையே தருஞ் சோறுங்கூறையு மேத் தலாமிடர்கெடலுமா-மம்மையேசிவலோக மாள்வதற் கியாதுமையுற வில்லையே" என்பதனானும், மூலமலவியல்பை [3]"ஒன் றதா யநேக சக்தி யுடையதா யுடனாயா தி-யன்றதா யான்மா வின்றன் னறிவொடு தொழிலை யார்த்து-நின்றுபோத் திருத்து வத்தை நிகழ்த்திச்செம் பினிற்களிம்பேய்ந் தென்றுமஞ் ஞானங்காட்டு மாணவ மிசைந்து நின்றே. 'என்பதனானும், திரோ தாயியினியல்பை [4]"ஓங்குசிவ சத்திக்குப் பாசத் தன்மை யுண்மையெனா ரனைத்து மளிக் குறுமச் சத்தி-நீங்கலரு முயிர்ப்பாச தருமம் பற்றி நின்றுவழுங் குறுதலினாற் றிரோதமென்பர் - தாங்கலுறு பாசமென வுபசா ரத்தாற் சாற்றுவதாய் மூலமல சத்திநீக்கித்-தேங்கொளிய பராபரமுத் திகணல் குற்ற செயலினருட் சத்தியெனத் திகழு மன்றே" எனவும், [5]"மலங்கரும மாயை மாயேயந் திரோதம்-விலங்குமுயிர்க் கிவ்வைந்தும் வேறு. திரோதஞ்சிற்சத்தி சிறியார்க் கிவற்றால்-விரோதஞ்செய் தாக் கும்பின் வீடு. அன்னை கொதித்தடிக்க வல்லற் படுங்குழவி-பின்னவளா லார்வம் பெறும். ஈசனது சத்திமல மூன்றினையு மேவுதலாற்-பாசமென்னும் பேரதற்கு பாங்கு" எனவும் வருவனவற்றானும், உயிரை மீட்பதற்குக் கூற்றுவன் ஏது வாதலை [6]"உரைப்பா ருரையென் றெடுத்த திருப்பாட்டு முடியா முன்னுயர்ந்தவரைப் பான் மையினீ டடம்புயத்து மறலி மைந்த னுயிர்கொணர்ந்து-திரைப்பாய் புனலின் முதலைவயிற் றுடலிற் சென்ற வாண்டு களுந்-தரைப்பால் வளர்ந்த தெனநிரம்ப முதலை வாயிற் றருவித்தான்" என்பதனானும், நாதாந்தம் சிவநிலவுந்தான மாதலை [7]"காரணபங் கயமைந்தின் கடவு ளர்தம்பதங்கடந்து-பூரணமெய்ப் பரஞ் சோதி பொலிந்திலங்கு நாதாந்தத் தாரணை யாற் சிவத்தடைந்த சித்தத்தார் தனி மன்று ளாரணகாரணக்கூத்த ரடித் தொண்டின் வழியடைந்தார்" என்பதனானும், உயிர்சிவா நுபவமொன் றற்கே உரித்தாதலை [8]"செம்பிரத குளிகையினாற் களிம்பற்றுப் பொன்னாய்ச் செம்பொனு டன் சேருமலஞ் சிதைந்தாற்சிவ-னம்பனு டன் கூடுமெனிற் பொன்போலல்ல னற் குளிகை போலவர னணுகுமலம் போக்கி-யம்பொனடிக் கீழ்வைப்ப னருள்கலங்க மறுக்கு மக்குளிகை தானும்பொன் னாகா தாகு-மும்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரிய னுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றி னுக்கு முரித்தே." என்பதனானும் அறிக.

(கக)

கடனிற வண்ணன் கண்ணொன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து
மருமக ணறும் பூங் கருமயி ருதவியு
நென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்து
மகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியு
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதின் மூக்கினை யரிந்து
மிளமுலை மாதர் வளமை துறந்தும்

1. திருக்குறள்-ககஉக.
2. தேவாரம் திருப்புகலூர்.
3. சிவஞானசித்தி இரண்டாஞ்சூத்திரம்-அ0.
4. சிவப்பிரகாச விகாசம் பாசமரபு-கச0.
5. இறைவனூற்பயன் பசுசா தகவியல்-ருச-ருரு-ருசு-ருஎ.
6. பெரியபுராணம் வெள்ளானைச்சருக்கம்-கக.
7. பெரியபுராணம் சித்தத்தைச் ன்சிவ பாலேவைத்தார் புராணம்
8. சிவஞானசித்தி திபனோராஞ் சூத்திரம்-க0

பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மா றடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரில் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டன
னிருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலை மக டழுவ மனமகிழ் வோனே.

(இ - ள்.) செங்கண் மால் தடம் கையில் சங்கம் நாண - செந்தாமரை மலர் புரையச் சிவந்த கண்களையுடைய திருமாலின் பருத்தகரத்திலுள்ள பாஞ்சசன்னியம் நாணும்படி: முள் தாள் தாமரை முறுக்கு அவிழ் மலர்மேல் - கண்டகங்கள் செறிந்த தண்டையுடைய செந்தாமரைகளின் கட்டவிழ்ந்த மலர்களின் மீது-வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப-வலம்புரிச் சங்கங்கள்வதியும் திருவாதவூரில் அவதரித்த அன்பரே! கருங்கடல் வண்ணன் கண் ஒன்று இடந்து - கரியகடல்போலும் கவின்படைத்த திருமால் தங்கண்களிலொன்றைப் பெயர்த்து - மறை சிலம்பு அரற்றும் மலர் அடிக்கு அணிய-வேதச் சிலம்புகள் மிக்கொலிக்கும் வியாபித்த திருவடிக்களுக்குச் சாத்த-பரிதிகொடுத்த சுருதி நாயகற்கு-அவர்க்குச் சக்கரப்படையளித்த வேதமுதற் பொருளாகிய விமலருக்கு, முடி விளக்கு எரித்தும் - திருமுடியைத் திருவிளக்காக எரியச்செய்தும், கடி மலர் கோதை சுரிகுழல் கருங்கண் துணைவியை அளித்தும்-மனநிரம்பிய மலர்மாலையணிந்த சுருண்ட கூந்தலையும் கரியகண்களையுடைய (இல்வாழ்க்கைத்) துணையாகும் மனைவியை ஈந்தும், அருமகள் நறும்பூ கருமயிர் உதவியும் - அரியபுதல்வியின் பரிமளமிக்க அழகு பெற்ற கரிய அளகத்தை யளித்தும், நெல்முளை வாரி இன் அமுது அருத்தியும் — நீரின்மிதந்த நெற்களின் முளையைக் கொடுவந்து சமைத்த இனியவமுதூட்டியும் - கோவணம் நேர்தனை நிறுத்து கொடுத்தும் — கோவணத்திற்கு நிறையொக்கத் தன்னையும் நிறுத்துத் தந்தும், அகப்படும் மணிமீன் அரற்கு என விடுத்தும் - அரதனங்களானுறுப்பமைந்து அரிதுகிடைத்த பொன் மீனை அரனுக்குரித்தெனக் கடலில் விடுத்தும்-அரிவாள் பூட்டி ஊட்டி அரிந்தும்-அரிவாளைப் பூட்டி ஊட்டியையறுத்தும், உடை ஒலிக்கும் சிலையிடை தலை மோதியும் - ஆடையைத் துவைக்கும் கற்பாறையினிற் றலையைத் தாக்கியும், மொய் மலர்கோதை கைமலர் துணித்தும்-செறிந்த மலர்க்கூந்தலையுடை மனைவியின் செந்தாமரை மலர் சிவணும் கரத்தைச் சேதித்தும், தந்தையை தடிந்தும் — தம் பிதாவின் தாளைத் துணித்தும், மைந்தனை கொன்றும் - தம் புதல்வனைச் சமைத்தற் கரிந்தும், குற்றம் செய்த சுற்றம் களைந்தும் - சிவாபராதமியற்றிய சுற்றத்தவருள் ஓர் சிறுவனும் எஞ்சாவகை சிதைத்தும், பூ கொளும் மாதின் மூக்கினை அரிந்தும்-சிவபிரான்றிருமுற்றத்துச் சிந்திய மலரையெடுத்த நங்கையின் நாசியைக் கொய்தும், இளமுலை மாதர் வளமை துறந்தும் - இளங்கொங்கைகளையுடைய வனிதையர்பால் நுகரும் இன்பத்தை யொழித்தும் - பண்டைநாள் ஒரு சிலர் - தொண்டர் ஆயினர் — அக்காலத்திலே சிலர் அடியராயினர்; (அங்ஙனமாக) இருக்கும் அடுக்கல் அரக்கன் எடுப்ப - தாம் இனிதமருங் கைலையை இராவணன் தூக்கலும் (அது கண்டஞ்சி)—வரை பொரும் மொய்ம்பில் முலை பொர மலைமகள் தழுவ — மலையை வெல்லும் வலிய புயங்களில் தனங்கள் தாக்கும்படி மலைவளர் காதலியாரணைக்க, மனம் மகிழ்வோனே - திருவுளமுவப்பாராகிய சிவபெருமானே - பாடும் பணி நீ கூடும் பொருட்டு - பாடுதற்றிருத்தொண்டைத் தேவரீர் பரிக்கும் நிமித்தம், மதுரைமாநகரில் குதிரை மாறியும்-மதுரைமா நகரத்திலே நரியைப் பரியாக்கி விற்றும், விண் புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்-தேவருந்துதிக்கும் திருமுடிமீது மண் செறிந்த கூடையை வலிந்தெடுத்தும், நீறு எழில்மேனியில் மாறு அடிபட்டும்-திருநீற்றினெழில் படைத்த திருமேனியிற் பிரம்படியேற்றும், நின்னை தொண்டன் என்ன கொண்டனன் - தேவரீரைத் திருத்தொண்டரெனக் கொண்டருளினர். (எ - று.)

திருமால் காத்தற்றொழிலாற் சத்துவ குணஞ் சார்ந்தாரேனும் தமோகுணவுருவத்தரென்பார். 'கடணிறவண்ணன்' என்றும், அமரராதியரும் அரிதுவழிபடினும், பெரும்பான்மையும் முத்தியின் விழைவின்றி முதுபெரும் பதங்களையும் அவற்றின் சாதனங்களையுமே முன்னிவழிபடுதலின் அவர் தொண்டிற்கும் அடியவர் தொண்டிற்கும் வேற்றுமை பெரிதென்பார், அத்தேவருட் சிறந்த திருமாலின் அருந்தொண்டையும் அதிற்பெற்ற பேற்றையும்விளக்கி, 'கண்ணொன்றிடந்தணியப் பரிதி கொடுத்த' என்றும், வேதங்களே நூபுரவடிவாய் மிகத் துதித்து நிற்பவென்பார், 'மறைச்சிலம்பரற்றும்' என்றும், சித்தும் அசித்துமாகிய பிரபஞ்சமெங்கும் வியாபித்த திருவடிகளென்பார், 'மலரடி' என்றும், அத்திருமாலாதியர் சிவபிரானால் அதிட்டிக்கப்பட்டு நிற்றலின் அவ்வியைபு பற்றி வேதம் ஒரோவழி முகமனாக அவர்க்கும் பரத்துவம்பகரினும், அது உள்ளபடி உமாபதிக்கே உரியதென்பார், 'சுருதிநாயகன்,' என்றும், கணம்புல்ல நாயனாரும் அரிவாட்டாயநாயனாரும் திருக்குறிப்புத் தொண்ட நாயனாரும் தமக்குவரும் இறுதியையு நாடாது தம் விரத முடித்த தவத்தினரென்பார், 'முடி விளக்கெரித்தும் ஊட்டியரிந்தும் சிலையிடைத்தலைமோதியும்' என்றும், இயற்பகைநாயனாரும் மானக்கஞ்சாற நாயனாரும் கலிக்கம்ப நாயனாரும் சண்டேச நாயனாரும் சிறுத்தொண்ட நாயனாரும் கோட்புலிநாயனாரும் செருத்துணை நாயனாரும் உலகியலைக் கடந்து வழிபட்ட உத்தமரென்பார், துணைவியை யளித்தும் அருமகள் கருமயிருதவியும் கோதை கைம்மலர் துணித்தும் தந்தையைத் தடிந்தும் மைந்தனைக் கொன்றும் சுற்றங்களைந்தும் பூக்கொளுமாதின் மூக்கினையரிந்தும், என்றும், இளையான்குடிமாற நாயனாரும் அதிபத்த நாயனாரும் ஒக்கலுந்தாமும் உறுபசியுழந்தும் தந்நியதி குன்றாத் தகைமையரென்பார், 'சென்முளைவாரி யின்னமுதருத்தியும் அகப்படுமணி மீனரற்கென விடுத்தும்' என்றும், அமர்நீதி நாயனாரும் திருநீலகண்ட நாயனாரும் சத்தியநெறிவழாச் சால்பினரென்பார், 'கோவணநேர்தனை நிறுத்துக் கொடுத்தும் இளமுலை மாதர் வளமை துறந்தும்' என்றும், இங்ஙனம் உலக வாஞ்சையொழிந்து தற்போதமிறந்து இறைவரை வழிபடல் சிவபுண்ணிய முதிர்ந்த சிலர்க்கன்றிப் பிறர்க்கெய்தாமையின் அவ்வியல்பினர் அவனியில் மிகவரியரென்பார், 'ஒருசிலர் தொண்டராயினர்' என்றும், இவரெல்லாம் இங்ஙனம் வருந்தித் தொண்டராக, இறைவரே வருந்தித் தொண்டுகொண்டமை உமது பாடற்றொண்டை அவாவியன்றி மற்றொன்றினன் றென்பார், 'பாடும்பணி நீ கூடும் பொருட்டுக் குதிரை மாறியும் மண்சுமந்தும் மாற்றடிபட்டும் தொண்டனென்னக் கொண்டனன்' என்றும், இராவணன் குபேரனைவென்று கவர்ந்த புட்பகவிமானமூர்ந்து, திருக்கைலையை யெய்தலும் அது இறைவர் தானமாகலின் விமானம் செல்லாதாக, அவன் ஆங்கு நந்திதேவரருளிய நயமொழியையுமறுத்திகழ்ந்து, அக்கைலையைப் பெயர்த்தல்கண்டு அம்பிகை பயந்து ஊடலொழிந்து தழுவ, அது உலகியல்பு நிகழ்விற்கு ஏதுவாதல்பற்றி உளமகிழ்ந்தவரென்பார், 'மலைமகட்டழுவமன மகிழ்வோனே' என்றும் கூறினர்.

கூறவே: இப்பெருந்தகையாரருளிய மணிவாசகம் இறைவர் துதிவடிவாய்த் தோன்றினும், எவரும் வீட்டுநெறியைத் தலைப்படுதற்கு விழுமிய வாயிலாக விளங்கும் இயல்பு நோக்கி, இவர் அப்பணி பூண்பான் இங்ஙனம் வருந்தித் தொண்டு கொண்டாரென்பது. கைம்மலர் துணித்தவர் கழற்சிங்க நாயனாரெனக் கோடலும் ஒன்று. மலர் வினைத்தொகை. வேதம் எழுதப்படுதலின்றிக் கேட்கப்பட்டே வழங்கலின் சுருதியெனப் பெயர் பெற்றது. எண்ணின்கணின்ற உயர்வு சிறப்பும்மைகளுள் முற்பதினொன்கும் ஏனைத் தொண்டரியல்பையும் தழிஇயினிற்றலின் எச்சவும்மைகளுமாம். வார்தல் - அதன் காரியமாகிய சமைத்தலின் மேற்று. தனையுமென்னும் எச்சவும்மை எஞ்சிற்று. அரன்- ஆன்மாக்களுடைய பாசத்தை யரிப்பவன். களைதல் - பற்றறப்போக்கல். நூலாசிரியர் தமக்கு முந்தியமை நோக்கிப் பண்டைநாளென்றாரேனும், தொண்டராயினமை

இப்பாட்டுடைத் தலைவர் காலத்திற்கு முன்னும் பின்னுமாகக் கொள்க. ஒரு வென்பது மிகுதியின்மைக்குறிப்பு. மேல் ஏழனுருபு. அன்பை உடைமைப் பொருளாக்கி அன்புடையவென்னுது அன்பவென்றூர்: அன்பே அவருருவாகலின். விண் இடவாகுபெயர். மண்பொறை - மண்ணைப் பொறுக்குங் கருவி. இது சுமையடையையுஞ் சுட்டி நின்றது: மட்பாரமுமாம்; அச்சுதனுதிய ரரியதவ நோக்கி அவரை இறுதிக் காலத்தில் நெற்றிவிழியினீற்றி அணிந்துளராகலின் நீற்றெழின் மேனியென்றூர்.

இப்பி ஆயிரஞ்சூழ்ந்தது இடம்புரியும் அஃதாயிரஞ்சூழ்ந்தது சலஞ்சலமும், அஃதாயிரஞ்சூழ்ந்தது பாஞ்சசன்னியமுமாக, செங்கண்மாறடக்கையிலுள்ள அத்தகைப் பாஞ்சசன்னியம் நாணுவதெற்றுக் கெனின், - தான் உயர்ந்தவினத்ததாயினும் தெய்வீகதலத்தினுதிப்பின்றிப் பஞ்சசனனென்னும் அசுரனுருவெலும்பாயுதித்தமையின் இகழப்படுதலும், இவ்வலம்புரி தன்னிற்ருழ்ந்தவினத்தாயினும் தெய்வீகமுடைய இத்திருவாதவூரிலுதித்தமையின் எவராலும் புகழப்படுதலும் பற்றியென்க. அன்றிப் பாஞ்சசன்னியமும் [1]வலம்புரியேயாகலின் தடக்கையிலுள்ள தனக்குச், சுயேச்சாசஞ்சாரமின்மையும் அதற்கஃதுண்மையும்பற்றி இனங்கண்டுழி நாணுகின்றதெனினும் அமையும். எனவே, அம்பிகைபாகரை வழிபடுவான் திருமாலணுகுந்தோறும் அவர் தடக்கையிற்சங்கம் ஈங்குளவலம்புரிகண்டு இவ்வியல்பான் நாணுநின்றதென்பது.

திருநீலகண்டம் அமலரது ஆஞ்ஞாரூபமாய்த்திகழ்ந்து அடியவரிடர்களைவதுணர்ந்து அதனையே தியானித்தலான் அப்பெயர்பெற்ற நாயனர் ஓர்ஞான்று ஓர் பரத்தைபால ணைந்து நண்ண அதுகண்டமானமிக்கதேவியார் "எம்மைத்தீண்டுவீராயிற்றிருநீலகண்டம்'' என்றூராக; அவர் அதன்மாட்டுவைத்த அன்புகுன்றுது, "எம்மையென்றதனுல் மற்றைமாதரையும் மனத்தினுந்தீண்டேன்'' என்று அந்நியதியை முட்டின்றிச்செலுத்திய அருமை தோன்ற மாதர்வளமையெனப் பன்மையாற்கூறினர். கொடிமாடச்செங்குன்றூரிற் பரிசனங்கட்குநேர்ந்த நளிர்சுரமகலப் பிள்ளையார் [1]"அவ்வினைக் கிவ்வினையாமென்று சொல்லு மஃதறிவீருய்வினை நாடாதிருப்பது முந்தமக் கூனமன்றே - கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோஞ் - செய்வினை வந்தெமைத் தீண்டப்பெருதிரு நீலகண்டம்' என்றருளியதூஉம், இடர்களையும் ஆஞ்ஞாரூபமாதல் நோக்கியேபோலும்.

பாஞ்சசன்னியம் பஞ்சசனனுருவெலும்பாதலை [2]"சங்க நேருருப் பஞ்சனப்பெயர்- வெங்கணுனையு மாயிடை வீட்டியே-துங்க வோசை வலம்புரித் தோற்றமா - மங்க வன்ற னெலும்பை யணிந்தனன்'' என்பதனுனும், திருமால்-தமோகுணவுருவத்தரென்பதனை [3]"நேமியாற் குருவெலா நீல மாயதுந் - தோமறு கடலிடைத் துயில் கொள்பான்மையு - மேமுறு மகந்தையும் பிறவு மெய்துமேற் - ருமதராசதந்தாமுமுற்றவே. அறிவொருங் குற்றிழி யனையன் கண்ணுத - விறைவனை வழிபடீஇ யேத்தியின்னரு - ணெறிவரு தன்மையு நீடு போதமும்-பெறுதலிற் சாத்திக முறையும் பெற்றுளான்'' என்பதனுனும், விண்ணவர் மேற்கதியில் விருப்புடையரென்பதனை [4]வாழ்த்துவதும் வானவர்கடாம் வாழ்வான் மனநின்பாற் - ருழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழ வேண்டிச் - சூழ்த்துமது கரமுரலுந்தாரோயை நாயடியேன் பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.'' என்பதனுனும், திருமால் பரிதிபெற்றமையை [5]"அவன்சலந் தரனை வீட்டு மாழியை வாங்கப் பன்னுட்-சிவன்கழல் வழிபட் டோர்நாட் செங்கணே மலராச் சாத்த - வுவந்தனன் விடைமேற் ருேன்றி யப்படை வுதவப்பெற்று - நிவந்தனனதனுல் வைய நேமியா னென்ப மாதோ'' என்பதனுனும், வேதமே நூபுரமென்ப

1. வலம்புரி-வலப்பால் முறுக்குடையது.

1. தேவாரம் திருநீலகண்டப்பதிகம்-௧
2. காஞ்சிப்புராணம் மச்சீசப்படலம்-௬.
3. கந்தபுராணம் அனந்தன்சாபநீங்குபடலம்-உ௫-உ௬.
4. திருவாசகம் திருச்சதகம்-௧௬.
5. கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்-உ௬௭

தனை [1]"மறையே நமது பீடிகையா மறையே நமது பாதுகையா மறையே நமது வாகனமா மறையே நமது நூபுரமா- மறையே நமதுகோவணமா மறையே நமது விழியாகு—மறையே நமது மொழியாகு மறையே நமது வடிவாகும்" என்பதனானும், சிவபெருமானே சுருதி நாயகனென் பதனை - [2]"காரெழில் புரையு மேனிக் கண்ணனை யென்னைப்பின்னை - யாரையும் புகழும் வேத மரன்றனைத் துதித்த தேபோ-லோருரை விளம்பிற் றுண்டோ வுரைத்தது முகம னென்றே. பேருல கறிய முன்னும் பின்னரும் விலக்கிற் றன்றே. நான்மறை தனிலோர் பாக நாரமார் கடவுட் சென்னி – மேன்மைய தியம்பு மெம்மை விண்ணவர் தம்மையேனைப் - பான்மைகொள் பூதந் தன்னைப் பல்பொருடனையும் பாதி – தான்மொழிந் திடுமோ வீது தவறல வுணர்தி தக்கோய்." என்பதனானும், சிவபுண்ணியமுதிர் வினர்க்கே வழிபாடு சித்திப்பதை [3]என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே யிருங் கடல் வையத்து—முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கண்-மன்னு காவிரி சூழ்ந்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப் பன்னியா தரித்தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே." என்பதனாலும், நாயன்மார் உலகவாஞ்சையகன்று வழிபட்டவரென்பதனை [4]"கல்லிற் கமரிற் கதிர் வாளிற் சாணையினில் - வல்லுப் பலகையினில் வாதனையைச்-சொல்லு-மகமார்க்கத் தாலவர்கண் மாற்றினர் காணையா-சக மார்க்கத் தாலன்றே தான்". என்றற் றொடக்கத்தனவானும், நீறணிந்தமையை [5]"அவர்தமை விழியாற்-றொல்லை நாவினீ றுக்கியும்பு னைந்திடுந்தூ யோன் - மல்லன் மாதவ மனையவ ரியற்றிய வகையால்." என்பதனாலும், மலைமகடழுவலை, [6]"ஊடலை மறைந்துமை மடந்தையரனைத்தன முறத் தழுவினுள்" என்பதனாலும், வீட்டுநெறிக் கேதுவாதலை [7]"கேட்டவர் களெல்லாருங் கிளர்புளகங் குறுவேர்வு - காட்டிடலுங் கண்ணீருங் கசிந்துருகுஞ் சிந்தையுமா-யீட்டிய மெய்த்தவமுடையோ னியம்பியவித் தமிழன்றி - வீட்டுநெறிக் கினிச்சிவ நூல் வேறுளதோ வென்றூர்கள்," என்பதனாலும் அறிக. (௧௨)

மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நிபாடும் போது —நெகிழ்ச்சி மலர்ச்
சந்தையினும் வண்டிரையுந் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு.

(இ - ள்.) நெகிழ்ச்சி மலர் சந்தையினும் வண்டு இரையும் - விரிதலுடைய மலர்களில் சந்தையினும் வண்டுகள் மிக முழங்கும் - தண்புகலி சம்பந்தா - குளிர்ச்சி வாய்ந்த புகலியிற்குலவிய ஞானசம்பந்த மூர்த்தியே! - எதிர் வந்து புகழ்ச்சியொடு நீ பாடு போது - சந்நிதி முன்னர்ச்சார்ந்து சீர்த்தியோடு (வேதசிவாகமநெறிகளைத்) தேவரீர் பாடுங்கால்,—தந்தையினும் பால் கொடுத்த தாய்க்கு — தந்தையாரினும் ஞானப்பாலை யளித்த அன்னையாருக்கு— மிக மகிழ்ச்சி உண்டு போலும் - சால உவகையுண்டு போலும், (எ-று.)

பிறதேயங்களிற் பெறற்கரிய வளமனைத்தும் ஆண்டுநிரம்பலின் அவை கொள்வான் செறியும் பதினெண்டேயமாந்தரும் பகருஞ்சொற்கள், அக்கர வடிவாய்ப்பொருள்பயக்கும் சுத்தமாயாகாரிய வொலியேயாகியும், அவை சந்தையிற் றிரண்டுழிப், பொருள்பயவாப் பூதகாரிய வொலியாய் முழங்காநிற்க; வண்டுகள் மணங்கவர்ந்து மதுமாந்திப்பாடும் இசைகள் அவ்வொலியினுமிக்கு இசை யெனுமியல்பின்றிப் பெருமுழக்காய் முழங்குமென்பார், 'சந்தையினும் வண்டிரையும்' என்றும், சூரியகிரணத்தைவெறுத்துத் தன்பாற்றுன்னுவாரை மீட்டும் அக்கிரணத்தை விரும்பச்செய்யும் சீதளச் சோலையுடைத்தென்பார், (தொடரும்)

1. திருவிளையாடல் உலவாக்கிழியருளிய படலம்-௬

2. கந்தபுராணம் உபதேசப்படலம்-௨௭-௨௮.

3. தேவாரம் திருவலஞ்சுழி.

4. திருக்களிற்றுப்படியார்-௫0

5. கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்-௧௩.

6. இராமாயணம் வரையெடுத்தபடலம்-௧௩௯

7. திருவாதவூரர்புராணம் திருவடிபெற்ற சருக்கம்-௨௨.

# கன்னியாகுமரி மாவட்ட அறநிலையச் சட்டம்

*1959-ம் ஆண்டு 30-வது சட்டம்*

The translation has not been authorised or accepted as authentic by the Government.

மாற்றலாகியுள்ள பகுதியிலுள்ள சட்டப்படி இணைக்கப்பட்டவையும் சட்டப்படி இணைக்கப்படாதவையுமான தேவஸ்வங்களின் நிர்வாகம், மேற்பார்வை, கட்டுப்பாடு இவற்றைக்குறித்த ஆவணத்தைத் திருத்துவதும் ஒருங்கு தொகுப்பதும் பொருத்தமா யிருக்கிறபடியால்

இந்தியக் குடியரசின் பத்தாவது ஆண்டில் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாக:—

1. *சுருங்கிய பெயரும், வரம்பும், தொடக்கமும் :*—(1) இச்சட்டம், 1959-ம் ஆண்டு சென்னை *(மாற்றலாகியுள்ள பகுதி)* சட்டப்படி இணைக்கப்பட்ட, சட்டப்படி இணைக்கப்படாத தேவஸ்வச் சட்டம் எனப் பெயர் பெறும்.

(2) இது மாற்றப்பட்ட பகுதி முழுவதற்கும் பயன்படும்.

(3) அரசாங்கத்தார் விளம்பரம் மூலம் நியமிக்கக்கூடிய தேதியன்று இது அமுலுக்கு வரத் தொடங்கும்.

2. *பொருள்.*—இச் சட்டத்தில், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி மற்றப்படி—

(i) "சபை" என்பது, 4-வது பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட தேவஸ்வம் சபை எனப் பொருள்படும்;

(ii) "ஆணையர்", "துணை ஆணையர்", "உதவி ஆணையர்" என்பது, 1959-ம் ஆண்டு சென்னை இந்து சமய - அறக் கட்டளைகள் சட்டத்தின் (சென்னை 1959-ம் ஆண்டு 22-வது சட்டம்) 9-வது பிரிவின்கீழ் முறையே நியமிக்கப்பட்ட ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர் எனப் பொருள்படும்.

(iii) "இந்து சமயக் கட்டளை" என்பது, கோயில்களுக்குச் சொந்தமான அல்லது கொடுக்கப்பட்ட அல்லது அவற்றின் ஆதரவுக்காகக் கட்டளையாக ஏற்படுத்தி வைக்கப்பட்ட அல்லது அதற்குச் சம்பந்தப்பட்ட யாதொரு பொதுச் சேவை, பொதுத் தருமம் அல்லது, வேறு மத தருமம் நிறைவேற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட அல்லது கட்டளையாக ஏற்படுத்தி வைக்கப்பட்ட சகல சொத்து எனப் பொருள்படும்; மேலும் அதில், உரிய நிலையமும் அதன் வளவுகளும் என்பதும் அடங்கும்; ஆனால் அச் சமய நிலையத்தின் அர்ச்சகருக்கு, பணி உரிமையாளருக்கு அல்லது இதர சிப்பந்திக்குச் சொந்த வெகுமதியாக அளித்த சொத்து தானம் என்பது அதில் அடங்காது;

(iv) "சட்டப்படி இணைந்த தேவஸ்வம்" என்பது, 1-வது ஷெட்யூலில் சொல்லியுள்ள தேவஸ்வம் எனப் பொருள்படும்;

(v) "உறுப்பினர்" என்பதில், தலைவரும் அடங்குவார்;

(vi) "பற்றுள்ள நபர்" என்பதில் சட்டப்படி இணைந்த அல்லது சட்டப்படி இணையாத தேவஸ்வத்தின் விஷயத்தில், கோயிலில் தொழுகை அல்லது சேவை நடக்கும்போது வந்திருக்க உரிமையுள்ள அல்லது வருவதை வழக்கமாகக் கொண்டுள்ள அல்லது அங்கு வழங்கப்படும் வெகுமதிப் பயனை அடைய உரிமையுள்ள அல்லது அதை அடைவதை வழக்கமாகக் கொண்டுள்ள நபர் என்பதும அடங்கும்;

(vii) "அதிபதி" என்னும் சொற்றொடருக்கு இந்திய அரசியலமைப்பின் 366-வது பிரிவில் கண்ட (22) பகுதியில் என்ன பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதே அர்த்தத்தை இங்கு உடையதாகும்;

(viii) "மாற்றலாகியுள்ள பகுதி" என்பது, கன்னியாகுமரி மாவட்டமும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டமும் எனப் பொருள்படும்;

(ix) "சட்டப்படி இணைக்கப்படாத தேவஸ்வம்" என்பது II-வது ஷெட்யூலில் சொல்லியுள்ள தேவஸ்வம் எனப் பொருள்படும்.

3. *நிர்வாகம் சபையிடம் நிலை பெறுவது.*—சட்டப்படி இணைந்த, சட்டப்படி இணையாத தேவஸ்வங்களின் நிர்வாகமும் அவற்றின் சகல சொத்துக்களும் நிதிகளும் 19-வது பிரிவின்படி நிறுவப்பட்ட தேவஸ்வம் நிதியும், 20-வது பிரிவில் சொல்லியுள்ள தேவஸ்வம் உபரி நிதியும் சபையிடம் நிலை பெறும்.

4. *சபையின் அமைப்பு:*—(1) இச் சபை ஒரு தலைவரையும் மற்ற உறுப்பினர்கள் இருவரையும் கொண்டதாயிருக்கும். தலைவரையும் ஓர் உறுப்பினரையும் அரசினர் நியமனம் செய்வார்கள். மற்ற உறுப்பினரை திருவாங்கூர் அதிபர் நியமிப்பார்.

(2) கன்னியாகுமரி உதவி ஆணையர் இச் சபையின் செயலாளராக இருப்பார்.

(3) ஷை சபை, சட்டப்படி இணைந்த சபையாயிருப்பதுடன் ஒன்றுக்குப் பின் ஒன்றாகத் தொடர்ந்து வருவதுடன் பொதுவான முத்திரையை உடையதாயிருக்கும். அச் சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள, சட்டப்படி இணைக்கப்பட்ட, சட்டப்படி இணைக்கப்படாத தேவஸ்வத்தின் சார்பிலும் சொத்தினை வைத்திருக்கவும் அடையவும் அச்சபைக்கு அதிகாரம் உண்டு.

(4) சபை அப் பெயரில் வழக்காடவும் வழக்காடப் பெறவும் வேண்டும்; இவ் வழக்குகளில் சபையின் தலைவர் அதன் பிரதிநிதியா யிருப்பார்.

5. *சபையின் உறுப்பினராவதற்குறிய தகுதி*.—ஒருவர் மாற்றலாகியுள்ள பகுதியில் நிலையாகக் குடியிருந்து, இந்து சமயத்தைக் கடைப்பிடிப்பவராயிருந்து, 35 வயதுள்ளவராயிருந்தால் தான் அவர் இச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.

6. *உறுப்பினர் தகவின்மைகள்*.— ஒருவர் அடியிற்கண்டபடி யிருந்தால் அவர் அச் சபையின் உறுப்பினராவதற்குத் தகுதியுடையவராக மாட்டார் ; அவர்—

(i) சபையின் உறுப்பினருக்குள்ள அலுவல்களையும் கடமைகளையும் நிறைவேற்ற முடியாத அளவுக்கு சித்த விகாரமுடையவராயிருப்பது அல்லது மூளைக் கோளாறு ஆனதினலோ, நோயினலோ அவதியுறுவது ; அல்லது

(ii) திவாலாகி, விடுதலைபெருதவரா யிருப்பது, அல்லது

(iii) அரசாங்கத்தின், நாட்டாட்சிக் கழகத்தின், ஷை சபையின் அல்லது சட்டப்படி இணைந்த அல்லது அவ்வாறு இணையாத தேவஸ்வத்தின் அதிகாரியாகவோ ஊழியராகவோ இந்து சமயக் கட்டளையின் தரும கர்த்தாவாகவோ இருப்பது; அல்லது

(iv) சட்டப்படி இணைந்த அல்லது சட்டப்படி இணையாத தேவஸ்வத்துக்கு யாதொரு வமங்கலைச் செய்வதற்கோ அந்த தேவஸ்வத்தின் சார்பில் யாதொரு வேலையைச் செய்வதற்கோ உள்ள ஒப்பந்தத்தில் பற்றுள்ள வரா யிருப்பது; அல்லது

(v) ஒழுக்கக்கேடு அடங்கிய ஒரு குற்றத்துக்காக குற்ற இயல் நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டிருந்து அத் தண்டனை ரத்து செய்யப்படாமல் அல்லது அக்குற்றம் மன்னிக்கப்படாமல் இருப்பது.

7. *தகவின்மை விஷயத்தில் நடவடிக்கை*.—(1) ஷை சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஒருவர், 6-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள தகவின்மைகளில் ஏதாவது ஒன்றை உடையவராக இருந்தால், அல்லது பின்னர் அந்தத் தகவின்மையை உடையவராக ஆனுல், அல்லது இந்து சமயத்தைக் கடைப்பிடிக்காதவராகிவிட்டிருந்து கீழே ஏற்பாடு செய்துள்ளவாறு தகவின்மை உள்ளவரென நீதி மன்றத்தார் அறிவித்தால் அவர் உறுப்பினரற்றவராவார்.

(2) ஷை சபையின் உறுப்பினர் ஒருவர், 6-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள யாதொரு தகவின்மையை உடையவராக இருந்திருக்கிருரென அல்லது இந்து சமயத்தைக் கடைப் பிடிக்காதவராகிவிட்டிருக்கிருரென ஆணைப் பிறப்பிக்குமாறு அக்கறை உள்ள நபர் நாகர்கோயில் மாவட்ட நீதி மன்றத்துக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்; அந்த நீதி மன்றம் தாம் தகுதியெனக் கருதுகிற விசாரணையைச் செய்த பிறகு, அந்த உறுப்பினர் அத் தகுதியின்மை உள்ளவரா தகுதியுள்ளவரா என்பதை ஆணை பிறப்பித்துத் தீர்மானிக்கவேண்டும்.

(3). (2) உட்பிரிவின் கீழ்ப் பிறப்பித்த ஆணையின்பேரில் உயர்நீதி மன்றத்துக்கு அப்பீல் செய்து கொள்ளலாம்.

(4). (2) உட்பிரிவின்கீழ் விண்ணப்பம் ஒன்று செய்து கொள்ளப்பட்டிருந்து அதன் பேரில் முடிவான ஆணை பிறப்பிக்கிற வரையில், தகவின்மையுள்ளவரெனக் கூறப்பட்ட உறுப்பினர் தகவின்மையில்லாதவரைப் போலவே செயலாற்ற உரிமையுள்ளவராவர்.

8. *நியமன உறுப்பினரை அகற்றுவது*:—ஷை சபையில் நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஒருவரை அவரது தவருன நடத்தை அல்லது அவரது செயலற்ற தன்மை காரணமாக அவரை அரசினர் தாங்களாகவோ இந்து சமயத்தைச் சேர்ந்த ஒருவர் விண்ணப்பம் செய்துகொள்வதன் பேரிலோ ஆணை பிறப்பித்து உறுப்பினர் பதவியிருந்து அகற்றலாம்

ஆனுல், அவ்வாறு ஏன் அகற்றப்படக் கூடாதென்பதற்குக் காரணம் காட்டுவதற்காக அந்த உறுப்பினருக்கு நியாயமான வாய்ப்பளித்திருந்தாலொழிய அத்தகைய ஆணை எதையும் பிறப்பிக்கக் கூடாது.

*விளக்கம்*:—சென்னை மாநிலத்தில் சமூக நல்லுறவைப் பாதிக்கும் கருத்துடன் அல்லது பாதிக்கக் கூடிய வகையில் அல்லது சென்னை மாநிலத்திலுள்ள பல வகுப்பு இந்தியக் குடிகளிடையே விரோத மனப்பான்மையை வளர்க்கக் கூடிய எக்காரியத்தையாகிலும் உறுப்பினர் ஒருவர் செய்தால் அவர் இப் பிரிவின்படித் தவருன நடத்தைபற்றிய குற்றம் செய்திருப்பதாகக் கருதப்படுவார்.

9. *சபையின் பதவிக் காலம்*:—(1) சபையின் நியமின உறுப்பினர் அவரது நியமானத் தேதியிலிருந்து மூன்ருண்டுக் காலம் பதவி வகிப்பார். மீண்டும் நியமிக்கப்பெற அவருக்கு உரிமை உண்டு.

(2) சபையின் நியமன உறுப்பினர் ஒருவர் தம் கைப்பட அரசாங்கத்துக்குக் கடிதம் எழுதி தமது உறுப்பினர் பதவியை ராஜினுமா செய்யலாம். ஆனுல், அவருக்கு அப் பதவியில் வாரிசாக மற்ருெருவர் நியமிக்கப்படுகிறவரையில் அவர் தொடர்ந்து பதவி வகித்து வரவேண்டும்.

(3) சபையின் உறுப்பீனர் ஒருவர் தமது பதவிக்கால அளவு முடிவதன் பேரில் அதனுல் ஏற்பட்ட காலிஸ்தானம் நிரப்பப்படுகிறவரையில் தொடர்ந்து பதவி வகித்து வரவேண்டும்.

(4) சபையின் நியமன உறுப்பினர் ஒருவரின் பதவி அவர் ராஜினுமா செய்திருப்பது அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டிருப்பதன் காரணமாக அல்லது மற்றப்படி காலியாகயிருந்தால், அப்

பதவியில் புதிய உறுப்பினர் ஒருவரை இச் சட்டத்தின் ஷரத்துக்களை யனுசரித்து நியமிக்க வேண்டும். எந்த உறுப்பினருக்குப் பதிலாக அவர் நியமிக்கப்பட்டுள்ளாரோ அத்தகைய உறுப்பினர் அக் காலி நேரிட்டிராவிட்டால் எக்கால அளவு வரை பதவி வகித்திருந்திருப்பாரோ . அக் கால அளவு வரை இப் புதிய உறுப்பினர் பதவி வகித்து வரவேண்டும்.

10. *சபையின் அலுவலகமும் கூட்டங்களும்.*- (1) சபை தனது அலுவலை நடத்துவதற்கு சுசீந்திரத்தில் அலுவலகம் ஒன்றை வைத்திருக்கும். சபைக்கு அனுப்பும் சகல கடிதங்களையும் அறிவிப்புகளையும் இந்த இடத்திற்கே அனுப்பி வைக்க வேண்டும்.

(2) சபையின் கூட்டங்களில் தலைவர் தலைமை வகிக்கவேண்டும்.

(3) இரண்டு உறுப்பினரேனும் வந்திருந்தாலொழிய யாதொரு கூட்டத்தில் அலுவல் எதையும் நடத்தக் கூடாது.

(4) ஒரு விஷயத்தைக் குறித்து சபையின் உறுப்பினரிடையே கருத்து வேறுபாடிருந்தால் அவ் விஷயம் அக் கூட்டத்தில் வந்திருந்து வாக்களிக்கிற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்கினல் தீர்மானிக்கப்படவேண்டும். வாக்கு சமமாகப் பிரிந்தால் அவ் விஷயத்தை ஆணையர் ஆலோசனைக்கு அனுப்ப வேண்டும். அதன்மேல் அவர் செய்யும் தீர்ப்பு முடிவானதாகும்.

11. *கூட்டங்களைத் தலைவர் கூட்டுவது.*— (1) சபையின் கூட்டங்களைக் கூட்டுவதற்கு வேண்டியவற்றைத் தலைவர் செய்யவேண்டும்.

(2) ஒவ்வொரு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் பற்றிய குறிப்புகளை தலைவர் இது காரியத்துக்காக வுள்ள புத்தகம் ஒன்றில் வைத்துவர வேண்டும்; தலைவரும் அக் கூட்டத்துக்கு வந்துள்ள உறுப்பினர்களும் கையெழுத்திட வேண்டும்.

12. *அதிகாரம் சபையிடம் நிலைபெறுவது:*- (1) தேவஸ்வங்கள் விஷயமாக 1956-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதிக்கு அடுத்துமுன் திருவாங்கூர் தேவஸ்வம் சபைக்கு உரித்தாயிருந்த அல்லது அச் சபை செலுத்தி வந்த சகல உரிமைகளும் அதிகாரமும் இச் சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து இச் சபையிடம் நிலைபெற்று அச் சபையால் செலுத்தப்படும்.

(2) மேற்படி சபை தனது விசாரணை அதிகாரத்திலுள்ள சட்டப்படி இணைந்த, சட்டப்படி இணையாத தேவஸ்வங்களின்மீது நெறிப்படுத்தும், கட்டுப்படுத்தும், மேற்பார்வையிடுவதுமாகிய அதிகாரங்களனைத்தையும் மேற்பார்வையிடவும், கட்டுப்படுத்தவும், நெறிப்படுத்தவும், ஆணையருக்குள்ள பொது அதிகாரத்துக்கு உட்பட்டு செலுத்தவேண்டும். ஆணையர் அவ்வாறு மேற்பார்வையிடுவது, கட்டுப்படுத்துவது என்பதில் தேவஸ்வங்கள் சரிவர நிர்வகிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமெனக் கருதக்கூடிய கட்டளைகள் பிறப்பிக்கும் அதிகாரமும் அடங்கும்.

13. *ஆணையர் மறு பரிசீலனை செயதல்:*— (1) யாதொரு நடவடிக்கை சரிவர எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அல்லது அதில் செய்யப்பட்ட தீர்மானம் சரியானதா, சட்ட சம்மதமானதா, தகுதியானதா எனச் சந்தேகமறத் தெரிந்துகொள்வதற்காக அந்த நடவடிக்கை பற்றிய சபையின் ரெக்கார்டை ஆணையர் வரவழைத்துப் பதிவு செய்யலாம். தீர்மானம் அல்லது ஆணை மாற்றப்பட வேண்டுமென ஆணையர் அபிப்பிராயப்பட்டால் அதை அச் சபையில் மீண்டும் ஆலோசனை செய்து தாம் குறிப்பிடக்கூடிய கால அளவுக்குள் தம்மிடம் அனுப்பி வைக்கவேண்டுமெனக் கட்டளையிட்டு அதைச் சபைக்கு அனுப்பலாம்.

(2) அந்த அறிக்கையைப் பெற்றுக்கொண்டு ஆலோசித்த பிறகு ஆணையர் சந்தர்ப்பத்துக்கேற்ப, அசல் தீர்மானத்தை அல்லது ஆணையை அல்லது (1) உட்பிரிவின்கீழ் புனராலோசனை செய்த பிறகு திருத்தப்பட்டுள்ள தீர்மானத்தை அல்லது ஆணையை, ஆணையர் திருத்தியமைக்கலாம், ரத்து செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

(3) குறித்த கால அளவுக்குள் அல்லது தாம் மேற்கொண்டு அளித்த கால அளவுக்குள் அந்த அறிக்கை ஆணையரிடம் வந்து சேராவிட்டால், சபையின் ஆணையை, ஆணையர் திருத்தியமைக்கலாம், ரத்து செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

(4) யாதொரு கட்சியினர் சொல்லிக்கொள்ள வேண்டியதை சொல்லிக் கொள்வதற்காக அக் கட்சியினருக்கு நியாயமான வாய்ப்பளிக்கப்பட்டிருந்தாலொழிய அக் கட்சியினருக்கு பிரதிகூலமான ஆணை எதையும் இப் பிரிவின்கீழ் ஆணையர் பிறப்பிக்கக்கூடாது.

(5) ஆணையர், இப் பிரிவின்கீழ்த் தம் அதிகாரத்தைச் செலுத்துகிற வரையில் சபையின் தீர்மானம் அல்லது ஆணை நிறைவேற்றப்படுவதைத் தடுத்து வைக்கலாம்.

14. *ஆணையர் அதிகாரம் பிரித்துக் கொடுப்பது:*—இச் சட்டத்தின் 12-வது பிரிவில் அல்லது 13-வது பிரிவில் உள்ள அதிகாரங்களைத் தவிர இச் சட்டத்தின்படித் தமக்குள்ள அதிகாரங்களை ஆணையர் மாற்றலாகியுள்ள பகுதியில் விசாரணை அதிகாரமுள்ள துணை ஆணையருக்குப் பிரித்துக் கொடுக்கலாம்.

15. *அரசினர் மறுபரிசீலனை செய்வது:*—(1) யாதொரு நடவடிக்கை கிரமமானதுதானு அல்லது அதில் செய்யப்பட்டுள்ள தீர்மானம் அல்லது ஆணை சரியானதுதானு, சட்ட சம்மதமானதுதானு அல்லது தகுதியானதுதானு எனச் சந்தேகமறத் தெரிந்து கொள்வதற்காக அக் நடவடிக்கை விஷயமாய்

ஆணையரின் அல்லது சபையின் ரெக்கார்டை அரசாங்கத்தார் வரவழைத்துப் பரிசீலனை செய்யலாம்; அத் தீர்மானத்தை அல்லது ஆணையைத் திருத்த வேண்டுமென, ரத்து செய்யவேண்டுமென, மாற்றியமைக்க வேண்டுமென அல்லது மீண்டும் ஆலோசனை செய்வதற்காக திருப்பியனுப்ப வேண்டுமென் அரசாங்கத்தார் கருதினால், அவர்கள் அவ்வாறே ஆணை பிறப்பிக்கலாம்:

ஆனால், யாதொரு கட்சியார் சொல்லிக் கொள்ளவேண்டியவற்றைச் சொல்லிக்கொள்வதற்காக நியாயமான வாய்ப்பு அளித்திருந்தாலொழிய, அக் கட்சிக்குப் பிரதிகூலமான ஆணை எதையும் அரசினர் பிறப்பிக்கக்கூடாது.

(2) அது விஷயமாய், (1) உட்பிரிவின் படித் தங்களுக்குள்ள அதிகாரங்களைச் செலுத்துவதற்குட்பட்டு, அத் தீர்மானம் அல்லது ஆணை நிறைவேற்றுவதை அரசாங்கத்தார் தடை செய்யலாம்.

16. *சபையின் மேற்பார்வையும் கட்டுப்பாடும்:*—மேற்படி சபை, இச் சட்டத்தின் ஷரத்துகளுக்குட்பட்டு, சபையின் அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரின் செயல்கள், நடவடிக்கைகளை மேற்பார்வையிட்டுக் கட்டுப்பாடு செய்யவேண்டும்.

17. *துணை விதிகள் செய்ய அதிகாரம்.*—நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, சபை இச் சட்டத்துக்கு அல்லது அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளுக்கு முரண்படாத வகையில் அடியிற்கண்டவற்றுக்காக துணை விதிகள் செய்யலாம்:—

(a) சபையின் உறுப்பினர்களிடையே கடமைகளை வகுத்துக் கொடுத்தல்;

(b) சபையின் கூட்டங்கள் நடைமுறையும் அலுவல் நடத்தலும்;

(c) சபையின் அலுவலகத்தில் வைத்துவர வேண்டிய புத்தகங்கள், பதிவேடுகள், கணக்குகள்;

(d) சபைக்கு விண்ணப்பங்கள் செய்து கொள்ளவேண்டிய பாரமும் முறையும்;

(e) சபையின் அதிகாரிகளும் ஊழியர்களும் கட்டவேண்டிய யாதொரு ஈடு;

(f) பொதுவாய் இச் சட்டத்தின் ஷரத்துக்களின் கீழ் சபையின் சகல நடவடிக்கைகளையும் அலுவலையும் நடத்துவது.

18. *சட்டப்படி இணைந்த தேவஸ்வங்களை தேவஸ்வம் நிதியைக் கொண்டு பராமரித்தல்;*—மேற்படி சபை 19-வது பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட தேவஸ்வம் நிதியை உபயோகித்து, சட்டப்படி இணைந்த தேவஸ்வங்களைப் பராமரித்து வரவேண்டும்; கோவில்களையும் கட்டிடங்களையும் அவற்றைச் சேர்ந்தவைகளையும் நல்ல நிலையில் வைத்து வரவேண்டும்; தேவஸ்வங்களை மாமூலான வழக்கப்படி நிர்வகிக்கவேண்டும்; மாற்றலாகியுள்ள பகுதியிலிருக்கிற மற்ற தேவஸ்வங்களுக்கு நிதி உதவ வேண்டும்; வழக்கமான மதச் சடங்குகளுக்காகும் செலவை இந்த நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளவேண்டும், இந்து சமுதாயத்தாரின் கல்வி மேம்பாடு, சமூக கலாசார முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்காகவும் ஏற்பாடு செய்யலாம்.

19. *தேவஸ்வம் நிதி:*—சட்டப்படி இணைந்த தேவஸ்வங்களுக்காக நிறுவப்பட்ட தேவஸ்வம் நிதி அடியிற்கண்டவற்றைக் கொண்டதாயிருக்கும்:—

(i) சென்னை மாநிலத்திலுள்ள தேவஸ்வம் நிதிக்குக் கொடுக்கப்படத்தக்கதென இந்திய அரசிலமைப்பின் 290 (A) பிரிவில் சொல்லியுள்ள 13,50,000 ரூபாயும் 1956-ம் ஆண்டு மாநிலச் சீரமைப்புச் சட்டத்தின் (1956-ம் ஆண்டு 37-வது மத்தியச் சட்டம்) 112-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் சொல்லியுள்ள, மேற்படி தேவஸ்வம் நிதிக்கு மாற்றப்பட்டுள்ள தேவஸ்வம் உபரி நிதிப் பங்கும்;

(ii) மேற்படி தேவஸ்வங்களுக்குச் சொந்தமான அசையும் பொருள்களை அவ்வப்போது விற்பனை செய்வது மூலம் கிடைக்கும் தொகை;

(iii) வழிபாடு செய்பவர்கள் தாங்களாகவே கொடுத்த சகல உதவித் தொகைகளும் காணிக்கைகளும்;

(iv) மேற்படி தேவஸவங்களுக்குச் சொந்தமான நிதிகளை முதலீடு செய்ததிலிருந்து கிடைத்த லாபமும், வட்டியும்;

(v) மேற்படி தேவஸ்வங்களுக்குச் சொந்தமான மற்றெல்லா பணத்தொகைகளும் அவர்கள் பெற்றுக்கொண்ட மற்றெல்லா வருமானமும்.

20. *தேவஸ்வம் உபரி நிதியும் அதன் நிர்மாகமும்:*—19-வது பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட தேவஸ்வம் நிதியில் செலவிடப்படாது ஒவ்வொரு ஆண்டும் எஞ்சியுள்ள தொகை முழுவதும் அல்லது சபை நிர்ணயிக்கக்கூடிய அதன் யாதொரு பகுதி, ஆணையர் அங்கீகரித்தவாறு தேவஸ்வம் உபரி நிதியில் சேர்க்கப்படவேண்டும். தேவஸ்வம் உபரி நிதியை, ஆணையர் நெறிப்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் உட்பட்டு நிர்வகிக்க வேண்டும்.

21. *தேவஸ்வம் சொத்துக்கள்:*—ரெவின்யூ ரெக்கார்டுகளில் தேவஸ்வம் வகை அல்லது தேவஸ்வம் புறம்போக்கு எனப் பதிந்துள்ள அல்லது வகைப்படுத்தியுள்ள அசையாச் சொத்துக்களையும் 1922-ம் ஆங்கில ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் தேதிக்குச் சரியான 1097-ம் ஆண்டு மீனம் மாதம் 30ம் தேதிக்குப் பிறகு, சட்டப்படி இணைந்த தேவஸ்வங்களின் ஸ்வாதீனத்தில் அல்லது அனுபோகத்திலுள்ள மற்ற பண்டார வகை நிலங்களையும் தேவஸ்வம் சொத்துக்களெனக் கருதவேண்டும். 1951-ம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி நிலப்

பாதுகாப்புச் சட்டம் (திருவாங்கூர்—கொச்சி 1951ம் ஆண்டு 19-வது சட்டம்) அரசாங்க நிலங்களுக்குப் பயன்படுவதைப் போலவே தேவஸ்வம் நிலங்களுக்குப் பயன்படும்.

22. *காரண்மா சேவை விஷயமாய்ச் சபையின் கட்டுப்பாடு:*—(1) சகல காரண்மா சேவை வைத்து வருபவர்கள்மீதும் அவற்றைச் சேர்ந்த சகல சொத்துக்கள், திருப்புவாரங்கள், மற்ற ஊதியங்கள்மீதும் சபை முழுக் கட்டுப்பாடுடையதாகும்.

(2) தகுதியின்மை, அசட்டை அல்லது மற்ற காரணத்தால் யாதொரு காரண்மா சேவை கிரமமாக நடத்தப் பெறவில்லையென அல்லது காரண்மா சேவை அல்லது அதைச் சேர்ந்த சொத்து, திருப்புவாரம் அல்லது இதர ஊதியத்தை காரண்மா வைத்திருப்பவர் அல்லது அவருடைய குடும்பத்தினரில் ஒருவர் அல்லது பலர் பாரதீனம் செய்திருக்கிறாரெனக் கூறப்படுவதன்பேரில், சபை அக் குடும்பத் தலைவருக்கும் அடுத்த மூத்தவருக்கும் அறிவிப்புக் கொடுப்பது அவசியமென சபை கருதக்கூடிய அக் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் கிரமமான அறிவிப்புக் கொடுக்கவேண்டும் அவர்கள் செய்துகொண்ட ஆட்சேபனைகளைக் கேட்ட பிறகு காரண்மா சேவை அல்லது அதைச் சேர்ந்த சொத்து அல்லது திருப்புவாரம் அல்லது இதர ஊதியம் பாரதீனம் செய்யப்பட்டிருக்கிறதென அல்லது சேவை ஒழுங்காக அல்லது கிரமமாக நிறைவேற்றப்படவில்லையென சபை சந்தேகமறத் தெரிந்துகொண்டால், அச் சேவையைச் செய்ய அக் குடும்பத்துக்குள்ள காரண்மா உரிமையை சபை தாற்காலிகமாக நிறுத்திவைக்கலாம், விலக்கலாம், தள்ளுபடி செய்யலாம், ரத்து செய்யலாம் அல்லது மற்றப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

(3) குறித்த சேவைக்கு உரிய சேவை இனும் நிலங்களை பழைய வழக்கத்துக்கு விரோதமாகப் பராதீனம் செய்திருந்தாலும் இனிமேல் செய்தாலும் அது செல்லுபடியாகாது. அத்தகைய நிலங்கள் பராதீனம் செய்யப்பட்டாலும் அந்த நிலங்களை வைத்திருப்பவர் தமக்குரிய சேவையைச் செய்வதில் தவறினாலும் அச்சேவை இனும் நிலங்களை சபை மீண்டும் எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால், சபை தகுதியெனக் கருதினால் அந்த நிலங்கள் விஷயமாகவும் அவற்றைச் சேர்ந்த சேவைகள் விஷயமாகவும் தாம் விரும்பும் வண்ணம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

(4). (2) அல்லது (3) உட்பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட தீர்மானங்களினால் துன்பமடைந்ததாகக் கருதுகிற ஒருவர், எந்த நீதிமன்றத்தினர் அதிகார வரம்பில் அச் சொத்திருக்கிறதோ அந்த நீதிமன்றத்தினர் அச் சொத்து விஷயமாய்த் தாம் கோருகின்ற உரிமையை நிலைநாட்டுவதற்கான வழக்கொன்றை, அத் தீர்மானத் தேதியிலிருந்து ஓராண்டுக் கால அளவுக்குள் தொடரலாம்:

ஆனால், அவ்வாறு தொடரப்படும் வழக்கின் முடிவுக்குட்பட்டு (2) அல்லது (3) உட்பிரிவுகளின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முடிவானதாகும்.

23 *அதிகாரிகளைச் சபை நியமிக்க வேண்டுமென்பது:*—(1) ஆணையர் அவ்வப்போது நிர்ணயிக்கக்கூடிய எண்ணிக்கையுள்ள அதிகாரிகளையும் ஊழியர்களையும் சபை நியமிக்கலாம் :

ஆனால், அந்த அதிகாரிகள் அல்லது ஊழியர்கள் இந்துமதத்தைக் கடைபிடிக்கிறவர்களாய் இருக்கவேண்டும்.

(2) இச் சட்டத் தொடக்கத் தேதிக்கு அடுத்து முன் சட்டப்படி இணையாத, சட்டப்படி இணைந்த, தேவஸ்வங்கள் சம்பந்தமாய், சேவை செய்துவந்த அதிகாரிகளையும் ஊழியர்களையும் அவர்கள் தகுதியாயிருக்கக்கூடிய பதவியில் அவர்களைத் தாம் தகுதியெனக் கருதும் வகையில் சபை நியமிக்கலாம்:

ஆனால், அவ்வாறு நியமித்த அதிகாரி அல்லது ஊழியரின் விஷயத்தில் இச்சட்டத் தொடக்கத் தேதிக்கு அடுத்து முன் பயன்பட்டு வந்த ஊழிய நிபந்தனைகளை அரசாங்கத்தாரின் முன் அனுமதியின்றி பெற்றுக்கொண்டாலன்றி மற்றப்படி அவருக்கு பிரதிகூலமாக மாற்றப்படலாகாது.

(3) சபையின் அதிகாரிகளும் ஊழியர்களும் சபையின் மேற்பார்வைக்கும் நெறிப்படுத்தலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு கன்னியாகுமரி உதவி ஆணையரின்கீழ் பணியாற்றுவர்.

(4) கன்னியாகுமரி உதவி ஆணையர் சபையின் தலைமை நிர்வாக அதிகாரியாவார்.

(5) சபையின் அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் ஆகும் செலவு 19-வது பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட தேவஸ்வம் நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டும்.

24. *சட்டப்படி இணையாத தேவஸ்வங்கள்:*-சட்டப்படி இணையாத தேவஸ்வங்களின் சொத்துக்களும் நிதிகளும் இப்போது இருந்து வருவதைப் போலவே தனியாக வைத்து வரப்படவேண்டும். அந்தத் தேவஸ்வ காரியங்களுக்காக மட்டுமே அவற்றை உபயோகிக்கவேண்டும்.

25. *தேவஸ்வங்களை நிர்வகிப்பது:*—இச்சட்டத்தின் ஷரத்துக்களுக்கும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு, சட்டப்படி இணைந்த அல்லது சட்டப்படி இணையாத தேவஸ்வங்களின் சொத்துக்கள் விஷயத்தில் முன்னர் இருந்தவாறு சபை நிர்வகிப்பதுடன், ஒவ்வொரு கோயிலிலும் அதன் தன் பழக்கவழக்கப்படி அன்றாட பூஜைச் சடங்குகள் நடத்துவதற்கும், திருவிழாக்கள் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

26. *தணிக்கை:*—(1) சபை, தனது நிர்வாகத்தின் கீழுள்ள நிலையங்கள் விஷயமாய் சகல

வரவுகளையும் செலவுகளையும்பற்றிய கணக்குகளை வைத்து வரவேண்டும்.

(2) சபையின் கணக்குகளை அரசாங்கத்தார் நியமிக்கிற தணிக்கையாளர் ஆண்டுதோறும் தணிக்கை செய்யவேண்டும். தணிக்கை அறிக்கையை ஆணையர் மூலமாக அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

(3) ஒருங்குப் பிசகாகவாகிலும் சட்ட விரோதமாகவாகிலும் தகுதியற்ற விதத்திலாகிலும் செலவு செய்த சகல விஷயங்களையும் அல்லது சபைக்கோ அதன் நிர்வாகத்திலுள்ள நிலையங்களுக்கோ சேரவேண்டிய பணத் தொகையை அல்லது இதர சொத்தினை வசூலிக்கத் தவறிப்போன சகல விஷயங்களையும் சபையின் அல்லது அதன் யாதொரு உறுப்பினரின் அசட்டை அல்லது தவறான நடத்தை காரணமாக ஏற்பட்ட நஷ்டம், பண விரயம் அல்லது சொத்து நஷ்டம் ஏற்பட்டிருக்கும் சகல விஷயங்களையும் தணிக்கையாளர் தமது அறிக்கையில் குறிப்பிடவேண்டும்.

(4) கணக்குகள் விஷயமாய், நிர்ணயிக்கப் படக்கூடிய வேறு யாதொரு விஷயத்தைப்பற்றியும் அல்லது அவர் அறிக்கையிட வேண்டுமென அரசாங்கத்தார் உத்தரவிடுகின்ற சகல விஷயங்கள் பற்றியும் தணிக்கையாளர் அறிக்கையிடவேண்டும்.

(5) ஒவ்வொரு தணிக்கை அறிக்கையின் நகல் ஒன்றை அரசாங்கத்தார் சபைக்கு அனுப்ப வேண்டும். தணிக்கையாளர் சுட்டிக்காட்டிய குறைகளை அல்லது கிரமப் பிசகுகளை ஒழுங்கு படுத்தி அதைக் குறித்து அரசாங்கத்தாருக்கு அறிக்கையிடுவது சபையின் கடமையாகும்.

(6) தணிக்கையாளரின் அறிக்கையை ஆலோசித்துப் பார்த்ததிலோ அல்லது மற்றப் படியோ சபை அல்லது அதன் உறுப்பினர் ஒருவர் அந்த நிலையத்தின் நிதியைத் தவறாக உபயோகித்துள்ள அல்லது வேண்டுமென்றே விரயம் செய்துள்ள அல்லது சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள நிலையத்துக்கு நஷ்டமேற்படும் வகையில் பெருத்த அசட்டையாயிருந்துள்ள குற்றத்தைச் செய்திருக்கிறாரென அரசாங்கத்தார் கருதினால், சபைக்கு அல்லது உறுப்பினருக்கு விரோதமாக அதிகக் கட்டண ஆணை ஏன் பிறப்பிக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு சபைக்கு அல்லது உறுப்பினருக்கு அறிவிப்பு கொடுத்த பிறகும் அது அல்லது அவர் கூறும் சமாதானத்தைக் கேட்ட பிறகு அரசாங்கத்தார், சந்தர்ப்பத்துக்கேற்ப, சபைமீது, உறுப்பினர்மீது அதிகக் கட்டண ஆணை பிறப்பிக்கலாம்.

(7) சபையில் உறுப்பினர் அல்லது உறுப்பினர்களுக்கு விரோதமாகப் பிறப்பிக்கப்பட்ட அதிகக் கட்டண ஆணை அக் கட்டணத் தொகைக்குரிய டிக்ரி ஒன்றை நிறைவேற்ற அதிகாரமுள்ள நீதிமன்றத்தார் அவருக்கு அல்லது அவர்களுக்கு விரோதமாக அந்த நீதிமன்றம் பிறப்பித்த டிக்ரியாயிருந்தாற்போலவே நிறைவேற்றப்படலாம்.

(8) இப் பிரிவின்படிப் பிறப்பிக்கப்பட்ட அதிகக் கட்டண ஆணையொன்று, அந்த ஆணையினால் முடிவாக விவகரிக்கப்படுகிற விஷயமாக அன்றி மற்றப்படி அச்சபை அல்லது உரிய உறுப்பினர் அல்லது உறுப்பினர்களுக்குக் கணக்குக் காட்டவேண்டுமென வழக்குத் தொடருவதற்குத் தடையாகயிராது.

(9) இத் தணிக்கை அறிக்கையின் நகல் ஒன்று வேண்டுமெனக் கிரமமாக விண்ணப்பம் செய்துகொள்பவருக்கு அது வழங்கப்படும்.

27. *வரவு செலவுத் திட்டமும் நிர்வாக அறிக்கையும்:*—(1) சபை ஒவ்வொரு ஆண்டிலும் டிசம்பர் மாத முடிவுக்குள் அடுத்த ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டம் ஒன்றை ஆணையருக்குச் சமர்ப்பிக்கவேண்டும். தற்காலத்தில் அமுலிலுள்ள திட்டத்துக்கு அல்லது செலவு அளவுக்கு வரவு—செலவுத் திட்டத்தில் வகை செய்திருக்க வேண்டும். ஆணையர் வரவு—செலவுத் திட்டத்தில் தாம் தகுதியெனக் கருதுகிற மாறுதல்களையும் நீக்கங்களையும் சேர்க்கைகளையும் சேர்த்த பிறகு வரவு—செலவுத் திட்டத்துக்கு அனுமதி தரவேண்டும். ஆணையரின்முன் அனுமதியின்றி, வரவு—செலவுத் திட்ட அனுமதித் தொகைக்குமேல் செலவு செய்யக்கூடாது. ஒவ்வொரு நிதி ஆண்டின் தொடக்கத்திலிருந்து இரண்டு மாதங்களுக்குள் திருவாங்கூர் அதிபதி கட்டளையிடக்கூடிய எண்ணிக்கையுள்ள வரவு—செலவுத் திட்டப் பிரதிகளை சபை அந்த அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

(2) ஒவ்வோர் ஆண்டிலும் சபையின் நடவடிக்கை பற்றிய ஆண்டு நிர்வாக அறிக்கை ஒன்றை சபை தயாரிக்கவேண்டும். அடுத்த நிதி ஆண்டுத் தொடக்கத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் அதை ஆணையர் மூலமாக அரசாங்கத்துக்கும் திருவாங்கூர் அதிபதிக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

28. *நிதிகளை டிபாசிட் செய்வதும் முதலீடு செய்வதும்:*—இச் சட்டத்தின் இதர ஷரத்துக்களுக்குட்பட்டு, மேற்படி சட்டப்படி இணைந்த, சட்டப்படி இணையாத தேவஸ்வங்களின் நிதிகளை அடியிற் கண்டவற்றில் முதலீடு செய்யலாம் அல்லது டிபாசிட் செய்யலாம் :—

(a) 1934-ம் ஆண்டு இந்திய ரிசர்வ் பாங்க் சட்டத்தில் (1934-ம் ஆண்டு 2-வது மத்தியச் சட்டம்) வரையறுக்கப்பட்டுள்ள ஷெட்யூல்ட் பாங்க் ஒன்றில் அல்லது யாதொரு மாநிலக் கஜானாவில்; அல்லது

(b) மாநில அரசாங்கத்தின் அல்லது இந்திய அரசாங்கத்தின் ப்ராமிசரி பத்திரங்கள், கடன் பத்திரங்கள், ஸ்டாக்குகள், இதர ஈடுகள் ஆகியவற்றின்; அல்லது

(c) கம்பெனி ஸ்டாக்குகளில் அல்லது கடன் பத்திரங்களில் அல்லது பங்குகளில்; இதற்

குரிய வட்டி கொடுப்பதற்கு இந்த அரசாங்கத்தார் அல்லது இந்திய அரசினர் உறுதியளித்திருக்கிருர்கள், அல்லது

(d) அசையாச் சொத்தில்.

29. *விதிகள் செய்ய அதிகாரம்:*—(1) இச் சட்டத்தின் காரியங்கள் அனைத்தையும் அல்லது எக் காரியத்தையாகிலும் நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்தார் விளம்பரம் வெளியிட்டு விதிகள் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், முந்திய அதிகாரத்தின் பொதுத் தன்மைக்கு பாதகமின்றியும் அவ்விதிகளில் அடியிற்கண்டவற்றிற்காக ஏற்பாடு செய்திருக்கலாம்:—

(a) நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று இந்தச் சட்டத்தில் வெளிப்படையாய்ச் சொல்லியிருக்கிற அல்லது அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற சகல விஷயங்களும்.

(b) சட்டப்படி இணைந்த, சட்டப்படி இணையாத தேவஸ்வங்களின் செலவு அளவை ஒழுங்குபடுத்துவது;

(c) சட்டப்படி இணைந்த, சட்டப்படி இணையாத தேவஸ்வங்களின் கணக்குகளை வைத்து வருவதையும் தணிக்கையிடுவதையும் ஒழுங்குபடுத்துவது;

(d) மேற்படி சபை ஆணையர் மூலமாக அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கிற வரவு-செலவுத் திட்டங்கள், அறிக்கைகள், கணக்குகள், விவரக் கணக்குகள் அல்லது மற்ற தகவல்கள்;

(e) மேற்படி சபையின் அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியவர்களைத் தேர்ந்தெடுக்கும் விதம், அவர்களுடைய தகுதிகள், அவர்களுக்குச் சம்பளம் படி கொடுத்தல், அவர்களுடைய ஒழுங்குமுறை, நடத்தை, பொதுவாக அவர்களுடைய ஊழிய நிபந்தனைகள்;

(f) மேற்படி சபையின் அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் வருங்கால வைப்பு நிதி ஏற்படுத்துவதும் ஓய்வுக்கால ஊதியம் கொடுப்பதும்;

(g) சபையின் உறுப்பினர்களுக்குப் பயணப் படியையும் தங்கி யிருப்பதற்குரிய படியையும் கொடுப்பது;

(h) இச் சட்டத்தின் காரியங்களுக்காக ஒருவர் இந்து மதத்தைக் கடைப்பிடிக்கிருர் ரென்பதைக் காண்பிக்கும் முறை.

(3) இச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட சகல விதிகளும், அவை செய்யப்பட்டான பிறகு கூடிய விரைவில் சட்டப் பேரவையின் இரு சபைகளின் முன்பும் வைக்கவேண்டும். மேலும் அவை, சட்டப் பேரவை அதே கூட்டத் தொடரிலாவது அடுத்த கூட்டத் தொடரிலாவது திருத்தம் அல்லது ரத்து மூலமாகச் செய்யக்கூடிய மாறுதல்களுக்கு உட்பட்டவையாகும்.

30. *நகல்கள் முதலியற்றை அரசாங்க அதிகாரிகள் வழங்குவது:*—சட்டப்படி இணைந்த, சட்டப்படி இணையாத தேவஸ்வங்களுக்குச் சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் அசையும் அல்லது அசையாச் சொத்துக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு ரெக்கார்டு, பதிவேடு, அறிக்கை, அல்லது இதர தஸ்தவேஜைத் தம் வசம் வைத்திருக்கிற அரசாங்க அதிகாரிகள் அனைவரும் ஆணையர், உதவி ஆணையர் அல்லது சபை அல்லது இது விஷயமாய் சபை அதிகாரமளித்துள்ள அதன் அதிகாரி அல்லது ஊழியர் கேட்கக்கூடியபடி அவற்றையோ அவற்றின் நகல்களையோ அவற்றிலிருந்து எடுக்கப்பட்ட பாகங்களையோ கொடுக்கவேண்டும்.

31. *நகல்கள் கொடுப்பது.*—ஆணையர் நிர்ணயிக்கக்கூடிய கட்டணம் செலுத்துவதன் பேரிலும் அவர் நிர்ணயிக்கக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டும், நடவடிக்கைகளின் அல்லது இதர ரெக்கார்டுகளின் நகல்களைச் சபையின் தலைவர் கொடுக்கலாம்.

32. *விலக்கு:*—இச் சட்டத்தில் கண்டுள்ளதெதுவும் III-வது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ளவையும், வழக்கத்தால், நீடித்த பழக்கத்தால் அல்லது மற்றப்படி திருவாங்கூர் அதிபர் உரிமையுள்ளவராயிருக்கிற உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பாதிக்காது, அந்த உரிமைகளிலும் சிறப்புரிமைகளிலும் தலையிடுவதை அனுமதிக்கவும் செய்யாது.

33. *சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்துவது.*—சட்டப்படி இணைந்த அல்லது சட்டப்படி இணையாத தேவஸ்வத்தின் சார்பில் அல்லது அதற்கு எதிராக எடுக்கப்பட யாதொரு சட்ட நடவடிக்கை மேற்படி சபையினுல் அல்லது அதற்கு எதிராக தொடர்ந்து நடத்தப் பெறலாம். நீதிமன்ற டிகிரி அல்லது ஆணையின்கீழ் செலவு உள்பட சட்டப்படி இணைந்த அல்லது சட்டப்படி இணையாத தேவஸ்வத்தின் சார்பில் தரப்பட்ட தொகை சபையால் வசூலிக்கப்படத்தக்கதாகும்.

34. *வழக்குகள்.*—வழக்கெந்த காரணம், கோரும் பரிகாரம், உத்தேச வாதியின் பெயர், இருப்பிடம் ஆகியவை எழுதியுள்ள அறிவிப்பு ஒன்றை சபை அலுவலகத்தில் சேர்ப்பித்தபின் அல்லது ஒட்டியபின் இரண்டு மாதம் கழிவடைந்தாலொழிய சபைக்கு விரோதமாக வழக்கு எதையும் தொடரக்கூடாது. அந்த அறிவிப்பைச் சேர்த்தது அல்லது ஒட்டியது பற்றிய தகவல் அந்தப் பிராதில் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

35. *செலவுகளை தேவஸ்வம் நிதியிலிருந்து கொடுப்பது.*—சட்டப்படி இணையாத தேவஸ்வம் பற்றிய, சபை கட்சிக்காரராக உள்ள சட்ட நடவடிக்கை சம்பந்தமாகச் செய்யப்பட்ட சகலசெலவுகளும், சந்தர்ப்பத்திற்கேற்ப, தேவஸ்வ நிதியிலிருந்து

அல்லது சட்டப்படி இணையாத உரிய தேவஸ்வ நிதியிலிருந்து கொடுக்கப்பட தக்கதாகும்.

36. I-வது ஷெட்யூலைத் திருத்துவதற்காக, மாற்றுவதற்காக அல்லது அதனுடன் சேர்ப்பதற்காக உள்ள அதிகாரம்.—அரசாங்கத்தார் அவ்வப்போது விளம்பரம் வெளியிட்டு I-வது ஷெட்யூலைத் திருத்தலாம், மாற்றலாம் அல்லது அதனுடன் எதையாகிலும் சேர்க்கலாம்.

37. சபையின் உறுப்பினர்கள் முதலியவர்கள் அரசாங்க அதிகாரிகளாகக் கருதப்படுவது — சபையின் உறுப்பினர்கள், சபையின் அதிகாரிகள் ஊழியர்கள், 26-வது பிரிவின் (2) உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தணிக்கையாளர் ஆகியவர்கள் இந்தியத் தண்டனைச் சட்டத்தைச் சேர்ந்த 21-வது பிரிவின் அர்த்தப்படி அரசாங்க அதிகாரிகளாகக் கருதப்படவேண்டும்.

38. ரத்து.—(1) 1950-ம் ஆண்டு திருவாங்கூர்-கொச்சி இந்து சமய நிலையச் சட்டம் (திருவாங்கூர்-கொச்சி 1950-ம் ஆண்டு 15-வது சட்டம்) இதனால் ரத்து செய்யப்படுகிறது.

(2) அச் சட்டம் ரத்து செய்யப்பட்ட போதிலும், அச் சட்டத்தினால் அல்லது அச்சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட விதிகள், பிறப்பிக்கப்பட்ட ஆணைகள், எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது செய்யப்பட்ட காரியங்கள் அனைத்தும் அல்லது செய்யப்பட்டதாக பிறப்பிக்கப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருதப்படும் விதிகள், ஆணைகள், நடவடிக்கை, காரியங்கள் அனைத்தும் இச் சட்டத்துக்கு முரண்படாதிருக்கும் வரையில், இச் சட்டத்தினால் அல்லது இச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்டிருப்பதாக பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவதுடன் அவ்வாறே செல்திறன் உள்ளவையுமாகும்.

## ஷெட்யூல் I

[2 (iv) பிரிவை பார்க்கவும்.]

### சட்டப்படி இணைக்கப்பட்ட தேவஸ்வம்கள்

பூதப்பாண்டி தொகுதி, தோவளை வட்டம்

| தேவஸ்வத்தின் இலக்கமும் பெயரும். (1) | பெரியது சிறியது அல்லது மிகச் சிறியது. (2) |
|---|---|
| 1 பூதப்பாண்டி ... | பெரியது. |
| 2 அழகியநம்பி ... | ,, |
| 3 திருவெங்கடப்பர் ... | ,, |
| 4 திருப்பதீசரம் ... | ,, |
| 5 தாழைக்குடி ... | ,, |
| 6 தோவளை ... | ,, |
| 7 அருவமொழி ... | ,, |
| 8 தரிசனம் கோப்பு ... | ,, |
| 9 சிரமோதம் ... | சிறியது. |
| 10 பூதப்பாண்டி பெருமாள் ... | ,, |
| 11 ஹரிஹர விநாயகர் ... | ,, |
| 12 ஆத்தங்கரைக் கிருஷ்ணசாமி ... | ,, |
| 13 மடவிளாகம் ... | ,, |
| 14 ஜடாயுதம் ... | ,, |
| 15 பகவதி கொட்டாரம் ... | ,, |
| 16 காடுக்கரை ... | ,, |
| 17 எம்பெருமான் ... | ,, |
| 18 மூலையநல்லூர் ... | ,, |

பூதப்பாண்டி தொகுதி, தோவளை வட்டம்—

| தேவஸ்வத்தின் இலக்கமும் பெயரும். (1) | பெரியது சிறியது அல்லது மிகச் சிறியது. (2) |
|---|---|
| தொடர்ச்சி. | |
| 19 சகலகலா மார்த்தாண்டப் பிள்ளையார். | சிறியது. |
| 20 அருமா நல்லூர் ... | ,, |
| 21 ஆந்திரபுரம் ... | ,, |
| 22 உமை ஈஸ்வரமுடைய நாயனார். | ,, |
| 23 கோடீசுவரமுடைய நாயனார் ... | ,, |
| 24 அழகியமன்னார் ... | ,, |
| 25 தேன்பாறை விநாயகர் ... | ,, |
| 26 திருவையாறு ... | ,, |
| 27 எசந்தி மங்கலம் பெருமாள் ... | ,, |
| 28 நாவல்காடு எழுப்பாவுதய சுந்தன் சாஸ்தா. | ,, |
| 29 உதயமார்த்தாண்டேசுவரர் ... | ,, |
| 30 இரவி விநாயகர் ... | ,, |
| 31 காருமனி கந்தன் சாஸ்தா ... | மிகச்சிறியது. |
| 32 கொழுந்தாடி கந்தன் சாஸ்தா. | ,, |
| 33 மீளாகுளத்துக் கந்தன் சாஸ்தா. | ,, |
| 34 ஆரியன்காவு கந்தன் சாஸ்தா ... | ,, |

(தொடரும்)

# தாயுமானவர் பாடல்

ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனு
ளசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை
யாதிநூலையும் வகுத்துச்
சைவமுத லாமளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்தமோன
சமரசம் வகுத்தநீ யுன்னைநா னணுகவுந்
தண்ணருள் வகுக்கவிலையோ
பொய்வளரு நெஞ்சினர்கள் காணுத காட்சியே
பொய்யிலா மெய்யரறிவிற்
போதபரி பூரண வகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்ற பொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணமூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

[ஐந்து வகையான பூதபௌதிகாதிப் பிரபஞ்சங்களைப் படைத்து, அசையும் பொருள் அசையாப் பொருள்களை உண்டுபண்ணி, அவைகட்குத்தக்க அறிவையும் கொடுத்து, வேதாகம சாத்திரங்களை ஏற்படுத்தி, சைவமுதலிய அளவிலா சமயங்களையும் கற்பித்து, சமயங்களுக்கு அதீதமாயுள்ள மோனசமரச நிலையையும் வகுத்துள்ள நீ, உன்னை நான் அடையத்தக்க தண்ணருள் புரியாததென்னையோ! பொய் மனமுடையார் காணமுடியாத காட்சிப்பொருளே! மெய்யினர் அறிவில் ஞானகார அகண்டித வடிவாய்ப் போதலும் வருதலும் இல்லாத புண்ணியப் பொருளே! வேதத்தினுச்சிப் பொருளாம் ஓம் எனும் பிரணவத்தின் வடிவானவனே! சித்தாந்த உண்மை முத்திக்கு வித்தான முதல்வனே! திரிசிரகிரியில் எழுந்தருளியுள்ள தென்முகக் கடவுளே! ஞானமயானந்த தேசிகனே!]

## அடியவர் திருநட்சத்திரங்கள்

பிலவ—ஆடி


**சைவம்**

5உ—பெருமிழலைக்குறும்ப நாயனர்
6உ—சுந்தரமூர்த்தி சுவாமிகள்
,, —சேரமான் பெருமாள் நாயனர்
9உ—கலிய நாயனர்
,, —கோட்புலி நாயனர்
21உ—மூர்த்தி நாயனர்
,, —புகழ்ச்சோழ நாயனர்
24உ—கூற்றுவ நாயனர்

**வைணவம்**

29உ—ஸ்ரீ ஆண்டாள்

Vol 3 No. 10 THIRUKOIL Regd. No. M. 7039



மதுரை கூடலழகர் கோயில்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-6.
Printed at Paari Achakam, 127 Broadway, Madras-1